# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 06 கார்த்திகை 16ஆம் நாள் சனிக்கிழமை 02 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048




# ஒகி உக்கிரம்

# 11 பேர் சாவு; ஐவர் மாயம் 61,000 பேர் கடும் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 2

தென்னிலங்கையைக் கலங்கடித்த 'ஒகி' புயலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. 52 பேர் காயமடைந்தனர். 5 பேர் காணாமற் போயுள்ளனர்.

இலங்கையின் தென்கடல் வழியாக கடந்துசென்ற 'ஒகி'ப்புயலால் கொழும்பு உட்பட 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம், மண் சரிவு, கடும் காற்று என்பவற்றால் 18 ஆயிரத்து 752 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 125 பேர் பாதிக்கப்பட்டனர். 481 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தன. 15 ஆயிரத்து 780 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் நிலைகொண்ட தாழமுக்கம் காரணமாக கடந்த புதன்கிழமை இரவு தென் பகுதியில் கடுங்காற்றுடன் மழைபெய்தது. தாழமுக்கம் புயலாக மாறியதால் பெரிய இழப்புகள் ஏற்பட்டன.

இந்தத் தாழமுக்கம் நேற்று முன்தினம் அரபிக் கடலை நோக்கி நகர்ந்தது. இதன் தாக்கத்தால் தமிழகத்திலும் உயிர், உடைமை இழப்புகள் ஏற்பட்டன.

நாட்டில் 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்

>> 25

## வாள்வெட்டுக்குழு சந்தேகநபர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ.2

வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவர் எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழுவின் முக்கிய செயற்பாட்டாளர்கள் என்று கூறப்படும் மூவர் கொழும்பு, பியகமவில் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் வவுனியா, பரந்தனில் வைத்து மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வாள்கள், கோடரிகள், கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன என்று

>> 25

## முச்சந்தி முரளி



பாவம்
ஐயா ரொம்பவே
குழம்பிட்டார்
போல...

## தனிநாட்டுக் கோரிக்கையை சுமப்பதில் பயனேதுமில்லை

### விக்கி குத்துக்கரணம்

யாழ்ப்பாணம், டிசெ.2

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டவுடன் தனிநாட்டுக் கோரிக்கையும் அத்துடன் மௌனிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த எண்ணத்தைச் சிலர் இன்னமும் தம் உள்ளங்களில் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். அதனால் நாட்டு மக்களிடையே சுமுக உறவு ஏற்பட முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி. விக்னேஸ்வரன்.

வடக்கு முதலமைச்சர் நேற்று அனுப்பியுள்ள கேள்வி பதில் வடிவிலான ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"எம்து மக்கள் தனிநாடு கோருவதையும், அதற்காக உணர்ச்சி மேலிட உரத்துக் கத்துவதையும் இனி நிறுத்த வேண்டும். அப்படியான கருத்

>> 25

## வடக்கு - கிழக்குக்கான ஆபத்து வங்கக் கடலில்

யாழ்ப்பாணம், டிசெ.2

வடக்கு கிழக்கு உட்பட இலங்கையின் பெரும்பகுதியைத் தாக்கக் கூடிய புயல் வங்கக் கடலில் வலுப் பெறுகின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் புயல் தொடர்பாக எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின்னரே உறுதி

>> 25




## இடைக்கால அறிக்கை மீது இன்று விவாதம் நடக்காது

கொழும்பு, டிசெ.2

அரசமைப்பு நிர்ணய சபையில் (நாடாளுமன்றில்) இடைக்கால அறிக்கை மீதான விவாதம் இன்று நடக்காது என்று அறிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக அமைக்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அரசமைப்பு நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை மீதான விவாதம் ஒக்ரோபர் மாதம் 30ஆம், 31ஆம் திகதிகளிலும் நவம்பர் 1ஆம் திகதியும் அரசமைப்பு நிர்ணய சபையில் நடைபெற்றது. விவாதத்துக்கு மேலதிக நாள்கள் தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டதால் இரு நாள்கள் விவாதம் நீடிக்கப்பட்டது.

வழிநடத்தல் குழு

>> 25

## வடக்கு - கிழக்கு சேராவிடில் பறங்கியர் நிலை தமிழருக்கு

### வடக்கு முதலமைச்சர் ஆருடம்

யாழ்ப்பாணம், டிசெ.2

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாவிட்டால் நாட்டில் பறங்கியர்களுக்கு ஏற்பட்ட நிலைமையே எமக்கும் ஏற்படும். வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாத தீர்வு தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும். பௌத்த சிங்கள மக்களின் கை ஓங்கும்.

இவ்வாறு வடக்கு மகாாண சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண

>> 25

## திடீரெனப் பரவிய தீயால் வவுனியாவில் கடை நாசம்

### பலகோடி ரூபா பெறுமதியான பொருள்களும் கருகின



வவுனியா, டிசெ.2

கட்டடப் பொருள் விற்பனை நிலையம் ஒன்று நேற்றுத் தீப்பற்றி எரிந்தது. அதில் பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து வவுனியா மன்னார் வீதியில் வேப்பம்குளத்தில் நடந்தது.

>> 25

## பொதுச்சின்னத்துக்கு முயற்சித்த க.குமார் - சுரேஸுக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.2

உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு பொதுச் சின்னம் கோரிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிகள் ஏமாற்றமடைந்தன.

தேர்தல் ஆணைக்குழு பொதுச் சின்னத்தை வழங்க மறுத்துவிட்டது என்று அறிய முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எப், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடத் தீர்மானித்தன.

இரண்டு கட்சிகளும் இணைந்து பொது முன்னணியாகத் தேர்தலில்

>> 25

## கூட்டமைப்பின் பங்காளிகள் தேர்தலுக்காகக் கூடுகின்றனர்

### ஆசனப் பங்கீடு தொடர்பில் ஆராய

யாழ்ப்பாணம், டிசெ.2

உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுத்தாக்கல் இந்த மாதம் நடைபெறவுள்ளது. ஆசனப் பங்கீடு தொடர்பான விடயங்களை ஆராய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நாளை யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளன.

>> 25

## ஜனநாயகப் போராளிகளும் கூட்டமைப்புடன் இணைவர்

### உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலும் தயார்

யாழ்ப்பாணம், டிசெ.2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதற்கு தமது வேட்பாளர் பட்டியலை ஜனநாயகப் போராளிகள் கட்சி ஒப்படைத்துள்ளது.

>> 25

# அம்பாந்தோட்டைத் துறைமுக ஊழியர்களின் தொழிலைப் பாதுகாப்பது அரசின் கடமை

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.2
அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்களின் தொழிலைப் பாதுகாப்பது அரசின் கடமை இவ்வாறு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று அமைச்சர் தனது 54ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

நேற்று தலதாமாளிகைக்குச் சென்ற அமைச்சர் அங்கு, வழிபாட்டில் ஈடுபட்டார். அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் தலைமை பிக்குகளை சந்தித்து ஆசிகளை பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்களின் தொழில் பாதுகாப்புத் தெடர்பாக நான் தனிப்பட்ட முறையில் சீன நிறுவனத்துடன் பேசியுள்ளேன்.

நான் ஒருவரை கூட தொழிலில் இருந்து நீக்க வேண்டாம் என்றேன். ஆனால் தற்போது அந்த அமைச்சு எனக்குரியதல்ல. ஆனால் இன்று நான் எனது கருத்தில் உறுதியாக இருக்கின்றேன். அம்பாந்தோட்டைத் துறைமுக ஊழியர்களின் தொழிலுக்கு ஆபத்து ஏற்படுமாயின் நான் அரசில் இருந்தவாறே அதற்கு எதிரான நடவடிக்கையை எடுப்பேன் -என்றார்.

கட்சித் தலைவர்கள் எந்த தீர்மானங்களையும் எடுக்கலாம் ஆனால் மக்கள் கொடுத்த தேர்தல் ஆணைக்கு எதிராக அது இருக்கக் கூடாது. இந்த நாட்டு மக்கள் அதிகாரத்தை இந்த இரண்டு தலைவர்களுக்கும் கொடுத்தமை ஒன்றாக செல்லவே.

ஆனால் இதை மாற்ற நினைப்பது மக்கள் கொடுத்த ஆணைக்கு ஒரு பலத்த அடி. இது பற்றி அவர்களே முடிவெடுக்க வேண்டும். நான் அரச தலைவருக்கோ, தலைமை அமைச்சருக்கோ அரசியல் சொல்லித்தர வேண்டியதில்லை. ஆனால் மக்கள் இருவரையும் விரும்பியமை ஒன்றாக நாட்டை ஆட்சிசெய்யவே. இல்லாவிட்டால் ஒரு கட்சிக்கு மட்டுமே மக்கள் அதிகாரத்தை கொடுத் திருப்பார்கள். இரண்டு கட்சிகளுக்குமே அதிகாரத்தை கொடுத்தமை சேர்ந்து நாட்டை அபிவிருத்தி செய்யவே. இதனையே சோபித தேரரும் விரும்பினார். இதை நாங்கள் முன்னெடுத்துச் செல்லவேண்டும். காரணம் இதனால் நாங்கள் அதிக பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளோம் - என்றார். (ரி2,31)



## பயனாளிகளுக்கு உதவிப் பொருள்கள் கையளிப்பு

சாவகச்சேரி,டிசெ.2
தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவிப் பொருள்கள் பிரதேச செயலகத்தில் நேற்று வழங்கப்பட்டன.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்கு மான அலுவலகம் மற்றும் புனர்வாழ்வு மீள் குடியமர்வு அமைச்சின் ஏற்பாட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

வாழ்வாதார உதவித் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 91 பேருக்கு 16 மில்லியன் பெறுமதியான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் .மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் பயனாளிகளுக்கு பொருள்களை வழங்கினார். படகின் வெளியிணைப்பு இயந்திரம், பாக்கு வெட்டும் இயந்திரம், 2 கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு தையல் இயந்திரங்கள், மென்பானம் அடைக்கும் இயந்திரங்கள் மற்றும் விவசாய பொருள்கள் என்பன வழங்கப்பட்டன. (ரி2,9)



## தேங்காய் பிடுங்க மரமேறியவர் வீழ்ந்து காயம்

சாவகச்சேரி,டிசெ.2
மழையில் நனைந்திருந்த தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறிய குடும்பத்தலைவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் தவசிக்குளத்தில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் ஜெயசீலன் வயது (36) என்பவரே காயமடைந்துள்ளார்.

அவருக்கு இடுப்புப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ரி2,9)

## பரிசளிப்பு விழாவும் ஒளிவிழா நிகழ்வும்

ஏழாலை,டிசெ.2
ஏழாலை பாரதி முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், ஒளி விழா நிகழ்வும், நேற்றுக் காலை முன்பள்ளி முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், விருந்தினர்களால் அவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். அமெரிக்கமிஷன் திருச்சபையின் மைனசீலன் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

முன்பள்ளிச்சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-ரி2)



## சாவகச்சேரியில் பண்பாட்டுப் பெருவிழா

சாவகச்சேரி,டிசெ.2
வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் 2017 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.

தென்மராட்சி பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் மூத்த கலைஞர்களுக்கான பிரதேசத்தின் உயர் விருதான 'கலைசாகரம்' விருதுகள் மற்றும் தேசிய ரீதியில் கலைத்துறையில் விருதுகள் பெற்ற இரு இளங் கலைஞர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பிரதேச கலைமன்றங்களின் மாணவிகளின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் பிரதேச செயலக அலுவலர்களின் கவியரங்கும் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்தினம் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி மற்றும் ஓய்வுநிலை ஆசிரியரும் எழுத்தாளருமான ச.மார்க்கண்டு, பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2,9,131)

## ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

### அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.2
உழைக்கும் மக்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட பெரும் நிதியமான ஊழியர் சேமலாப நிதியத்தை பலப்படுத்துவதற்கு புதிதாக நியமனம் பெற்ற தொழில் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்துக்குப் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ள 191 தொழில் உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வுநேற்று கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

85 இலட்சம் அளவிலான அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்களுள் சுமார் 26 இலட்சம் பேர் மாத்திரமே தற்போது ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்பு வழங்குகின்றனர்.

கட்டாயமாக பங்களிப்பு வழங்க வேண்டிய மேலும் 10 இலட்சம் பேர் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரையும் பங்களிப்பு வழங்கச் செய்வதற்காக புதியதாக நியமனம் பெற்றவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

உரிய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்கப் பெறாதவர்களின் எதிர்ப்புத் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

இது தொடர்பில் ஏதேனும் வகையில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பின் அது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு தவறைச் சீர்செய்து அவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு உரிமைகளையும் வரப்பிரசாதங்களையும் உரியவாறு வழங்கி உத்தியோகத்தர்கள் சிறந்த சேவையை வழங்கக்கூடிய பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நியமனக் கடிதம் வழங்கல் அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபி.டீ.ஜே. செனெவிரத்ன, அமைச்சின் செயலாளர் எஸ்.ஏ.என். சரணதிஸ்ஸ, தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். என்று ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)

# எயிட்ஸ் விழிப்புணர்வு நடைபவனி வவுனியாவில்



வவுனியா,டிசெ.2
உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வாகன விழிப்புணர்வு நடைபவனி நேற்று வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனைக்கு முன்பாக நடைபெற்றது.
வவுனியா மாவட்ட பாலியல் நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கு.சந்திரகுமாரின் தலைமையில் வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நடைபவனியில் வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
நடைபவனி மன்னார் வீதியூடாக ஆரம்பமாகி வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையை வந்தடைந்தது.
(ற-ரி4)



## வாகன விபத்தில் நபர் சாவு

கொழும்பு.டிசெ.2
தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். அரச பேருந்தும் உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்ததனால் இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்து தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு

கொழும்பு. டிசெ.2
புசல்லாவ ரொத்சைல்ட் தோட்டம் ஓ.ஆர்.சி பிரிவில் தொடர் மழை காரணமாக மின்சார விநியோக கம்பி அறுந்து விழ்ந்ததில் சிக்குண்டு நேற்று இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
28 வயதுடைய எஸ். அருனசாந்த என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தொடர்ந்து மலையகத்தில் காணப்படும் சீரற்ற காலநிலை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களைப் புசல்லாவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## வருடாந்த பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு, டிச.2
காரைதீவு இ.கி.ச பெண்கள் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரியின் தலைவர் திரு.எஸ்.மணிமாறன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வுக்கு அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் அப்ச ல் ஜலீல் கலந்து கொண்டனர்.
தேசிய,மாகாண வலய,கோட்ட மட்டங்களில் சாதனை படைத்த மாணவ ர்கள் கௌரவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன

## காணாமற் போன மீனவர்கள் நேற்றுச் சடலங்களாக மீட்பு

கொழும்பு, டிசெ.2
நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் காணாமல் போயிருந்த மூன்று மீனவர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.
தொடங்கொடப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவரும் கடந்த 29 ஆம் திகதி இரவு மீன்பிடிக்க கடலுக்கு சென்ற போது காணாமல் போயிருந்தனர்.
மீனவர்களையும் தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது. கடலில் மிதந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர். (ற-ரி5)

## கட்சி மாறினார் ஜயந்த வீரசேகர

கொழும்பு.டிசெ.2
தேசிய சுதந்திர முன்னணியை சேர்ந்த ஜயந்த வீரசேகர சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.
சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் தெரிவித்தார்.
அவர் தற்போது கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக செயற்பட்டு வருகின்றார்.
(ற.ரி4)

## மண் மேடு வீட்டின் மேல் வீழ்ந்ததில் கணவன் சாவு; மனைவி காயம்

மாத்தறை. டிசெ.2
கம்புருபிட்டிய - பலோல்பிட்டிய பிரதேசத்தில் வீடொன்றின் மீது நேற்று மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவத்தில் 72 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார். அவரது மனைவி காயமடைந்து மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
உயிரிழந்த நபரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மாத்தறை மருத்துமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)



ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்......

பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிபரக் கோவையை (அலைபேசி இலக்கத்துடன்) தபாலிலோ, வைபர் மூலமோ, உதயன் முகநூல் பக்க தனித் தகவல் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 316 5555
UthayanPrint
uthayanprint@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:
15.12.2017




# 'தல பூட்டுவா' யானையை கொன்றதாக 7 பேர் கைது

கொழும்பு, டிசெ. 2

கல்கமுவ பகுதியில் 'தல பூட்டுவா' என்று செல்லப் பெயர் கொண்டு அழைக்கப்படும் மிக அரிய வகை தந்தம் கொண்ட யானையைக் கொன்ற குற்றச்சாட்டின் கீழ் ஐவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்த யானை கடந்த சில நாள்களாக காணாமற்போயிருந்ததைத் தொடர்ந்து பிரதேச மக்கள் பாதுகாப்பு பிரிவினருக்கும், வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கும் அறிவித்தனர். இந்த நிலையில், யானையொன்றின் தந்தங்கள் இரண்டை விற்பனை செய்யச் சென்ற இருவர் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

பொல்பித்திகம பிரதேச செயலர் அலுவலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர் மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தல பூட்டுவா என்று அழைக்கப்படும் யானையின் தந்தத்தை ஒத்ததான இரண்டு தந்தங்களும் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள், சூழலியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்த யானையைத் தேட ஆரம்பித்திருந்தனர். நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது தல பூட்டுவா என அழைக்கப்படும் யானையின் உடலுக்கு ஒத்ததான உடலொன்று பஹல்ல பல்லேகெலே வனப் பகுதியிலிருந்து கடந்த 29ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த யானையின் உடல் முழுமையாக உருக்குலைந்திருந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இது சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அதன்பின்னர் யானையின் உடல் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன், நேற்று முன்தினம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தது.

இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட யானையானது, தல பூட்டுவா என்று செல்லமாக அழைக்கப்படும் யானை என்பதை சாட்சியங்களுடன் வனஜீவராசி திணைக்களத்தின் வனவிலங்கு வைத்திய பணிப்பாளர் தாரக பிரசாத் உறுதிப்படுத்தியுள்ளார்.

45 வயதான இந்த யானையின் பல இடங்களில் குறிப்பாக தலைமற்றும் தொண்டை பகுதியில் சுட்டதால் யானை இறந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில், சம்பவம் தொடர்பில் இதுவரை 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கொல்லப்பட்டதன் பின்னர் இந்த யானையின் உடல் பாகங்களை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஆயுதங்களையும், யானையைக் கொல்லப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.


இவ்வாறான அரிய வகை யானைகள் இரண்டு அல்லது மூன்று மாத்திரமே இலங்கையில் காணப்படுவதாக அரச தகவல்கள் குறிப்பிடுகின்றன. (5)

## சூடுபிடிக்கிறது தேர்தல் களம்

# தொகுதிப் பங்கீட்டில் இழுபறி ரணில், ஹக்கீம் தொடர் பேச்சு

கொழும்பு, டிசெ. 2

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கூடுதலான இட ஒதுக்கீட்டை வழங்கக்கூடாதென ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்கள் போர்க்கொடி தூக்கியிருப்பதால் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையிலான தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுகள் சூடுபிடித்திருப்பதாக அறியமுடிகின்றது.





தேர்தலுக்கான தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுகள் கடந்த சில தினங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நடைபெற்று வருகின்றன.

வடக்கு, கிழக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடவேண்டுமென கட்சிக்குள் பெரும்பாலானோர் கோரிக்கை விடுத்துவரும் அதேசமயம், மறுபுறம் முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கிழக்கில் போட்டியிடவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை வலியுறுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் கிழக்கு மாகாண முக்கியஸ்தர்களான தயாரட்ன மற்றும் அமைச்சர் தயா கமகே உட்பட்டோர் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸை உள்ளீர்க்கும் செயற்பாடுகளைச் செய்துவிடக்கூடாதென்று கட்சித் தலைமையைக் கேட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிழக்கில் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கைச் சுட்டிக்காட்டியுள்ள இவர்கள், காங்கிரஸை இணைப்பதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி வடக்கு, கிழக்கில் செல்வாக்கை இழந்துவிடும் அபாயத்தையும் கட்சித் தலைமையிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் தொகுதிப் பங்கீடு விடயம் தற்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இந்தச் சர்ச்சை தொடருமாயின் வடக்கு, கிழக்கில் பெரும்பாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# இலங்கை ஏதிலிகளுக்கு கதவை மூடியது பிரிட்டன்!

கொழும்பு, டிசெ. 2

புதிதாக எந்த ஒரு இலங்கை ஏதிலியின்விண்ணப்பத்தையும் பிரிட்டன் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று பிரிட்டன்உள்துறைஅமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் இந்த ஆண்டு 3 ஆயிரத்து 535 பேர் ஏதிலிக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தனர். அவற்றில் 838 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த 48 பேரும், இந்தியாவைச் சேர்ந்த 82 பேரும் ஏதிலிக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ள போதும், அவர்களுள் ஒருவரது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)



தலவாக்கலை கூம்வூப் தோட்டத்திலிலுள்ள வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததால், குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர். தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக மழைச்சாரலில் ஈரமடைந்திருந்த சுவரே இவ்வாறு இடிந்து விழுந்தது. (ற-ரி5)

# மகிந்தவின் பகல் கனவு பலிக்காது!

## அமரவீர சாட்டையடி

கொழும்பு, டிசெ. 2

மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மதிப்பீடு செய்யாது பகல் கனவு காண்கின்றனர் என்று மீன்பிடி மற்றும் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டு எதிரணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து போட்டியிடுவது குறித்து கடந்த 26ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுகள் இணக்கப்பாடின்றி முடிவடைந்திருந்தன.

2018ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும், கூட்டு அரசில் இருந்து வெளியேற வேண்டும், சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை மகிந்த ராஜபக்சவிடம் வழங்க வேண்டும் என சில கோரிக்கைகளைக் கூட்டு எதிரணியினர் இந்தப் பேச்சுகளின்போது முன்வைத்தனர். ஆனால், சுதந்திரக் கட்சி இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்ததாவது,

சமகால சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை மதிப்பிடாது கூட்டு எதிரணியினர் செயற்பட்டு வருகின்றனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டுப் பெரிய வெற்றியைப் பெற்றுக்கொள்ளும். கூட்டு எதிரணியியுடனான பேச்சுகளின்போது தகுதிவாய்ந்தவர்கள் கலந்துகொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு அரசில் சுதந்திரக் கட்சி இணைந்து செயற்பட்டாலும் தனித்துவமான கொள்கையும், வேலைத்திட்டமும் எமக்குள்ளது - என்றார். (5)

# அரசனை நம்பி புருசனை கைவிட்டுள்ளது மைத்திரி அணி

கொழும்பு, டிசெ. 2

விவாகரத்துபெற்றஇருவரைஇணைத்து வைக்க நாங்கள் விரும்புகிறோம். ஆனால் ஒருவர் புதிய பிள்ளைகளை விட்டுவிட்டு வர மறுக்கிறார். அப்படியானால் எப்படி இணைவது? இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியும் மகிந்த அணியும் விவாகரத்துச் செய்துவிட்டன. என்றாலும் அவர்களை இணைக்க நாங்கள் முயற்சிகளைச் செய்து வருகிறோம். ஆனால் அவர்களோ (மைத்திரி அணி) புதிய திருமணம் செய்துகொண்டவர்களுடன் (ஐக்கிய தேசியக் கட்சி) பிறந்த பிள்ளைகளை விட்டுவிட்டு வரத் தயங்குகின்றனர். அப்படியாயின் வலுக்கட்டாயமாக எப்படி இவர்களை இணைப்பது? தனது எதிர்காலம் பற்றிச் சிந்தித்து மைத்திரி அணி செயற்படவேண்டும்.



விவாகரத்து பெற்ற இருவரைச் சேர்த்து வைப்பதென்பது இலேசான விடயமல்ல. அரசனை நம்பி புருசனை இழந்த கதையாக மைத்திரி அணியின் கதை மாறிவிடக்கூடாது. அவர்கள் திருந்தி திரும்பி வருவார்களென நம்புகிறோம் - என்றார். (5)



வடமராட்சி வேதாரணியேஸ்வரா வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார். (எ)

புதுக்குடியிருப்புப் பகுதியில்

# இராணுவ வசமுள்ள காணிகள் தொடர்பில் மாறுபட்ட விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன

சுட்டிக்காட்டுகிறார் சபை உறுப்பினர் ரவிகரன்

முல்லைத்தீவு, டிசெ. 2

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் படையினரிடம் உள்ள நிலம் தொடர்பில் படையினரால் மாறுபட்ட புள்ளிவிவரங்கள் கூறப்படுவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இராணுவத்தினரிடம் 200 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாக இராணுவத்தினரால் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தரவில் உண்மை கிடையாது. ஏனெனில், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் 2015 ஆம் ஆண்டு தரவுகளின் பிரகாரம் புதுக்குடியிருப்பில் ஆயிரத்து 152 ஏக்கர் நிலம் இராணுவம் வசம் உள்ளதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டதன் பின்னர் பிரிவில் நூறு ஏக்கர் நிலம்கூட விடுவிக்கப்படவில்லை. இந்த நிலையில் எவ்வாறு குறித்த அளவு 200 ஏக்கராக மாற்றம் பெற்றது என்பதை அறிய இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகளின் விவரத்தை அடுத்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது - என்றார்.

குறித்த விடயம் தொடர்பில் பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"பிரதேச செயலகத்தில் மக்களால் ஆவண ரீதியாகவும் ஆவணம் இன்றியும் உரிமைகோரி பதிவுகள் மேற்கொண்ட நிலங்களாக இதுவரை 67 பேருக்குச் சொந்தமான 374 ஏக்கர் நிலங்கள் மட்டுமே காணப்படுகின்றன.

இதேநேரம்பதியப்படாமலோ அல்லது திணைக்களங்களுக்குச்சொந்தமான நிலங்களோ இருப்பின் அவை தொடர்பில் இதுவரை எவரும்எம்மிடம்உரிமைகோரவில்லை" எனப் பதிலளித்தார். (எ;101)

## முத்தமிழ் விழா

காரைநகர், டிசெ. 2

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையும் காரைநகர் அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் முத்தமிழ் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் எதியோப்பியப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் கனடி விஜயரத்தினம் தலைமையில் இடம்பெற உள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் சான்றோர் மதிப்பளிப்புக்கப்படுவதோடு சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-250)

யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில்

# டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் 2ஆயிரத்து 394 வீடுகள் பார்வை

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பிரதேசத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இருநாள் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 2ஆயிரத்து 394 வீடுகள் பார்வையிடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் 23 குடியிருப்புப் பகுதிகளில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால் அந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் அதனைவிட 141 குடியி ருப்புக்கள் போதிய சுகாதார வச திகள் இன்றிக் காணப்பட்டதால் உடனடியாக அவற்றைத் துப்பரவாக்கக் கோரி சிவப்பு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன என மாநகர சுகாதார அதிகாரி பணிமனை தெரிவித்தது. (எ-17)

# தேர்த் தரிப்பிடம் அமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 2

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நரத சமேத அமிர்த பாஷினி ஆலயத்துக்கு சுமார் 14 இலட்சம் ரூபா செலவில் தேர்த் தரிப்பிடம் அமைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆலயத்தின் கட்டட வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,131)

## பிள்ளையார்கதை உற்சவமும் இலட்சார்ச்சனை பெருவிழாவும்

யாழ்ப்பாணம் ,டிசெ.2

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார்கதை உற்சவமும் இலட்சார்ச்சனைப் பெருவிழாவும் நடைபெறவுள்ளன. நாளைமறுதினம் 4ஆம்திகதிதிங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 24ஆம் திகதி வரை நடைபெறும் நிகழ்வில் 23ஆம் திகதி சனிக்கிழமை கஜமுகாசூரன் போரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கணபதி ஹோமமும் இடம்பெற்று அன்றைய தினம் பெருங்கதைப் படிப்பும் முடிவுறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## இலங்கையின் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி

திங்கள் கருத்தமர்வு

*யாழ்ப்பாணம். டிசெ.2*

*"இலங்கையின் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி " என்னும் தலைப்பிலான தமிழ் மொழி மூலமான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் பி.ப. 2.30 மணியளவில் நடைபெறும் என்று இலங்கை வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலக முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்தார்.*

*இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சிப் பிராந்திய அலுவலகம் மற்றும் வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் ஆகியன இணைந்து இதனை நடத்துகின்றன.*

*மிகவும் பயனுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆர்வம் உள்ள அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு பயனடையுமாறு அவர் கேட்டுள்ளார்.* *(4-ரி)*

## நெல்லியடி சனசமூக நிலைய பரிசளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.2

நெல்லியடி சனசமூக நிலையத்தின் கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு நெல்லைத் திருமண மண்டபத்தில் தி.செல்வராஜா தலைமையில் நிகழவுள்ளது.

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபையின் பாலர் பாடசாலையின் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற, ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்ற, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக அல்வாய் சிறிலங்கா வித்தியாலய அதிபர் ஞானசேகரம் ரவிக்குமார் மற்றும் சிறப்பு விருந்தினராக நெல்லியடி கிராம அலுவலர் கு.சசிக்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். பரிசில்களை நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர் கீதாஞ்சலி ரவிக்குமார் வழங்கவுள்ளார். (4-35)

## சந்தேக நபர்கள் தொடர்பில் ஆணைக்குழு ஆராய்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 2

தெல்லிப்பழை குளமன்கால் பகுதியில் கடந்தவாரம் அதிகாலையில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டது என குற்றஞ்சாட்டப்படும் சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்லாகம் குளமன்கால் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் இரவு 11.30 அளவில் வீட்டு வளாகத்துக்குள் இரண்டு பேர் புகுந்தனர் என்றும் வீட்டு உரிமையாளர் கூக்குரல் எழுப்பியபோது இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பியோட முனைந்தனர் என்றும் அவர்களை அயலவர்கள் மடக்கினர் என்றும் பிரதேசத்தவர்கள் கூறுகின்றனர்.

அந்த இருவரில் ஒருவர் பொலிஸ் நிலையம் ஒன்றில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

திருட்டு முயற்சியில் ஈடுபட்டனர் என இருவர் மீதும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர். ஆனால் நீதிவானிடம் சந்தேபகநபர் ஒருவரே முற்படுத்தப்பட்டார் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதனால் மனித உரிமை ஆணைக்குழுவும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (4-101)

# தொலைக் காட்சியுடன் பிடிபட்டவருக்குப் பிணை

பொலிஸ் உத்தியோகத்தர் பிடிபடவில்லை என்கிறது பொலிஸ்

சாவகச்சேரி, டிசெ. 2

முச்சக்கரவண்டியில் 32 அங்குல தொலைக்காட்சிப் பெட்டியுடன் சந்தேகத்துக்கிடமான நிலையில் காணப்பட்ட நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவருடன் மற்றொருவர் பிடிபட்டார் என்றும் அவர் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் என்றும் பலராலும் கூறப்படுகின்றபோதும் பொலிஸார் அதனை மறுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு நாவற்குழிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் இரவு ரோந்து சென்ற வேளையில் நாவற்குழிச் சந்தியில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட முச்சக்கர வண்டியைச் சோதனையிட்டபோது அதனுள் 32 அங்குலத் தொலைக்காட்சிப் பெட்டி இருந்துள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதியிடம் விசாரித்தபோது முன்னுக்குப் பின் முரணான தகவலைப் பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தஇந்தநபர்விசாரணையின்போது ஏற்கனவே பல சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். அவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் நீதிமன்று விடுவித்தது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4-9)

# அலைபேசியில் ஆபாசம் இளைஞன் கைதானார்

அலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்து மற்றொருவருக்கு அதைக் காண்பித்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பகுதியில் சாலையோரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்று குறித்த நபரை விசாரணைக்கு உட்படுத்தியபோது அவரது அலைபேசியில் ஆபாசப் படங்கள் இருந்தன. அவற்றை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். மன்று அவரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (4-9)

## திருமறைக் கலாமன்றத்தின் ஆண்டு நிறைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் 52ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 7 மணிக்கு இல 17,மாட்டின் வீதியில் அமைந்துள்ள கலைஞான சுரபி தியான இல்லத்தில் சிறப்பு வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் கலை நிகழ்வுகளும் நூல் வெளியீடும் இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். சிறப்பு நிகழ்வாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'யாழ்பாணன்' இசைநாடகம் இடம்பெறும். (எ)

# இராணுவத் தளபதி வன்னிக்கு வந்தபோது நிலவிடுவிப்பை எதிர்பார்த்து ஏமாந்தோம்

## கேப்பாபிலவு மக்கள் நேற்றுக் கவலை தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 2
இலங்கை இராணுவத் தளபதி முல்லைத்தீவு கேப்பாபுலவு படைத்தளத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்கு பல அதிகாரிகளையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.
"அவரது வருகையால் தமது காணிகளை விடுவிப்பற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்படும் என்று எதிர்பார்த்துக்காத்திருந்தோம். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது" என்று கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் நேற்றுக் கவலை தெரிவித்தனர்.
இலங்கை இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டு நேற்றுக் கிளிநொச்சிப் படைத் தலைமையக அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
அதன்பின்னர் கேப்பாபிலவு படைத்தலைமையகத்துக்குச் சென்று அங்கும் படை உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் தொடர்ச்சியாகத் தங்கள் காணிகளை மீட்டுத்தருமாறுகோரி கேப்பாபிலவு மக்கள் 276 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.
" நாங்கள் போராட்டம் நடத்தியபோது இராணுவத் தளபதி முதல் 3 மாதங்களுக்குள் காணிகளை விடுவிப்பதாகக் கூறியிருந்தார். பின்னர் ஆறு மாதங்களில் விடுவிப்பதாகக் கூறியிருந்தார். பின்னர் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இந்த ஆண்டு இறுதிக்குள் காணிகளை விடுவிப்பதாகக் கூறினார். கடந்த மாதம் 23 ஆம் திகதி காணிகள் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எதுவித முடிவும் கிடைக்கவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.
"அவர்கள் காலம் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. எதுவித முடிவும் இன்றி நாங்கள் நோய்களுக்கு உள்ளாகியுள்ளோம்.
அவ்வாறிருந்தும் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம்.
இராணுவத் தளபதி வருகையையொட்டி எங்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அது நடக்கவில்லை. கொட்டும் மழையிலும், நுளம்புக் கடிக்கு மத்தியிலும் போராட்டத்தில் ஈடுபட்ட நாங்கள் போராட்டத்தைக் கைவிடாது தொடர்ந்துகொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்தனர். (4,ரி3)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 80 | 80 | 80 |
| கத்தரி | 140 | 120 | 160 | 240 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 240 | 320 | 300 | 200 | 200 |
| பாகல் | 350 | 320 | 450 | 240 | 340 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 140 | 200 | 200 | 140 | 180 |
| சி.வெங்காயம் | 350 | 400 | 350 | 380 | 160 |
| பூசணி | 80 | 80 | 60 | 60 | 60 |
| தக்காளி | 90 | 120 | 150 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 60 | 60 |
| கீரை | 50 | 60 | 60 | 60 | 50 |
| பொன்னாங்கானி | 50 | 60 | 40 | 35 | 40 |
| ப.மிளகாய் | 600 | 700 | 800 | 600 | 700 |
| புடோல் | 100 | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 160 | 160 | 120 | 140 | 140 |
| வெண்டி | 100 | 160 | 180 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 140 | 240 | 200 | 240 | 240 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 50 | 100 | 80 | 70 | 50 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 310 | 300 | 300 | 300 | 350 |
| கரட் | 200 | 200 | 200 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 220 | 320 | 500 | 120 | 320 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 500 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 550 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 550 | 600 |
| முரல் | 300 | 350 | 450 | – |
| கும்பிளா | 200 | 300 | 350 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 300 | 300 | 550 | 400 |
| திரளி | 200 | 200 | 250 | 200 |
| நகரை | 200 | 200 | 300 | – |
| சூடை | 100 | 120 | 150 | 200 |
| ஒட்டி | 100 | 200 | 200 | 300 |
| திருக்கை | 250 | 200 | 300 | – |
| மதனம் | 200 | 180 | 350 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 450 | 400 |
| வாளை | 100 | 200 | 250 | – |

### நல்லூரில் இடம்பெற்றது மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ.14
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ முகாம் கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் இடம் பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட ஸ்ரீங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர் க.கருணாகரனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதியின் வைத்;திய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட முகாமில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான சிறுவர்கள், பெரியோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். (எ.50)

### மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.2
சாம்றோக் கல்வி நிலையத்தின் முன்னாள் நிர்வாகி மறைந்த பீற்றரசன் விஜயசிங்கத்தின் 6ஆம் ஆண்டு நினைவாக ஜி.சி.ஈ சாதாரண பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் சாம்றோக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.
கணிதம், வரலாறு பாடங்களுக்கு சிறந்த பெறுபேறுகளை பெறும் நோக்கத்துடனே இந்த செயலமர்வு நடைபெறுகிறது. மாணவர்களை பங்குபற்றி பயன்பெறுமாறு நிர்வாகி தெரிவித்துள்ளார். (எ)

### பால் நிலைச் சமத்துவத்துவம்; யாழில் இன்று நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 2
ஆரோக்கியமான வேலைச் சூழல் மற்றும், வேலைத்தளங்களில் பால் நிலைச் சமத்துவம் எனும் தொனிப் பொருளிலான இலவச கருத்தரங்கும், சட்ட உதவியும் இன்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இடம்பெறவுள்ளது.
காலை 9 மணி முதல் பி.ப 1 மணி வரை இடம்பெறும் இந்த நிகழ்வுவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும், சொலிட்டறி நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
யாழ்பாணத்தில் உள்ள கடைகளில், நிறுவனங்களில் பணி புரியும் இருவபாலாரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
இதே வேளை பால்நிலை வன்முறைக்கெதிரான தேசிய குழுவின் அங்கமான யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையம் 'பெண்களைத் தேர்ந்தெடுப்போம்; வன்முறையை ஒழிப்போம்' என்ற தொனியில் தொடர்வாகன ஊர்தி நிகழ்வு ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஊர்தி நிகழ்வு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் 9.30 மணிக்கு ஆரம்பமாகும். இதன் போது கையெழுத்து பிரசாரமும் நடைபெறும். நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் அகிலன், முன்னாள் நகரசபை உறுப்பினரான மதினி நெல்சன் மற்றும் பால்நிலை மற்றும் ஊடக சார் வளவாளரான கிருத்திகா தர்மராஜா ஆகியோர் பங்கு கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21,4)

### உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெண் உறுப்பினர்களின் சதவீதம்

2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் களமிறங்கும் 25 சதவீத பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பபட்டுள்ளன.
அதன் படி யாழ்ப்பாண மாவட்டத்தின் 17 சபைகளுக்குமான பெண் உறுப்பினர்களுடைய விவரம் வருமாறு:
யாழ்ப்பாணம், மாநகர சபைக்கு முதலாவது வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆகவும், இரண்டாவது மனுப்பத்திரத்தில் 10 ஆகவும், நியமனம் செய்யப்பட வேண்டிய 25 சதவீதப் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 ஆகவும் குறிப்பிடப்பட்டுள் ளது. அதே போன்று வல்வெட்டித்துறை நகர சபை, பருத்தித்துறை நகர சபைகளுக்கு முதலாவது வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1 ஆகவும், இரண்டாவது மனுப்பத்திரத்தில் 4 ஆகவும், நியமனம் செய்யப்பட வேண்டிய 25 சதவீதப் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 ஆகவும், சாவகச் சேரி நகர சபைக்கு முதலாவது வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1 ஆகவும், இரண்டாவது மனுப்பத்திரத்தில் 5 ஆகவும், நியமனம் செய்யப்பட வேண்டிய 25 சதவீதப் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆகவும், காரைநகர் பிரதேச சபைக்கு முதலாவது வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1 ஆகவும், இரண்டாவது மனுப்பத்திரத்தில் 3 ஆகவும், நியமனம் செய்யப்பட வேண்டிய '25 சதவீதப் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2ஆகவும், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு முறையே 1, 4, 3 ஆகவும், நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு, முறையே 1,4,3 ஆகவும், வேலணைப் பிரதேச சபைக்கு 2, 5, 5 ஆகவும், வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு 2, 6, 6 ஆகவும், வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு 3,8, 8 ஆகவும், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கு 2,7, 7 ஆகவும், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைகளுக்கு, 3,7,7 ஆகவும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை3,8,9 ஆகவும், பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு 2, 5,5 ஆகவும், சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு 2,7,7 ஆகவும், நல்லூர்ப் பிரதேச சபைக்கு 2,5,5 ஆகவும் உள்ளது. (21)

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

மன்னார், டிசெ.2
மன்னர் மடுவில் ஆண் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார் என மடுப் பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் மடு மடுரோட் முதன்மை வீதியில் 5ஆம் கட்டைப் பகுதியில் உள்ள இராணுவ முகாமை அன்மித்த பகுதியில் இருந்து மாலை 6 மணியளவில் சடலம் மீட்கப்பட்டது.
சடலம் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யாருடையது என்பது இனம்காணப்படவில்லை, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (21)

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற
## இலங்கை கணக்காளர் சேவை தரம் 3இன் பரீட்சை நிறுத்தம்

### வடக்கில் 500க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பாதிப்பு

யாழ்ப்பாணம். டிசெ.2
இலங்கை கணக்காளர் சேவை தரம் 3இற்கான பரீட்சை முடிவுகள் வெளியாகும் நிலையில் பரீட்சையை இரத்துச் செய்துள்ளதாக கொழும்பு கல்வி அமைச்சர் அறிவித்துள்ளமையால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சார்த்திகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது பற்றி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.
இலங்கை கணக்காளர் சேவை தரம் 3இற்கான ஆட்சேர்ப்பு பரீட்சைகள் நடத்துவதற்கான வர்த்தமானி 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 198 பேரை உள்வாங்குவதாக அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 22,23, 29ஆம் திகதிகளில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெற்றன. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 500க்கு அதிகமான பேர் இதற்கு தோற்றியிருந்தோம்.
பரீட்சை நாடாளாவிய ரீதியில் நடைபெற்றமையால் மிகுந்த சிரமப்பட்டு படித்து பரீட்சைக்குத் தயாராகி இருந்தோம். பரீட்சை முடிவுக்காக காத்திருக்கும் இந்த நிலையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய கொழும்பு கல்வி அமைச்சர் இலங்கை நிர்வாக சேவைப்பரீட்சையின் ஒரு பாடத்தையும், இலங்கை கணக்காளர் சேவையின் அனைத்துப் பாடங்களையும் இடைநிறுத்தப் போவதாக தெரிவித்தார்.
இதனால் நாம் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம். கணக்காளராக தெரிவு செய்யப்படுவோம் என்ற நம்பிக்கை இதனால் வீண்போயுள்ளது. காரணங்கள் குறிப்பிடாமல் இதனை நிறுத்துவதால் எமக்குச் சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே இது தொடர்பாக உரியவர்கள் முழுமை யான பதிலைத் தர வேண்டும். இது தொடர்பில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவிகளை நாடியுள்ளோம் -என்றனர். (எ-றி)

யாழ்ப்பாண பிரதேச செயலகங்களில்
## சிற்றூழியர்களாக தென்னிலங்கை இளைஞர்களுக்கு ரகசிய நியமனம்

### வடக்கில் 30 ஆயிரம் இளையோர் வேலை வாய்ப்புக்குக் காத்திருக்கும் நிலையில்

யாழ்ப்பாணம். டிசெ.2
யாழ்ப்பாணக் குடாநாட்டில் 30 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சிற்றூழியர்களாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் இரகசியமாக நியமனம் பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தின் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்படும் சிற்றூழியர்கள் வெற்றிடங்களுக்கு ஜி.சி.ஈ. சாதாரண சித்தியுடன் நேரடியாகவே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமனம் வழங்க முடியும்.
அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கு உள்ளூரில் இருந்தே குறித்த நியமனம் வழங்கப்படுவது வழமையாகும். இதேநேரம் குறித்த வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாது காணப்படும் நிலையில் தற்காலிகமாக நாள் சம்பள அடிப்படையில் சிற்றூழியர்களை மட்டும் மாவட்டச் செயலர், அமைச்சின் அனுமதியுடன் பணிக்கமர்த்த முடியும். அதற்கமைய மாவட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களில் சில வெற்றிடங்களுக்கு மட்டும் ஒரு சிலர் அமர்த்தப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் தற்காலிகமாக பணியாற்றுபவர்களையோ அல்லது வேலை வாய்ப்பு இன்றிக் காணப்படும் இளைஞர்களையோ கருத்தில் எடுக்காது ஊழியர்களை தென்னிலங்கையில் இருந்து இரகசியமான முறையில் நியமித்து வருகின்றனர். இவ்வாறு அண்மையில் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு ஒருவரும் மாவட்டச் செயலகத்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ள தாக சுட்டிக்காட்டப்படு கின்றது.
இதேநேரம் கடந்த ஆண்டும் 6 பேர் இதேபோன்று தென்னிலங்கை இளைஞர்கள் இரகசியமான முறையில் நியமிக்கப்பட்டனர்.
அதன்போதும் பலரும் சுட்டிக்காட்டிய நிலையிலும் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-101)

> தற்காலிகமாக பணியாற்றுபவர்களையோ அல்லது வேலைவாய்ப்பு இன்றிக் காணப்படும் இளைஞர்களையோ கருத்தில் எடுக்காது ஊழியர்களை தென்னிலங்கையில் இருந்து இரகசியமான முறையில் நியமித்துவரு கின்றனர்.

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, டிசெ. 2
சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்களின் சாரதிகளுக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிமன்று.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சாரதிகள் இருவரும் பொலிஸாரிடம் மாட்டினர்.
அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றியதாக இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டது. இருவருக்கும் எதிராக பொலிஸார் கிளிநாச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
சாரதிகள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டதையடுத்து தண்ட்ம் விதிக்கப்பட்டது.
அதன்படி ஒரு சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ-4-6)

## இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.2
'இலங்கையின் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி' எனும் தலைப்பில் இலவசக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2.30 மணிக்கு தமிழ்மொழி மூலம் கருத்தரங்கு நடைபெறும். பொதுமக்களின் பொருளாதார அறிவு மற்றும் தகவல் விருத்தியை நோக்காக கொண்டு மத்திய வங்கி ஒழுங்குபடுத்தும் இந்தக் கருத்த ரங்கில். பொருளியல் சார்பான விரிவுரை ளாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (எ)



கொடிகாமம் மத்திய பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் வேருடன் சாய்ந்த தென்னைமரம் வீட்டின் மேல் வீழ்ந்ததில் வீட்டின் ஒருபகுதி சேதமடைந்தது.

புதுக்குடியிருப்புக்கு கடமைக்குச் செல்லும்
## அரச உத்தியோகத்தர்களுக்கு தனியாகப் பேருந்து வேண்டும்

முல்லைத்தீவு, டிசெ. 12
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்களில் 35பேர் வரையில் யாழ்ப்பாணத்தில் இருந்தே வருகின்றனர். அதனால் அவர்ளுக்கென தனியான போக்குவரத்துச் சேவை ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும் என அவர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியி ருப்புப் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்களில் 35பேர் வரையில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் மேலும் பலர் வவுனியாவில் இருந்துமே பணிக்கு வருகின்றனர்.
அங்கிருந்து வரும் குறித்த பேருந்துகள் 9 மணியைக் கடந்தபின்னரே புதுக்குடியிருப்பை வந்தடைகின்றன. இதனால் பணியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.
பணியாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் இருந்து புறப்படும் பேருந்துகள் காலை 8.30 மணிக்கு புதுக்குடியிருப்பை வந்தடையுமாறு தனியான போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கைமுன்வைக்கின்றனர்.
குறித்த கோரிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டால் இரு மாவட்டங்களில் இருந்தும் ஊழியர்களும் தங்குதடையின்றி அலுவலகத்துக்குக் கடமைக்கு சமுகமளிப்பதோடு 'சீரான பணியை மேற்கொள்ள முடியும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.
இந்த விடயம் அண்மையில் இடம்பெற்ற புதுக்குடியிருப்புப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் பேசப்பட்டது.
இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் கவனத்துக்குக் கொண்டுசென்று பேருந்து சேவைக்கான ஏற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-4-101)

## வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திடீர் வருகை

### செயற்பாடுகள் மற்றும் குறைகளைக் கேட்டறிய

யாழ்ப்பாணம். டிசெ.2
கூட்டுறவுச்சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் குறைகளை கேட்டறியும் முகமாக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சங்கங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றார்.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
குறிப்பாக வடக்கு மாகாணத்தில் அதிகளவான கூட்டுறவுச் சங்கங்கள் போதிய வருமானம் மற்றும் செயற்பாடுகள் இன்றிய நிலையில் பெரும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று அவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளார்.
தற்போது வன்னிப்பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு திணைக்கள அதிகாரிகள் சகிதம் ஆணையாளர் பொ. வாகிசன் நேரில் சென்று சங்கங்களின் குறைபாடுகள் தேவைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கேட்டறிந்து வருவதாக வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் தெரிவித்தது.
அத்துடன் கடந்த வாரம் நெடுங்கிழக்கு திணைக்கள அதிகாரிகள் சென்று சங்கத்தின் செயற்பாடுகளை நேரில் அவதானித்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளையும் ஆணையாளர் விரைவில் பார்வையிட உள்ளார். சங்கங்களினால் நடாத்தப்படும் கிளை நிலையங்கள், விசேட விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் வியாபார நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன. (எ-17)

# விவசாயத் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## மாகாண விவசாய அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.2

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் நிலவும் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாகாண விவசாய அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயத் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 22இல் 17 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான உத்தியோகத்தர்களை கொழும்பு அமைச்சே நியமிக்க முடியும். ஆனால் இந்த வெற்றிடங்களின் சேவைகள் முக்கியமானவையாக உள்ளன. விவசாய அமைச்சின் உதவிப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட 17 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

தேவையின் நிமித்தம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஓய்வு பெற்ற துறை சார்ந்த தமிழ் உத்தியோகத்தர்களை ஒரு வருட ஒப்பந்தத்துக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரை பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளராக நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மேலும் ஏனையவர்களை நியமிப்பது தொடர்பான அனுமதியை ஆளுநரிடம் பெறவுள்ளோம் என்றார். (எ-ரி)

# முல்லையில் புதையல்கள் எடுக்கப்பட்ட பின் ஏமாற்றுக்காக மீண்டும் தோண்டப்படுகிறதா?

## சந்தேகம் எழுப்புகின்றனர் பிரதேசத்தவர்கள்

முல்லைத்தீவு, டிசெ. 2

முல்லைத்தீவில், 'புதையல் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது' என்றுகூறி புதையல்கள் தோண்டப்படுகின்ற இடங்களில் ஏற்கனவே இரகசியமாக தோண்டப்பட்டு புதையல்கள் எடுக்கப்பட்டு விடுகின்றனவா என்று பிரதேச மக்கள் சந்தேகம் எழுப்புகின்றனர். அதற்கேற்ப புலனாய்வாளர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன என அவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் வலைஞர் மடத்தில் விடுதலைப்புலிகள் பெறுமதியான பொருள்கள் மற்றும் வெடி பொருள்கள் என்பவற்றை புதைத்து வைத்துள்ளனர் எனத் தெரிவித்து சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸாருடன் முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிவான் பரஞ்சோதி தலைமையில் புதையல் தோண்டும் பணி நேற்றுமுன்தினம் மாலை 3 மணியிலிருந்து 6.30 வரை இடம்பெற்றது. ஆனால் புதையல் எதுவுமே எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் அவர்கள் தெரிவித்ததாவது:

'விடுதலைப்புலிகள் நூற்றுக்கணக்கான கிலோ தங்கங்கள் மற்றும் வெடிபொருள்கள், பணம் என்பவற்றை புதைத்து வைத்துள்ளனர் என்று கூறுகின்றார்கள். ஆனால் இதுவரை எவையும் அப்படி மீட்கப்படவில்லை.

அவ்வாறு இருப்பினும் அவை விடுதலைப்புலிகளின் தங்கங்கள் அல்ல. விடுதலைப்புலிகளின் வங்கிகளில் வைத்த மக்களின் தங்கங்கள்தான் அவை. இவை தொடர்பில் ஏற்கனவே தகவல் அறிந்தவர்கள் சிலர் குறிப்பிட்ட பகுதிகளில் இரகசியமாகத் தோண்டி எடுத்துச் சென்றுவிடுகிறார்கள் என்றே நாம் கருதுகிறோம். அண்மையில்கூட வலைஞர்மடம் பகுதியில் பலதடவைகள் அம்புலன்ஸ் வண்டி வந்துசென்றது. எதற்கு வந்தது என்று தெரியவில்லை. கஞ்சா கடத்தல்களும் இடம்பெற்றுள்ளன. அதனால் நாங்கள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

உண்மையில் ஏற்கனவே இரகசியமாக தோண்டி எடுக்கப்பட்டுவிட, சட்டத்துக்காக மட்டுமே இவ்வாறு நீதிவான் முன்னிலையில் தோண்டப்படுகின்றமை சட்டத்தை ஏமாற்றும் செயல். இது தொடர்பில் உரிய தரப்பினர் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும் - என்றனர். (எ-4-ரி3)

# சுவிஸிலிருக்கும் ஆவாக் குழு தலைவரை கைது செய்து இங்கு கொண்டுவருவோம்

## யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சூளுரைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளை நடத்தி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் ஆவா குழுவின் தலைவர் பிரசன்னாவை பன்னாட்டுப் பொலிஸாரின் (இன்ரபோலின்) உதவியுடன் கைது செய்து சுவிஸிலிருந்து இங்கு கொண்டுவருவோம் என யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹேமவிதாரன சூளுரைத்தார்.

வன்முறைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்ட வாள்களை ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் காண்பிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளை அரங்கேற்றி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் 'ஆவா குழு' எனப்படும் ஒரு குழு செயற்பட்டு வருகின்றது. தம்மை ஓர் அடாவடிக்குழுவாக காண்பிப்பதே இந்த இளைஞர் குழுவின் நோக்கமாகும். இவர்களை வழிநடத்தும் தலைவர் சன்னா என அழைக்கப்படும் பிரசன்னா தற்போது சுவிஸ் நாட்டுக்குத் தப்பித்து அங்கு வாழ்ந்து வருகிறார்.

அவர் தொடர்பான முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவரின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணித்து வருகின்றோம். விரைவில் அவரைக் கைது செய்வோம். என்றார். (எ-101)

# பதில் விவசாய பணிப்பாளர் நியமனம்

அச்சுவேலி,டிசெ.2

யாழ்ப்பாண மாவட்ட விவசாய திணைக்களத்தின் பதில் விவசாயப் பணிப்பாளராக அஞ்சலாதேவி ஸ்ரீரங்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட விவசாயப்பணிப்பாளராக கடமை புரியும் இவர் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயத்திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றிய அ.செல்வராசா ஓய்வுபெற்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டார். (எ-11)

## வடக்கு மாகாண ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பித்த

# வழிகாட்டலும் ஆலோசனையும் பாடநெறிக்கு மீள விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

வடக்கு மாகாணத்தில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்துக்கு ஆசிரியர்களாக உள்வாங்கப்படுபவர்களுக்கான விண்ணப்பம் மீளக் கோரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண பாடசாலைகளில் பாடரீதியில் ஆசிரியர் வெற்றிடங்கள் பல காணப்படுகின்றன.

அவற்றை நிவர்த்தி செய்ய திறந்த போட்டிப் பரீட்சை நடத்துவதற்கு ஏப்ரல் மாதம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

அனுமதிக்கமைய வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் அல்லது சமூகவியல் பாடத்தினை முதன்மை பாடங்களில் ஒன்றாக கொண்ட கலைப் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டமைக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

ஆனால் இந்தத் துறைக்கு உளவியல்துறை பட்டதாரிகளே பொருத்தமானவர்கள் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உளவியல்துறை தெரிவித்துள்ளது. உளவியல் பாடத்தை கற்றுக்கொண்டவர்கள் இதற்கான அறிவை தனியான ஒரு பாடத்தின் ஊடாக கற்றுக்கொண்டமையால் அவர்களே இதற்கு பொருத்தமானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டமையால் சமூகவியல் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதில் தற்போது ஆட்சேபனைகள் எழுந்துள்ளன. ஆகவே இது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி அமைச்சால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதுக்கு இணங்க, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் பாடத்தை முதன்மை பாடங்களில் ஒன்றாக கொண்ட பட்டதாரிகளை இந்தப் பிரிவுக்கு உள்வாங்க மீள விண்ணப்பங்களை ஆளுநரின் அனுமதியுடன் கோருவதற்கு அமைச்ச ரவை தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## வட மாகாண திணைக்களங்களுக்கான

# குறைநிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் விரைவில்

யாழ்ப்பாணம்.டிசெ.2

வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள், செயலகங்கள், அமைச்சுக்கள் போன்றவற்றுக்கு 2017ஆம் ஆண்டு மேலதிகமாக ஏற்படும் செலவினங்களுக்கான குறை நிரப்பு ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் விரைவில் சபையில் சமர்பிக்கப்படும் என்று அண்மையில் நடைபெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள், செயலகங்கள், அமைச்சுக்கள் போன்றவற்றுக்கு வருடாந்தம் நிதி ஒதுக்கப்படும். அந்த நிதி ஒதுக்கீடுகள் செயல்திட்டங்களுக்காக பயன்படும். ஆனால் அலுவலகங்களில் ஏற்படும் மேலதிகமான செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு தேவை என்பது தொடர்பாக சபையில் அனைத்து தரப்பினராலும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு பொருத்தமான நியதிச் சட்டத்தை தயாரித்து அதனை சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் 8ஆம் இலக்க 8ஆம் பந்திக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் 28ஆம் பிரிவுக்கு அமைவாக குறித்த நியதிச் சட்டத்துக்கு ஆளுநரின் அனுமதியைப் பெறுவதற்கான அனுமதி கடந்த மாதம் நடைபெற்ற சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

ஆகவே ஆளுநரின் அனுமதியின் பின்னர் மாகாண சபையின் அனுமதியை பெற்று குறை நிரப்பு ஒதுக்கீட்டை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# இந்திய வீட்டுத் திட்டம் காரைநகரிலிருந்து சங்கானைக்கு மாற்றம்

## தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிராந்தியக் காரியாலயம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளப்படவிருந்த வீட்டுத்திட்டம் காரைநகர் பிரதேசத்தில் இருந்து சங்கானை பிரதேசத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்திய அரசின் நிதிப்பங்களிப்புடன் தலா 5 இலட்சம் பெறுமதியான 24 வீடுகள் அமைப்பதற்கான திட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது.

அந்தத் திட்டத்தை யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மடத்து வளவு பிரதேசத்துக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

வீட்டுத்திட்டம் அமைய வேண்டிய பகுதியை விடுவிப்பதில் கடற்படையினரின் இழுத்தடிப்பு காணப்பட்டது. காணியை படையினர் வழங்குவது தொடர்பாக சாதகமான முடிவுகள் இல்லை.

ஆகவே காரைநகர் பிரதேசத்தில் வேறு ஒரு காணியை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் அதிலும் சாதகமான முடிவுகள் கிடைக்கவில்லை.

ஆனால் வீட்டுத் திட்டத்தை நவம்பர் மாத காலப் பகுதியில் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆகவே வீட்டுத்திட்டத்தை தற்போது சங்கானைப் பிரதேசத்தில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக அத்திபாரம் போடும் பணிகள் தாமதமாகின்றன.

விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# கிறுக்கப்பட்ட நாணயத்தாள் இனி ஏற்கப்படாது

## மத்திய வங்கி அறிவிப்பு



இத்தகைய நாணயத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எழுது கருவிகளால் கிறுக்கப்பட்ட, வேண்டுமென்றே சேதப்படுத்தப்பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அல்லது உருச் சிதைக்கப்பட்ட நாணயத்தாள்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்குப் பின்னர் செல்லுபடியாகாது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இவ்வாறான நாணயத்தாள்கள் எதிர்வரும் 31ஆம் திகதியின் பின்னர் வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும், அவை பெறுமதியற்றவையாகி விடும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், நாணயத்தாள்களின் மீது எழுதுதல், வரைதல், முத்திரையிடல், வெட்டுதல் அல்லது சேதப்படுத்தல் தண்டனைக்குரிய குற்றம் என்றும் மத்திய வங்கி எச்சரித்துள்ளது. (5)

## சபையில் தகாத வார்த்தைகளால் மோதிக் கொண்ட உறுப்பினர்கள்



கொழும்பு, டிசெ. 2

நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, அமைச்சர் சரத் பொன்சேகாவும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகேயும் தகாத வார்த்தைகளால் நேற்றுமுன்தினம் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வரவு - செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் அமைச்சர் சரத் பொன்சேகாவின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் குறித்த விவாதம் இடம்பெற்றது.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே, அமைச்சர் சரத் பொன்சேகாவைத் தனிப்பட்ட முறையில் விமர்சித்து அவமானப்படுத்தினார்.

இதையடுத்து சரத் பொன்சேகாவுக்கும் காமினி லொக்குகேக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இருவரும் ஒருவர் மீது மற்றவர் மிருகங்களின் பெயர்களைக் கூறியும் இழிவான சொற்களாலும் விமர்சித்தனர்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இரண்டு உறுப்பினர்களும் பயன்படுத்திய நாடாளுமன்ற மொழிக்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பதிவேடுகளில் இருந்து நீக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், 'இரண்டு பேரும் என்ன செய்கிறீர்கள்? நீங்கள் நாடாளுமன்றத்தையும், உங்களைத் தெரிவுசெய்த மக்களையும் இழிவுபடுத்துகிறீர்கள். வேறெங்காவது போய் உங்கள் விவாதத்தை வைத்துக் கொள்ளுங்கள்' என்று பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். (5)

## நாடாளுமன்றத்துக்கு வெள்ள அபாயம்!

கொழும்பு, டிசெ. 2

நாட்டில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக தியவன்னாவ ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்து வருவதால் நாடாளுமன்றத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாள்களாக நாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நாட்டில் காணப்படும் பல ஆறுகளின் நீர்மட்டம் தொடர்ச்சியாக உயர்வடைந்து வருகின்றது.

இந்த நிலையில், தியவன்னாவ ஓயாவின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்து வருகின்றது. நாடாளுமன்றத்தைச் சுற்றியும் தியவன்னாவ ஓயா ஓடுவதால் நாடாளுமன்றத்துக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரைத் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (5)

## மைத்திரியின் சகோதரர் கொலை: குற்றவாளிக்கு 18 ஆண்டுகள் சிறை



கொழும்பு, டிசெ. 2

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரைப் படுகொலை செய்த குற்றவாளிக்கு 18 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட பிரியந்த சிறிசேனவின் மனைவிக்குப் பத்து இலட்சம் ரூபா இழப்பீடும் நீதிமன்றத்துக்கு அபராதத் தொகையாக 20 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தத் தவறினால் மேலதிகமாக இரண்டு வருட சிறைத்தண்டனையும், தண்டத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஆறு மாதச் சிறைத்தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் நீதிபதி நிமல் ரணவீர தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேன படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## யாழ்ப்பாணத்தில் 'ஹெரோயின் ரொபி'

### புத்திக பத்திரண எம்.பி. சபையில் பகீர் தகவல்



கொழும்பு, டிசெ. 2

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து 'ஹெரோயின் ரொபி' விற்கப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்திடம், புத்திக பத்திரண கேள்வி எழுப்பியிருந்தார்.

'பிரபல பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளுக்குப் பியர் நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றனவா? பாடசாலை மாணவர்கள் இதன்மூலம் போதைப் பொருள் பாவனைக்குத் தூண்டப்படுகின்றார்கள் என்பதைக் கல்வி அமைச்சர் ஏற்றுக் கொள்வாரா?' என்றும் கேள்வி முன்வைத்தார்.

அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ், அனுசரணை வழங்குவதற்கு அவ்வாறான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்று பதிலளித்தார்.

புத்திக பத்திரண, பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்துக்குள் இல்லாவிட்டாலும், போட்டிகள் நடைபெறுகின்ற பாடசாலைகளுடன் இணைந்த மைதானங்களுக்கு, மிகவும் அண்மையில் இவ்வாறு பியர் விற்பனை செய்யப்படுகின்றது. பியரில் ஆரம்பிப்பதுதான், இறுதியில் செறிவுகூடிய மதுபானத்தைப் பருகும்வரை செல்லும். பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். இதேவேளை யாழ்ப்பாணத்தில், ஹெரோயின் கலந்த 50 ரொபிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதுவும் மாணவர்களை இலக்குவைத்தே முன்னெடுக்கப்படுகின்றது, என்று குறிப்பிட்டார்.

இவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் அகில விராஜ் காரியவசம், பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு, அவற்றை முற்றாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)



## கனடாவிலிருந்து தமிழ்க் குடும்பம் நாடு கடத்தல்

கொழும்பு, டிசெ. 2

கனடாவில் இருந்து தமிழ் மாணவியும் அவரது குடும்பத்தினரும் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளதாகக் கனேடிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

21 வயதான லியோனி பவித்ரா லோரன்ஸ் என்ற மாணவியின் குடியுரிமையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவரும் அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இவர்களின் நாடு கடத்தலைத் தடுத்து நிறுத்துமாறு கனேடிய அரசியல்வாதிகள் மற்றும் அந்த நாட்டு மக்கள் அழுத்தம் கொடுத்தபோதும், அது குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'இலங்கைக் குடும்பத்தை நாடு கடத்த எடுத்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன்' என்று ஜனநாயகக் கட்சி உறுப்பினர் அலெக்ஸ்ஸாண்டர் தெரிவித்தார். (5)

## மகனுக்கு நல்வழிபுகட்ட முற்பட்ட தாய் தீயில் எரிந்து அநியாய உயிரிழப்பு

### பிங்கிரியவில் சோகச் சம்பவம்

கொழும்பு, டிசெ. 2

பாடசாலைக்குச் செல்லாத மகனை நல்வழிப்படுத்தும் நோக்கில் தாய் எடுத்த முடிவு, அவரது உயிரைப் பறித்துள்ளது. இந்தச் சோகச் சம்பவம் புத்தளம் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாடசாலைக்குச் செல்லாது இருக்கும் தனது ஒரே மகனைத் திருத்தும் நோக்கில் தாய் மண்ணெண்ணெயை உடலில் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளப் போவதாகத் தீக்குச்சியை பற்ற வைத்து எச்சரிக்கை விடுத்தபோது தவறுதலாக உடலில் தீப் பற்றி உடல் முழுவதும் கருகிப் பரிதாபமாக உயிரிழந்தார்.

மனைவிக்கும் மகனுக்கும் இடையில் அடிக்கடி சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் இதன் போது பல தடவைகள் இவ்வாறு தனது மனைவி தற்கொலை செய்வதாக மகனை எச்சரித்ததாகவும் உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்தார். (5)

## யானைச் சின்னத்தில் போட்டியிட முற்போக்குக் கூட்டணி முடிவு

### இறுதி முடிவெடுக்க டிசெ. 5இல் பேச்சு

கொழும்பு, டிசெ. 2

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி யானைச் சின்னத்தில் போட்டியிட முடிவு செய்து விட்டதாக அந்தக் கூட்டணியின் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அடுத்தாண்டு பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையகம் அறிவித்தது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியில் களமிறங்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தொகுதிப் பங்கீடு, போட்டியிடும் சின்னம் குறித்துப் பேச்சுகளை நடத்தி வருகின்றது.

எதிர்வரும் 5ஆம் திகதி இறுதி முடிவெடுக்கும் முகமாக கூட்டணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. ஏற்கனவே நுவரெலியா மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிடக் கூட்டணி முடிவு செய்துள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களில் எவ்வாறு போட்டியிடுவது மற்றும் தொகுதி ஒதுக்கீடு குறித்து இறுதி முடிவை எடுக்கும் முகமாகவே எதிர்வரும் 5ஆம் திகதி சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (5)

## அமைச்சரவையில் இருந்ததற்காகவே நான் சிறை சென்றிருக்கவேண்டும்

### விஜிதமுனி சொய்சா சபையில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவையில் இருந்தமைக்காகவே நான் சிறைக்குச் சென்றிருக்க வேண்டும் என்று அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு முன்னதாக உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே திட்டமிடப்பட்டுள்ள வானூர்திக் கொள்வனவு தொடர்பில் நானும் சிறைசெல்ல வேண்டியேற்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரவை அமைச்சர் என்ற அடிப்படையில் நாமும் அந்தக் கூட்டுப் பொறுப்பைக் கொண்டிருக்கிறோம். நான் சிறை செல்ல வேண்டியிருப்பது கடந்த அரசின் அமைச்சரவையில் அங்கம் வகித்தமைக்காகவே அன்றி தற்போதைய அரசின் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதற்காக அல்ல. என்னைச் சிறைக்கு அனுப்பாமல் இருப்பதற்காகத் தற்போதைய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (5.31)

# 'போதையற்ற இலங்கை' கொள்கை இன்னும் இருக்கிறதா?

## மகிந்த அணிக்கு வந்த சந்தேகம்

கொழும்பு, டிசெ. 2

அலோசியஸின் பியர் உற்பத்தி நிறுவனத்துக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. பியருக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. போதையற்ற இலங்கையைக் கட்டியெழுப்பும் கொள்கையைக் கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதனை அனுமதிக்கிறாரா என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மதுபான உற்பத்திக்குச் சிறப்பு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. பியர் விலை குறைக்கப்பட்டுள்ளது.

அலோசியஸின் பியர் உற்பத்தி நிறுவனத்துக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. போதையற்ற இலங்கையைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டுள்ள அரச தலைவர் அனுமதிக்கிறாரா? என்று கேள்வி எழுப்பினார்.

மகிந்த அணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான அருந்திக பெர்னாண்டோ, கிராமிய சுதேச தொழிலான கள் உற்பத்தி, விற்பனை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மதுபான உற்பத்தியை வீழ்த்தி பியர் உற்பத்தியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசுக்கு நெருக்கமான பியர், மதுபானக் கம்பனிகளுக்குச் சலுகை வழங்கப்படுகிறது - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முதுகுமாரண, கடந்த நான்கு போகங்களில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டது. எமது ஆட்சியில் இந்த நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தது. இறைவனின் சாபத்தால் தற்போதைய அரசின் காலத்தில் அரிசி உற்பத்தி குறைவடைந்துள்ளது. இந்த மக்களுக்கு எதி ரான ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கு அனைவரும் அணி திரள வேண்டும் - என்றார். (5,31)


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை பஞ்சலிங்கம்

(உரிமையாளர், ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ், தாவடிச்சந்தி)



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சலிங்கம் (30.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாணிக்கவாசகர், அருளம்பலம், நவரத்தினம், சொர்ணபுஸ்பம் ஆகியோரின் அன்புச்சகோ தரரும் பகீரதன் (சுவிஸ்), கிரிரதன், ஜெயதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் மேனகா (சுவிஸ்), சுகல்யா, பாலகுமாரா ஆகியோரின் அன்பு மாமனா ரும் நிலுக்ஷன், ஜனுக்ஷன், திஷானா, கிதுஜா காலஞ்சென்ற ஹரிணி மற்றும் மதுகிருஷ்ணா ஆகியோரின் அன்புப்பேரனும் இந்துஷன், தெமிஷன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2017.12.03) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
தாவடி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி இராசம்மா பொன்னையா

யாழ். சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னையா 30.11.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சரோசம்மா(சறோ), மதிவகுணன்(மதி), சிவயோகநாதன்(சிவா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசன், செல்வராணி, மிதிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, தருமு மற்றும் சரஸ்வதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேணுகா பவான், பிரமிளா, நிரோஷன், கீத்தா,கேமலன், தீபன், ஸ்ரீமாலினி, ரூபன், டேனோஜா, ஆரணி, ஆர்த்தி, நிரோஜன், அபிஷா, ஆருஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிநிஷா, ஜிதுஷிகா, எமேஜிதா, கவிப்ரஷாட் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 565 9966/021 321 6444


# 'ஓட்டோ' கொள்வனவுபோல் வானூர்திக் கொள்வனவு

## குடும்ப சுகத்துக்காக மகிந்த செய்த பாவத்தை இந்த அரசே சுமக்கிறது - கபீர் ஹாசிம்



கொழும்பு, டிசெ. 2

ஒழுங்கு முறையற்ற ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டுக் குடும்ப சுகபோகத்துக்காக முச்சக்கர வண்டிக் கொள்வனவு செய்வது போன்று ஏ 350 ரக வானூர்தியைக் கொள்வனவு செய்தமையின் பாவத்தை நாமே சுமக்கின்றோம் என்று அரச தொழில் முயற்சிகள் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முன்னைய ஆட்சியின்போது இழைத்த தவறின் பாவத்தை நாமே சுமக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தால், குடும்ப சுகபோகத்துக்காக முச்சக்கர வண்டிக் கொள்வனவு செய்வதைப் போன்று, ஏ350 ரக வானூர்திக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டனர். இதனால் மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.

ஏ350 ரக வானூர்தி இலங்கைக்கு ஒருபோதும் ஒத்துவராது. இந்த வானூர்தியால் 14 மணிநேரம் பயணிக்க முடியும். இலங்கையிலிருந்தான அதிகபட்ச வானூர்திப் பயணமாக 11 மணிநேரம் உள்ளது. இந்த வானூர்தியை 300 இலட்சம் டொலரை மேலதிகமாக வழங்கிக் கொள்வனவு செய்தனர். ஒழுங்கு முறையற்ற ஒப்பந்தத்தைக்கைச்சாத்திட்டனர். தற்போது எமக்கேநெருக்கடிஏற்பட்டுள்ளது. 98 பில்லியன் டொலரை இழப்பீடாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது. இந்த வானூர்தியை நாம் சேவைக்குப் பயன்படுத்தினால் நாளாந்தம் 4.6 பில்லியன் ரூபா விரயம் ஏற்படும், இவ்வாறு முன்னைய அரசால் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களை நாமே போக்கவேண்டியுள்ளது - என்றார். (5,31)

# அரபு நாட்டுத் தூதரகங்கள் ஊடாக அனுமதியின்றி மதுபானம் இறக்குமதி

## சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 2

அரபு நாட்டுத் தூதரகங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு மதுபானங்கள் அனுமதியில்லாமல் இறக்குமதி செய்யப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் தமக்குத் தேவையான மதுபானங்களைக் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சின் ஊடாக இறக்குமதி செய்ய முடியும். இலங்கையில் காணப்படும் அரபு நாடுகளின் தூதரகங்கள் மதுபானங்களைப் பெற்றுக்கொள்வதில்லை. என்றாலும் இதனைப் பயன்படுத்தி ஒரு சிலர் அரபு நாட்டுத் தூதரகங்களின் பெயரைப் பயன்படுத்தி மதுபானங்களை அனுமதியின்றி இறக்குமதி செய்து வருகின்றனர்.

இதற்கான முழுமையான ஆதாரம் என்னிடம் உள்ளது - என்றார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் பதிலளிக்கும் போது, அரபு நாட்டுத் தூதரகங்களின் பெயரைப் பயன்படுத்தி எவராவது மதுபானங்கள் இறக்குமதி செய்தமையை அறிந்தால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5,31)


## 12ஆம் ஆண்டு நினைவுச் சங்கமம்



அமரர் செல்லையா

### தம்பித்துரை

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை உப தலைவர், கொழும்புதுறைமுக அதிகாரசபை அத்தியட்சகர்)

தோற்றம்
17.06.1931

மறைவு
14.12.2005

திதி: சதுர்த்தசி (02.12.2017)

சுட்டெரிக்கும் சூரியன்கூட எனை சுட்டெரித்தது சிலபொழுது – ஆனால்
கட்டுக்கோப்போடு அரவணைத்த தந்தையே சுட்டதில்லையே!
வார்த்தைகளால் கூட எத்தனையோ எதிர்பார்ப்புக்களை சுமந்தவர் நீங்கள்
அத்தனையும் நிறைவேற்ற ஆண்டவன் விடவில்லை
சிந்தையெல்லாம் ஏதேதோ சிந்தனைகளோடு
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்று
அந்திபகலாக அறிவுணர்ந்து வளர்த்தவர் நீங்கள்
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் பயணிப்போம்

"ராஜ்குழல்"
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

# 2 பிள்ளைகளின் தாய் சுட்டுப் படுகொலை!

## சினிமாப் பாணியில் துப்பாக்கிதாரிகள் கைவரிசை

கொட்டாவ, பன்னிப்பிட்டிய பெண்கள் இல்லம் அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள வீட்டில் பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு வேளை பெண் மீது இனந்தெரியாத சிலர் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான பெண், இரு பிள்ளைகளின் தாயார் எனப்பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின்போது தெரிய வந்தது.

முழுமையாக முகத்தை மறைத்துக்கொண்டு குறித்த பெண்ணின் வீட்டுக்குள் இரவு வேளையில் புகுந்த இருவராலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பெண் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போது அவர் தப்பிக்கும் வகையில் தனது தாய், தந்தையைக் கட்டிப்பிடித்துக் கொண்டார். எனினும், துப்பாக்கிதாரிகள் அவர் குளறியபோதும் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவரின் உடல் மீது 14க்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த இந்தப் பெண் தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளதை முன்கூட்டியே அறிந்து பல பிரதேசங்களில் மாறி மாறி வசித்து வந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (5)

## வேலை ஆள்கள் தேவை

இல183.ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு றொட்டி வேலை (றைஸ், கொத்து போடுபவர்) உணவு பரிமாறுபவர், சமையல் உதவி ஆள் (வெட்டு வேலை) உணவு பொதிசெய்பவர், போன்ற வேலையாள்கள் தேவை.

தொடர்பு :- 077 465 2860

## பெயர் மாற்றம்

குளமங்கால், மல்லாகத்தைச் சேர்ந்த அலன்பயஸ் ஜோகேஸ்குமார் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து அலன் எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.


அலன்.

## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி மீசாலை வடக்கு, புத்தூர் சந்தியில் நவீன வசதிகளைக் கொண்ட 3 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 076 810 8932

## அர்ப்பணிப்புடன் 66 ஆவது அகவையில்



சமூகஜோதி

### திரு.வாமதேவா தியாகேந்திரன்

இன்று (02.12.2017) சனிக்கிழமை தனது 66 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பல லட்ச ரூபா அறப்பணிகளை மேற்கொள்ளும் எமது நிறுவனத் தலைவர் உயர்திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களை அவரது சமூகசேவை தொடர்வதற்குப் பல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள்**
**தியாகி அறக்கொடை நிறுவனம்**
**527, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

Happy Birthday!

"அறப்பணியே எமது முதற்பணி"

## ஒளிரும் வாழ்வு - புதுக்குடியிருப்பு பிரதேசம்

(மாற்றுத்திறனாளிகள் அமைப்பு)

அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு - திகதி பிற்போடப்பட்டமை தொடர்பானது

எமது அமைப்பினால் எதிர்வரும் 03.12.2017 அன்று அதிஸ்டம் பார்க்கப்பட இருந்த அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் 15.04.2018 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அத் திகதிவரை அதிஸ்ட இலாபச் சீட்டு விற்பனைகள் இடம்பெறும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு : 077 204 9344, 077 849 1233

இ.அம்பிகைபாலன்
செயலாளர் - ஒளிரும் வாழ்வு



## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:

ஸ்ரீகௌசிக அகஸ்தியநாடி சோதிட நிலையம் (Pvt) Ltd.

P.ஜெய்சங்கர்

யாழ்ப்பாணம்:
384 A, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944

கொழும்பு:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை,
பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180
011 258 6208

மட்டக்களப்பு: கிளை: 59, புகையிரத வீதி, மட்டக்களப்பு.
065 222 4307

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் சமூகஜோதி

## திரு.வாமதேவா தியாகேந்திரன்

அவர்களின் 66 ஆவது அகவையான இன்றைய நாளில் (02.12.2017) நற்பணிகளுக்காக 50 லட்சம் ரூபாவினை வாரிவழங்குகின்றார்

Best Wishes



இன்றைய சமுதாயத்தில் பலர் சுயநலத்துடன் தன் குடும்பம், தான் சார்ந்த குடும்பம் என்ற சிறிய வட்டத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற காலகட்டத்தில் இவர் சற்று வித்தியாசமான பார்வையில் தனது சொந்த நிதிப்பங்களிப்புடன் சுவிஸ் நாட்டில் இருந்து கொண்டு தனது சொந்த மண்ணில் பலர் பிரமிக்க தக்க வகையில் தியாகி அறக்கொடை நிறுவனம் என்ற சமூகசேவை அமைப்பைத் ஸ்தாபித்து அதனூடாக பல செயற்திட்டங்களை நலிவுற்ற மக்களுக்காக செயற்படுத்தி வருகின்றார்.

அது மட்டுமின்றி தன்னுடைய சொந்த நிர்வாகத் திறமை மூலமாக இங்கு ஒரு திறமையான நிர்வாகக் கட்டமைப்பை (Administration Structure) உருவாக்கி அதனை வழிநடத்தி தனது சொந்த கருத்தியல் அடிப்படையில் செயற்திட்டங்களை உருவாக்கி அதன் அடிப்படையில் வெற்றிகரமாக அமுல்படுத்திவருகின்றார்.

பொதுவாக நிறுவனங்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பின்பற்றும் நடைமுறைகளில் இருந்து இந் நிறுவனத்தின் பிரதான வேறுபாடு என்னவெனில் இவருடைய பிரதான அணுகுமுறை, மனித உறவுகள் அணுகுமுறை (Human Relations Approach) அதாவது மனித உறவுகளுக்கு முன்னுரிமையளித்து செயல்திட்டங்களை அமுல்படுத்துவதாகும் ஆனால் மற்றைய நிறுவனங்கள் தங்களது செயற்திட்டங்களை செயல்திட்ட கருத்திட்ட அடிப்டையில் (Project Criteria)தான் தாங்கள் செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் Everybody is Human in front of me அதாவது எனது பார்வையின் முன்னிலையில் ஒவ்வொருவரும் மனிதர்கள் என்ற கொள்கை அமுல்படுத்தப் படுகின்றது. அதாவது மனித நேயத்திற்கு முன் இன மத வேறுபாடு என்பது கருத்தில் எடுக்கப்படுவதில்லை. அதன் அடிப்படையில் இந் நிறுவனத்தின் செயல்திட்டங்கள் மனிதர்களை சமத்துவம் ஆக்கும் நோக்கில் இலங்கை முழுவதும் தங்கள் செயல்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர்.

இவர் பல ஆண்டுகளாக கோடிக் கணக்கான ரூபாயினை மாதாந்தம் பின்வரும் வாழ்வாதார செயற்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றார்.

**1. 1 கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டம் :-**

- **பாடசாலை மாணவர்களுக்கான உதவி**
  மிகவும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மாதாந்தம் தலா 500/- வழங்கப்படுகின்றது.
- கண்பார்வை குறைந்து கற்றல் செயற்பாட்டில் பாதிப்புற்ற மாணவர்களின் கண்களை உரிய முறையில் பரிசோதித்து இலவசமாக கண்ணாடி வழங்கப்பட்டு வருகின்றது.
- **முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவி**
  பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மிகவும் வசதி குறைந்த முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவியாக தலா 1000/- வழங்கப்படுகின்றது.
- சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சில பிரதேச செயலகங்களினால் கொண்டாடப்படும் சிறுவர்,முதியோர் தின விழாவிற்கு அன்பளிப்பு பொருட்கள் எம்மால் வழங்கப்பட்டு வருகின்றது.
- **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**
  பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவைக்காக மாதாந்தம் தலா 1000/- வழங்கப்படுகின்றது.

**2. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்திட்டம்**

- கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட மிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வருமானத்தையீட்ட தொடங்கும் வரை அவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா 500/- தொடக்கம் 2000/- வரை வழங்கப்படுகின்றது.
- பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர் சங்கங்கள், மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

**3. மருத்துவ உதவிச் செயற்திட்டம்**

- **புற்று நோயாளருக்கான உதவி**
  புற்று நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய நிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா 1000/- வழங்கப்படுகின்றது.
- **முதியவர்களுக்கான மருத்துவ உதவி**
  பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூகசேவை திணைக்களத்தினால் வைத்திய உதவி போதியளவு பெறமுடியாத வறுமைக்குட்பட்ட முதியோர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் நடாத்தப்பட்டு வருகின்றது.
- **ஏனைய மருத்துவ உதவி**
  மேலதிகசிகிச்சைக்காக கொழும்பு செல்லும் மிகவும் வசதி குறைந்த நோயாளருக்கு போக்குவரத்து, செலவுக்காகவும், மருந்துச் செலவுக்காகவும் உதவி வழங்கப்படுகின்றது

**4. ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்திட்டம்**

- ஆதரவற்று வறுமை கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/- வழங்கப்படுகின்றது.

**5. மகளீர் மீள் எழுச்சித்திட்டம் -**

- பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் வறுமைக்குட்பட் குடும்பங்களில் வயது வந்தும் திருமணமாகாத பெண்களுக்கு மாதாந்தம் 1000/- ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் 110 பெண்பிள்ளைகளுக்கான சேமிப்பாக 12 இலட்சம் ரூபா சேமித்துள்ளோம். அடுத்த ஆண்டு அப்பயனாளிகளின் வாழ்வாதாரதிட்டத்தில் முதலீடு செய்ய ஊக்குவிக்க உள்ளோம்

**6. தாய் சேய் நலத்திட்டம்**

- வறுமைக் கோட்டிற்குட்டபட்ட ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்கு மாதாந்தம் 1000/- பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுகின்றது.

**7. சூழல் பாதுகாப்புத்திட்டம்**

- இத்திட்டத்தின் ஊடாக செம்மணி இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு. இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது அத்துடன் மாதம் தோறும் இந்த மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்பரவு செய்யப்பட்டுவருகின்றது.
- **குறிப்பிட்டளவு பயன்தரும் மரக்கன்றுகளையும் வழங்கி வருகின்றார்**

இதற்கு மேலதிகமாக தனது பிறந்த நாளன்று பெருந்தொகை நிதியினை விசேட செயற்திட்டங்களுக்காக ஒதுக்கி வந்துள்ளார்

இதன் அடிப்படையில் இம்முறையும் தனது பிறந்த தினத்தன்று பின்வரும் நற்பணிகளுக்காக 50 லட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்கின்றார்.

01) தான் கல்விகற்ற பாடசாலையான சென்ஜோன்ஸ் கல்லூரியின் கூடைப்பந்து மைதானத்திற்கு 10லட்சம் ரூபாயினை ஒதுக்கி வழங்கியுள்ளார்.
02) தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் விசேட மகப்பேற்று தேவையுள்ளவர்களுக்கான சிகிச்சை பிரிவின் அபிவிருத்திக்காக 5லட்சம் ரூபாயினை ஒதுக்கியுள்ளார்.
03) பார்வைக் குறைபாடுடைய பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதற்காக 250000.00 ரூபாயினை ஒதுக்கியுள்ளார்.
04) சிறுவர்களின் உடல் உள விருத்திக்கான முன்பள்ளி ஒன்றுக்கு 250000.00 ரூபா பெறுமதியான சிறுவர் விளையாட்டு உப கரணங்கள் கொடுக்கப்படவுள்ளது.
05) விசேடதேவை உடையவர்களுக்கு மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்குவதற்கென 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
06) சூழல் பாதுகாப்புத் செயற்திட்டங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதற்கு 150000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
07) வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதற்கு 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது
8) மாகாண சுகாதார பணிமனை ஊடாக பாடசாலை மாணவர்களிடையே ஊட்டச்சத்து மற்றும் சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக 2இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
09) பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
10) மகளிர் எழுச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக இணைத்துக்கொள்ள உள்ள பெண்களுக்கு 1 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
11) நிறுவன ஊழியர்களின் நிதிசார் நலச்செயற்பாட்டுக்கு 250000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
12) இதனைவிட மாதாந்த உதவி பெறுபவர்களுக்கான இன்றைய கொடுப்பனவுகள் இலங்கை பூராக 1500000.00 ரூபா வழங்கப்படுகிறது.
13) எமது நிறுவனத்தால் செம்மணி மயானத்தில நடப்பட்ட மரங்கள் பராமரிப்பதற்கு 25000.00 ஒதுக்கப்பட்டுள்ளது.
14) பாடசாலை மட்டத்தில் 2ம் மொழி கல்வி அமுலாக்கத்திற்கு 40000.00 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது
15) முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை புத்தகப்பை 35000.00 ரூபா ஒதுக்கப்ட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு செயல் வீரன் தனது 66வது அகவையில் காலடிவைக்கின்ற போது எல்லா பயனாளிகளும் ஊழியர்களும் இப்பிரதேச மக்களும் அறப்பணி தொடர்வதற்கு இவர் பல்லாண்டு காலம் வாழ இறைவன் அருள்புரிவராக என வாழ்த்துகின்றோம்.

**"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்**
**ஆனால் இறப்பு என்பது சரித்திரமாக இருக்கட்டும்"**

சி. மாணிக்கராசா
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

# ஆசிரிய உதவியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு போதாது!

## அநுரகுமார திசாநாயக்க சபையில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 2

ஆசிரிய உதவியாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதாது. அவர்கள் பெற்றோரில் தங்கியிருக்கவேண்டிய நிலைமையே உள்ளது. கல்வி அமைச்சர் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை முன்வைத்தார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது.

'வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளின் பின்தங்கிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்குக் கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைச் சித்தியை அடிப்படையாகக் கொண்டு 3 ஆயிரம் பேர் ஆசிரிய உதவியாளர்களாக இணைத்து கொள்ளப்பட்டனர். ஆசிரிய பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் ஆசிரிய தரங்களில் இணைத்துக் கொள்வதற்குத் தகுதி பெற்றுள்ளனர். ஆனாலும் அவர்கள் ஆசிரிய தரத்தினுள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

ஆசிரிய உதவியாளர்களுக்கு 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. அந்தக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. தற்போதைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ற வருமானமாக இதனைக் கருத முடியாது. இந்தக் கொடுப்பனவுடன் மரியாதையாக வாழ முடியாத நிலைமை உள்ளது. ஆசிரியர் உதவியாளர் என்ற பெயருடன் மாத்திரமே அவர்களால் வாழமுடியுமாக உள்ளது. பயிற்சி பெறுபவர்களுக்கு உரிய விடுதி வசதிகள் இல்லாமையால் பிரத்தியேக விடுதிகளில் இருந்து பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் தமது செலவினங்களுக்குப் பெற்றோரை நாட வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு எந்த வகையிலும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. இதனைக் கல்வி அமைச்சர் ஏற்றுக் கொள்வாரா? ஆசிரிய உதவியாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமா? ஆசிரியர்கள் உரியதரநிலைக்குள் இணைத்துக்கொள்ளப்படுவார்களா? அதிகரிக்கப்படும் சம்பளம் உரிய நேரத்திற்கு வழங்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் அகிலவிராஜ். ஆசிரிய உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் இரண்டுவருடப்பயிற்சிச் சான்றிதழைப் பெற்றதன் பின்னரே ஆசிரிய படித்தரங்களுக்குள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அதற்கு முன்னர் இணைத்து கொள்ளப்பட மாட்டார்கள். எமது அரசு 6 ஆயிரம் ரூபாவாக இருந்த கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தது. ஆசிரிய உதவியாளர்கள் பயிற்சி முடித்த பின்னர் ஆசிரிய சேவையின் உரிய தரங்களுக்குரிய சம்பளத்துடன் உள்வாங்கப்படுவார்கள் - என்றார்.

(5.31)


6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்
பண்டிதர் முருகேசு ஆனந்தசிவம்
(குளோபல் தொலைத் தொடர்பக முன்னாள் உரிமையாளர் - கொடிகாமம், எருவன் வரணி)
மலர்வு 28.03.1949
உதிர்வு 08.12.2011

திருமதி
உமையம்மை சிவபாதம்
(ஓய்வு நிலை மருந்தாளர் -எருவன் வரணி குரும்பசிட்டி)
மலர்வு 08.04.1944
உதிர்வு 26.08.2011

திதி: அபரபக்க சதுர்த்தசி - 02.12.2017

"ஆறுமனமே ஆறு ஆண்டவன் கட்டளை ஆறு
ஆறு ஆண்டு ஆயினவே சகோதரர் குமரஜோதியில் கலந்து"

இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
சாங்கத்தானை, சாவகச்சேரி.

பராசக்தி ஆனந்தசிவம்
குடும்ப உறவுகள்.

45 ஆம் நாள் நினைவஞ்சலி

கிருபராஜ்
எபனேசர் யேசுதாஸ்
B.B.A.(Hons)
(பிரதி முகாமையாளர், உள்ளக கணக்காய்வு, தலைமை காரியாலயம், மக்கள் வங்கி)

அன்னை மடியில்
03 . 12 . 1984

இறைவன் அடியில்
21 . 10 . 2017




நேசம் வென்றவன் யேசு,
நாள்கள் எத்தனை நகர்ந்தாலும்
நாளும் நினைவாய் இருப்பவன் நீ
பூக்கள் போல மலர்ந்திருந்தாய்
பூரிப்போடு உதவி மகிழ்ந்தாய்
வங்கித் துறைக்கு வரமாய் வந்தாய்
வலிகள் தாங்கி உரமாய் உயர்ந்தாய்
நண்பர் என்று நாம் இருக்க - நம்பாமல்
நயவஞ்சகர் சூழ்ச்சியில் மாண்டது ஏனோ ?
ஏங்கித் தவிக்க வைத்ததேன் தோழா
எம்மை ஏன் பிரிந்தாய் பேசடா தாஸ்
தூங்கிப்போக துணிவு கொண்டாயோ
தூக்கிப் போக எமை வைத்தாயோ
தாங்கிக் கொள்ள முடியவில்லை
நண்பனே நீ எம் நெஞ்சிலே வாழ்வாய்
நண்பனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தனபாக்கிய லெட்சுமி அழகரத்தினம்
மலர்வு 16.09.1941
உதிர்வு 12.12.2016
திதி: 02.12.2017

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ!
ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

தேவராசா
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



திருமதி மனோரஞ்சிதம் பொன்னுத்துரை (லண்டன்)

அன்பின் பெரியம்மா!
தாய் தீபம் அணைய துணைத் தீபமாய் நின்றாயே
அம்மா இல்லையென அழுகையிலே ஆற்றவந்த பெரியதாயே!
நீ இல்லையென அழுகையிலே ஓடிவருவோர் யாருளரோ?
உன் பிரிவால் நான் கதறி அழும் கண்ணீரை நீ அறிவாயோ?
நான் அறியேன் தாயே!

ஈர விழிகளுடன்....
பெறாமகள் :- கல்யாணி மதிவர்ணன் (ராஜி) குடும்பத்தினர்.

233, K.K.S. Road,
Chunnakam

இறுதிக்கிரியைகள் 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

ஆறாத்துயரில்
6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 04 . 1940
மறைவு 08 . 12 . 2011

அமரர்
இராமலிங்கம் தளையசிங்கம்



பிரிவினை எதுவுமின்றி
பரிவுடன் எமைக்காத்த
பக்குவத் தந்தையே !
மேதினியில் சிறப்புடன் நாம் வாழ
மெழுகாக உருகி வாழ்வு செய்தீர்
ஆறு ஆண்டுகள் ஓடினாலும்
ஆறாத்துயரில் உங்கள் நினைவுடன்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## மண்சரிவு இடரால் போக்குவரத்துத் தடை

மாத்தறை,டிசெ.2
மாத்தறை ஹெலியகந்த பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட மண்சரிவால் மாத்தறை கதிர்காமம் கடற்கரை சாலை தடைப்பட்டது.
ஹெலியகந்த பகுதியில் உள்ள மலையின் ஒரு பகுதி திடீரென சரிந்தது.
மாத்தறையிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணிக்கும் வாகனங்களை மாத்தறை மெத்தவத்தை ஊடாக பயணிக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ற-ரி5)

# வாசிப்பை ஊக்குவிப்பதால் சமூகத்தை முன்னேற்றலாம்

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு





மட்டக்களப்பு,டிசெ.2
வாசிப்பை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தினூடாக நீண்ட காலத்துக்கு எமது சமூகத்தை மேன்மை தங்கிய சமூகமாக மாற்றலாம்.
இவ்வாறு தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மனித வள அபிவிருத்திச் சபையின் உதவிப்பணிப்பாளரும் எழுத்தாளருமான சிவகுரு தணிகசீலன் தெரிவித்தார்.
மட்டக்களப்புச் செட்டிப்பாளையம் பொதுநூலகத்தின் பரிசளிப்பு விழா நேற்று செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
வாசிப்புச் செயற்பாடுகள் என்பது மாணவர்கள் மாத்திரமின்றி சமூகத்திலும் ஒரு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவன.
பாடசாலைகளிலும் இவ்வாறான வாசிப்புச் செயற்றிட்டங்களை ஏற்படுத்துவதனூடாக நீண்ட காலத்தில் எமது சமூகத்தை மேன்மை தங்கிய சமூகமாக மாற்றலாம். உலகத்திலே அழகாகப் பேசக்கூடியவர்கள் தமிழர்கள். இந்தியாவின் கல்விமான்கள் அதிகமானோர் நாசாவில் பணிபுரிகின்றனர் எனக் கூறுகின்றனர்.
மாணவர்கள் கல்வியில் மேன்மையுற வேண்டுமானால் பாடம் சம்பந்தப்பட்ட விடயங்களைவிட நாளாந்த விடயங்களையும் கற்றறிந்து கொள்ள வேண்டும். உலகமயமாக்கலை நாம் உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டுமாயின் வாசிப்புத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக் கழக மாணவர்கள் வரைக்கும் ஆழமாக வாசிக்க வேண்டும் அதன் மூலம் எதிர்காலத்தில் நாம் பலவற்றைச் சாதிக்கலாம் என்றார். (ற.ரி4,46)

## மீலாதுன் நபி விழா நேற்று மைத்திரி, ரணில் வாழ்த்து

கொழும்பு, டிசெ.2
இஸ்லாமியர்கள் மீலாதுன் நபி விழாவை நேற்றுக் கொண்டாடினர்.
தேசிய மீலாதுன் நிகழ்வுக்கு அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.
சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதுடன், பன்மைத்துவ சூழலில் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர் என அரசதலைவர் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.
இஸ்லாமியர்களின் இறுதி தூதுவரான நபிகள் நாயகத்தின் பிறந்த நாளில், அனைவருக்கும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று தலைமை அமைச்சர் தெரிவித்தார். (ற-ரி5)

## கொழும்பு கட்டாக்காலிகளை 15 ஆம் திகதிக்குள் அகற்றுக

### சம்பிக்க ரணவக்க அறிவுறுத்தல்



கொழும்பு, டிசெ.2
கொழும்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றிக்கொள்ள வேண்டும் என பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க அறிவுறுத்தியுள்ளார்.
கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.
அகற்றிக்கொள்ளப்படாத அனைத்து கால்நடைகளும், கால்நடை பண்ணைகளுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ற-ரி5)



கொழும்பு ஜம்பெட்டா மெதடிஸ்த திருச்சபை வாலிபர் சங்கத்தால் குருதிக்கொடை முகாம் ஒன்று நேற்று ஜம்பெட்டா திருச்சபை மண்டபத்தில் நடத்தப்பட்டது. "உதிரம் கொடுப்போம், உயிர் காப்போம்" எனும் தொனிபொருளில் முன்னெடுக் கப்பட்ட இந்த குருதிக்கொடை முகாமில் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ற-ரி5)





## பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய பேருந்து தரிப்பிடம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு,டிச.2
மட்டக்களப்பில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
அதற்கு எல்லாளன் பேருந்து தரிப்பு நிலையம் என பெயர் சூட்டப்பட்டது.
கடந்த மாதம் இரு சமூகங்களுக்கிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வாழைச்சேனை எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடமே திறந்து வைக்கப்பட்டது. கடந்த மாதம் பேருந்து தரிப்பு நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்பட்டதால் இப்பிரதேசத்தில் இரு சமூகங்களுக்கிடையில் பெரும் முறுகல் நிலையும் பதட்டமும் ஏற்பட்டிருந்தது. (ற)

## அனுமதியின்றி நியூஸிலாந்து செல்ல முற்பட்டோர் கைது

சிலாபம்,டிசெ.2
சட்டவிரோதமாக படகுமூலம் நியூஸிலாந்துக்குச் செல்ல முயன்ற 30 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சிலாபம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப் பட்டனர். அவர்களை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இவர்களிடையேயொருவர் திடீர் சுகயீனம் காரணமாக புத்தளம் வண்ணாத்திவில்லு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி4)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்



நுவரெலியா,டிசெ.2
காலி மாவட்டத்தில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப் பட்டது.
காலி பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 23 குடும்பங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் முற்பணம் காலி மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப் பட்டது.
இந்த உதவித் தொகையை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஏற்பாடு செய்திருந்தார்.
இயற்கை இடர் காரணமாக உயிரிழந்த மீனவர்கள் இருவரின் குடும்பங்க ளுக்கும் இறுதிக்கிரியைகளுக்காக தலா ஒரு லட்சம் வீதம் இழப்பீட்டு முற்பணம் வழங்கிகப் பட்டது.
நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய ஒரு வாரத்துக்கு தேவையான பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.
உணவு, உலர் உணவு, உடுதுணி, போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கப்கப்பட்டுள்ளன. (ற.ரி4)



பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே, ஈராக்குக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் ஈராக் இராணுவ அதிகாரிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஈராக்கில் திரேசா மேயின் பாதுகாப்பு பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது என்று ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# வடகொரியாவுடன உறவு தொடரும்

## அமெரிக்காவின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ. 2
வடகொரியாவுடனான உறவை முறித்துக்கொள்ள வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்தது.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. அந்த நாடு கடந்த புதன்கிழமையும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இந்த ஏவுகணை வடகொரியாவில் இருந்து புறப்பட்டுச் சென்று அமெரிக்காவின் வொஷிங்டன் நகரைத் தாக்கவல்லது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் இந்தச் சோதனைக்கு அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் தமது கண்டனத்தைத் தெரிவித்தன. ஐ.நா. சபையிலும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடகொரியாவுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அந்த நாட்டுடனான உறவைத் துண்டிக்க வேண்டும் என்று ரஷ்யாவிடம் அமெரிக்கா கோரிக்கை வைத்தது. இந்தக் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்துள்ளது.



இதுகுறித்து ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், “வடகொரியாவுடனான உறவை முறித்துக் கொள்வதை பாதகமாகவே நினைக்கிறோம். கடும் பொருளாதாரத் தடைகளை விதித்து வடகொரியாவை கோபப்படத் தூண்டி விட்டதே அமெரிக்காதான்.


தனிமைப்படுத்தப்பட்ட வட
அழிக்க அமெரிக்கா நினை
ரிக்காவின் நோக்கம் என்
யாவை அழிக்க அமெரிக்
தைத் தேடுகிறதா? அப்படி எ
அமெரிக்க அதிபர் உறுதி
என்று தெரிவித்தார்.



# இளவரசர் அப்துல்லா விடுதலையானார்

ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக நட்சத்திர விடுதியில் சிறைவைக்கப்பட்ட சவூதி இளவரசர் மித்தெப் பின் அப்துல்லா, இலங்கை மதிப்பில் சுமார் 15ஆயிரம் கோடி ரூபா கொடுத்து மூன்று வாரங்களுக்கு விடுதலை செய்யப்பட்டார்.

வளைகுடா நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவில் இந்த மாத ஆரம்பத்தில் ஊழல் தடுப்பு ஆணையத்தால், சவூதி அரேபியாவின் 11 மூத்த இளவரசர்கள், அமைச்சர்கள் மற்றும் முக்கிய பெருந்தொழில் அதிபர்கள் உட்பட 38 பேர் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். ஆணையத்தின் தலைவரான பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் 65 வயதான இளவரசர் மித்தெப் பின் அப்துல்லா இலங்கை மதிப்பில் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபா கொடுத்து மூன்று வாரங்களுக்கு விடுதலை பெற்றார். (ம)



# ஈரானில் நிலநடுக்கம்

தெஹ்ரோன், டிசெ. 2
ஈரானின் கொ்மான் நகரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஈரானின் கிழக்குப் பகுதியில் உள்ள கெர்மான் மாகாணத்தில் நேற்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுமார் 8 லட்சம் மக்கள் வசிக்கும் கெர்மான் நகரில் இருந்து 60 கி.மீ. தொலைவில் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் துருக்கி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திலும் உணரப்பட்டதாக தகவல் வெளியானது. (ம)

# ஹபீஸ் சஜிட் மீண்டும் 

இஸ்லாமபாத், டிசெ. 2
மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட ஹபீஸ் சஜிட் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார்.

ஹபீஸ் சஜிட் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். ஹபீஸின் விடுதலைக்கு இந்தியா உள்பட பன்னாட்டுச் சமூகம் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் பாகிஸ்தான் அரசு அவரை நேற்றுமுன்தினம் மீண்டும் கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது. (ம)



# கப்பலைத் தேடும் பணியை நிறுத்தியது ஆர்ஜென்ரீனா

பியூனஸ் ஏர்ஸ், நவ. 25
மாயமான நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணியை ஆர்ஜென்ரீனா நிறுத்தியுள்ளது.

ஆர்ஜென்ரீனா நாட்டுக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பலொன்று கடந்த 18ஆம் திகதியில் இருந்து மாயமாகியுள்ளதை அடுத்து அதைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பணியில் ரஷ்யாவும் இணைந்திருந்தது. எனினும் கப்பலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதையடுத்துக் கப்பலைத் தேடும் பணிகளை முடிவுக்குக் கொண்டுவருவதாக ஆர்ஜென்ரீனா அறிவித்துள்ளது. (ம)



கோப்புப்படம்

# காலம் பதில் சொல்லட்டும்

வியட்நாமைச் சேர்ந்தவர் 22 வயது நிகுயென் வான் ஹோவா. இவர் பத்திரிகையாளராக இருக்கிறார். கடந்த ஆண்டு பார்மோசா என்ற நிறுவனத்தின் இரசாயனக் கழிவுகள் கடற்கரையில் கலக்கப்பட்டதை ஆதாரத்துடன் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். இதன்விளைவாக 7 ஆண்டுகள் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தைவானைச் சேர்ந்த பார்மோசா பிளாஸ்டிக் தொழிற்சாலை ஹா டின் நகரில் செயல்பட்டு வருகிறது. ஆலையில் இருந்து வெளியேறும் சயனைட் உட்பட நச்சு இரசாயனக் கழிவுகளை, சாதாரண கழிவு வெளியேற்றும் குழாய் வழியாக கடற்கரையில் வெளியேற்றி வந்தனர். கடற்கரையில் 120 மைல் தூரத்துக்கு இந்தக் கழிவுகள் பரவிவிட்டன. 115 தொன் மீன்கள் இறந்து மிதந்துள்ளன.

இதனால் மீன்பிடித் தொழிலும் நலிவடைந்துவிட்டது. சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்துவிட்டது. இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நிலமும் நீர் ஆதாரங்களும் மாசடைந்திருக்கின்றன.

இதைத் தட்டிக்கேட்ட வான் ஹோவா மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டன. அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. இறுதியில் நீதிமன்றம், வான் ஹோவுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனையும் அதற்குப் பிறகு 3 ஆண்டுகள் வீட்டுக் காவலிலும் இருக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

காங் டின் என்ற வழக்கறிஞர் “இந்தத் தீர்ப்பு அதிர்ச்சியளிக்கிறது. எந்தக் குற்றவாளிக்கும் தனது தரப்பைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

டன்
ும்



# வடகொரிய விவகாரத்தில் சீனாவுடன் அமெ. பேச்சு

வொஷிங்டன், டிசெ. 2
வடகொரிய விவகாரம் தொடர்பில் சீனாவுடன் அமெரிக்கா நேற்றுமுன்தினம் முக்கிய பேச்சு நடத்தியது.
வடகொரியா கடந்த புதன்கிழமை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை நடத்தியது. இந்தச் சோதனையை அடுத்து மறுநாள் அதாவது நேற்றுமுன்தினம் ஐ.நா. சபை ஒன்றுகூடியது. இதில் வடகொரியாவுக்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
"போர் ஏற்பட்டால் வடகொரியாவை முழுவதுமாக அழிப்போம்" என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே எச்சரிக்கை விடுத்திருந்தார். அத்துடன் அவர் ஐக்கிய நாடுகள் சபைக்கான சீனாவின் பிரதித் தூதுவரையும் சந்தித்து பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் வடகொரியா மீது சீனா பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று ஹாலே வலியுறுத்தினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# சோமாலியத் தாக்குதலில் சாவு 521ஆக உயர்ந்தது



மொகடிஷு, டிசெ. 2
சோமாலியத் தலைநகர் மொகடிஷுவில் உள்ள விடுதியொன்றைக் குறிவைத்து கடந்த மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இரட்டைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 521ஆக உயர்ந்தது.
சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தம்மால் இயற்றப்பட்ட இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியை நாடெங்கிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்து அவை அரசுக்கு எதிராக போரிட்டு வருகின்றன.
பிரபலமான சபாரி விடுதியை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 358 பேர் உயிரிழந்தனர் என்று இறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருந்த மேலும் பலர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 521ஆக் அதிகரித்தது.
இந்தத் தகவலை குறித்த தாக்குதல் தொடர்பில் அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்ட பிரத்தியேக கண்காணிப்புக் குழு அறிவித்தது. (ம)



தப்பட்ட வடகொரியாவை
க்கா நினைக்கிறதா? அமெ
ாக்கம் என்ன? வடகொரி
அமெரிக்கா காரணத்
? அப்படி என்றால் அதை
பர் உறுதி செய்யட்டும்"
தார். (ம)

ம் கைது





கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ்,.நேற்றுமுன்தினம் பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பங்களாதேஷ் அதிபர் அப்துல் ஹமீட் பாப்பரசர் பிரான்சிஸ் இடையிலான சந்திப்பும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ம)

# ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ 2019ஆம் ஆண்டு பதவிவிலகல்



டோக்கியோ, டிசெ. 2
''ஜப்பான் மன்னர் அகிஹிட்டோ 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பதவி விலகவுள்ளார்'' என்று ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே அறிவித்தார்.
ஜப்பான் நாட்டின் 125ஆவது மன்னரான அகிஹிட்டோ (வயது 83) வயோதிபம், உடல் நலக்குறைவு ஆகியவற்றின் காரணமாக பதவி விலக விருப்பம் தெரிவித்தார். ஜப்பானில் கடந்த 200 ஆண்டுகளில் எந்த மன்னரும் பதவி விலகியதாக சரித்திரம் இல்லை. அங்கு கடைசியாக 1817ஆம் ஆண்டு, கொகக்கு என்ற மன்னர்தான் பதவி விலகியுள்ளார். தற்போது மன்னர் அகிஹிட்டோ அவ்வாறு பதவி விலகவுள்ளார். (ம)

ட்டும்





வான் ஹோவாவுக்கு வழக்கறிஞரை வைத்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படவில்லை. இவருக்கு எதிராக எல்லா ஆதாரங்களும் கற்பனை செய்யப்பட்டு. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. வான்ஹோவாமீதான குற்றச்சாட்டுகள் பொய் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் ஒரு நிரபராதி யைக் குற்றவாளியாக மாற்றமுடிகிறது என்பதை நினைக்கும்போது அதிர்ச்சியாக இருக்கிறது. இரசாயனத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்களையும் கூட இந்த வழக்கில் நுழையவிடாமல் பார்த்துக்கொண்டன பன்னாட்டு ரசாயன நிறுவனங்கள்" என்கிறார். பார்மோசா நிறுவனம் நச்சு இரசாயனத்தை வெளியிட்டதுநிரூபிக்கப்பட்டால், சுமார் 500 மில்லியன் டொலர்கள் தண்டம் விதிக்க முடியும். ஆனால் அரச. நிறுவனத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அவர்கள் தொழிற்சாலையை ஆரம்பிக்கும்போதே பிரத்தியேகமான ஓர் ஒப்பந்தத்தை அரசுடன் செய்துகொண்டிருப்பார்கள் என்கிறார்கள் விமர்சகர்கள். (ம)



அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் கிறிஸ்மஸ் தினக் கொண்டாட்டங் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆரோக்கியமான போக்கல்ல

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை என்ற சொலவடை ஒன்றுதமிழில்உண்டு.தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கநாடாளுமன்றத்தில்நேற்றுமுன்தினம் விடுத்த சிறப்பு அறிக்கையைப் பார்க்கும்போது இந்தச்சொலவடையை நினைவிலிருத்தாமல் விடமுடியாது.

முன்னாள்அரசதலைவர்மகிந்தகாலத்து பிணைமுறி விற்பனைகள் தொடர்பாக அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். 2015ஆம் ஆண்டில் கூட்டு அரசு பதவிக்கு வருவதற்கு முன்னதாக அதேயாண்டில் முறையற்ற விதத்தில் பிணை முறி விநியோகங்கள்நடந்திருப்பதாகஅவர்குற்றஞ்சாட்டியிருக்கிறார். அதுவும் தனியாருக்கு நேரடியாக அவை விற்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்.

தற்போதையகூட்டுஅரசின்காலத்தில்இடம்பெற்றபிணைமுறிவிற்பனைமோசடி தொடர்பாகவிசாரணைநடத்தும் ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் 8ஆம் திகதி வெளிவரும் நிலையிலும்

அந்த அறிக்கையில்தன்மீதும் குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்பட்டால் தான் பதவி விலகுவார் என்று அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்கு ரணில் உறுதியளித்துள்ளார் என்றும்

தகவல்கள் வரும் நிலையில் அவசர அவசரமாக மகிந்த காலத்து பிணைமுறி மோசடி குறித்து விசாரிக்கப்படும் என்று ரணில் அறிவித்திருக்கிறார்.

ஏற்கனவே மகிந்தவின் ஊழல் மோசடிகளைக் கண்டு பிடிக்கப் போவதாகக்கூறித்தான் பதவிக்கு வந்தது இந்த அரசு. வந்த வேகத்தில் சில பல விடயங்களையும் விசாரணைக்கு எடுத்தது. பலரைக் கைது செய்து விளக்க மறியலில் வைத்தும் விசாரித்தது. ஆனால், இதுவரையில் கொழுத்தாடுகள் எவையும் மாட்டவில்லை. ஆனால், பன்றிக்கு வைத்த பொறியில் மான் மாட்டிய கதையாக இந்த அரசும் அதில் இருந்தவர்களுமே மோசடிக் குற்றச்சாட்டுக்களில் சிக்கிச் சின்னாபின்னமாவது நடக்கிறது.

நிதி அமைச்சராக இருந்தவரான ரவி கருணாநாயக்க இந்த பிணை முறி மோசடி விவகாரத்தினால் பதவியை இழந்தார். இப்போது ரணிலின் பதவிக்கும் ஆபத்து வரக்கூடும் என்கிற நிலமை தோன்றியுள்ளது.

இதனை ஈடு செய்யும் வகையிலும் இழக்கப்படும் செல்வாக்கைத் தூக்கி நிறுத்தும் வகையிலும் நான் மட்டும் அல்ல, அவரும்தான் குற்றமிழைத்தார் என்கிற பாணியில் மகிந்த காலத்து பிணைமுறை மோசடிகள் குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்று இப்போது அறிவித்திருப்பது சிறுபிள்ளைத்தனமானதாகத் தெரிகிறது.

மகிந்த மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ஆரம்ப காலத்திலேயே இந்தப் பிணை முறி மோசடி குறித்தும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தால் அது நியாயமானதாகவும் இருந்திருக்கும். அதைவிடுத்து நான்மாட்டினால்உன்னையும்மாட்டாமல்விடுவேனாபார் என்கிற வகையில் ஓர் அரசியல் தலைவர் அப்பட்டமாக நடந்துகொள்வது ஏற்புடையது அல்ல.

கடந்த ஆட்சியிலானாலும் சரி இந்த ஆட்சியிலானாலும் சரி நடந்திருக்கக்கூடிய ஊழல் மோசடிகள் அனைத்தும் விசாரிக்கப்படவேண்டும், குற்றவாளிகள்தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அத்தகைய நடவடிக்கையை அரசியல் சூதாட்டமாக்க முனைவதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நேர்மை, நல்லாட்சி என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த ஓர்அரசிடம் இருந்தும் அதன்தலைவர்களிடம் இருந்தும் மக்கள் இதுபோன்ற செயல்களை எதிர்பார்க்கவில்லை. தாம் மாட்டிக்கொண்ட பின்னர் அவனும் கள்வன்தான் என்று அடுத்தவரைப் பார்த்துக் கைநீட்டுவதால் மட்டும் யாரும் குற்றவாளி இல்லை என்று ஆகிவிடாது. அரசின் இத்தகைய போக்கு ஆரோக்கியமானதல்ல.



# தமிழர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்திய மாவீரர் தின நிகழ்வுகள்

இந்துமதி



பல்வேறு வகைப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வும் , மாவீரர் நாள் நிகழ்வுகளும் தமிழர் தாயகத்தில் உற்சாகத்துடனும் உருக்கத்துடனும் கடைக்கொள்ளப்பட்டிருக்கின்றன. போர் ஓய்ந்ததன் பின்னர் மக்கள் தமது உணர்வுகளைச் சுதந்திரமாகவும், உணர்வுபூர்வமாகவும் பகிர்ந்து கொள்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு இம்முறை கிடைத்தமை மனதுக்கு ஆறுதல் தருமொன்று. தமிழர்களிடையே பிணக்குகளும் பிளவுகளும் தலைதூக்கிக் காணப்படுகின்ற நிலையிலும், உணர்வுகள் ஒன்றாக இருந்ததை இந்த நிகழ்வுகளின்போது காண முடிந்தது. தமிழர்களுக்கு அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் கிடைக்க வேண்டும்; அவர்களும் இந்த நாட்டில் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகவே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள். பல்லாயிரக்கணக்கில் தமது உயிர்களை இழந்தார்கள்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழர்களது பிரச்சினைகள் விடயத்தில் விட்டுக் கொடுப்புடன் நடந்திருந்தால் இந்தநாட்டில்ஏற்பட்ட அழிவுகளைத் தவிர்த்திருக்க முடியும். போர் இடம்பெற்றபோது போராளிகள் மற்றும் படையினர் மட்டும் தமது உயிர்களை இழக்கவில்லை. பெருந்தொகையான பொதுமக்களும் தமது உயிர்களை இழந்துள்ளனர். இவர்களது உறவுகள் இவர்களை நினைத்துத் தினமும்கண்ணீர்விட்டுக்கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மாவீரர் நாள் அவர்களது மனதில் உள்ள சோகத்தைக் கீழே இறக்கி வைப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பை வழங்குகின்றது.

### மாவீரர் நாள் நிகழ்வுகளை ஜீரணிக்க முடியாத இனவாதத் தரப்பினர்

போரில்வீரச்சாவைத்தழுவிக் கொண்ட தமது சகபோராளிகளின் நினைவாக விடுதலைப் புலிகள் அமைத்த மாவீரர் துயிலும் இல்லங்கள் படையினரால் சேதப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இவற்றைக்காணும்போதெல்லாம் மனதில் தாங்க முடியாத சோகம் ஏற்படுகின்றது. அதே போன்று இறந்தவர்களின் உறவினர்களும் தாங்க முடியாத வேதனையில் மூழ்கி விடுகின்றனர்.

இதேவேளை மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றதைப் பொறுக்கமுடியாத இனவாதிகள் வழக்கம் போன்று தமது பாணியில் இனவாதக் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அஞ்சலி செலுத்துவதற்குச் சென்றவர்கள் அனைவருமேவிடுதலைப்புலிகள்எனவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கூறுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டதைஎதிர்த்தசிங்கள மாணவர்களால் பதற்ற நிலை உருவாகியதையடுத்து வளாகத்தை தற்காலிகமாக மூட வேண்டியதாயிற்று.

### இனவாதத்தை வளர்த்துவிட்டு அழிக்க முயன்றால் அது இலகுவானதாக அமையாது

இனவாதத்தை விதைப்பது மிக எளிதான காரியமாகும். ஆனால்அந்தவிதைமுளைத்து பெரும் விருட்சமாக வளர்ந்த பின்னர் அதை இலகுவில் அழித்துவிட முடியாது. நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இனவாதத்தின் விதைகள் தொடர்ந்து விதைக்கப்பட்டு வருகின்றன. கொடிய போர் இடம்பெற்று முடிந்த பின்னரும் அந்த விதைப்பு ஓய்ந்ததாகத் தெரியவில்லை. போரினால் தெற்கிலும் பொது மக்கள்மத்தியில்உயிரிழப்புக்கள் ஏற்படத்தான் செய்தன. ஏராளமானவர்கள் தமது உயிர்களையும் அங்கங்களையும் இழந்தனர். ஒரு சிலரின் தவறான அணுகுமுறைகள் பலருக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

இதேவேளை இம்முறையும் சில இடங்களில் மாவீரர் நாள் நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது. புலனாய்வாளர்களும்தமதுபங்குக்குமக்களை கைத்தொலைபேசிகள் மூலமும் புகைப்படக் கருவிகளைப் பயன்படுத்தியும் படம் பிடித்துள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் இந்த வேளையில்தேவைதானா?

இதுபோன்ற நடவடிக்கைகள் நல்லிணக்கத்தைச்சீர்குலைக்க வல்லவையல்லவா? புலிகளின் தலைவர் பிரபாகரன் போர் இடம்பெற்றபோது கொல்லப்பட்டுவிட்டதாக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் பெரும்பாலான தமிழ்மக்கள்இதைஏற்பதற்கு இன்னமும் தயங்குகின்றனர். அவர் உயிருடன் இருப்பதாகவே நம்புகின்றனர். இந்த நிலையில்தான் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் பிரபாகரன் பிறந்தநாள் நிகழ்வுகள்சிறப்பாகக்கொண்டாடப்பட்டுள்ளன.

இதேவேளை பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடிய அனைவரும் கைது செய்யப்படுவார்களென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தற்போது கூறுகிறார்.

### தமிழ் மக்கள் மனங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் ஒரு எழுச்சி உணர்வை உருவாக்கியுள்ளன

பிரபாகரன் பிறந்தநாள் நிகழ்வும்மாவீரர்தினநிகழ்வுகளும் ஈழத் தமிழர்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைய வேண்டும். அவர்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இவர்கள் தலை நிமிர்ந்து நடப்பதற்கு இவை திருப்புமுனையொன்றை ஏற்படுத்த வேண்டும். ஈழத் தமிழர்கள் தலை நிமிர்ந்து நடப்பதற்கு இதுவொரு ஆரம்பமாகவும் அமைந்திடல் வேண்டும்.

இதேவேளை தமிழ்த் தலைவர்கள் மீதான நம்பிக்கையீனமே மாவீரர் தின நிகழ்வுகளில்மக்கள்பெரும்திரளாகக் கலந்துகொண்டமைக்கான காரணமெனவடக்குமாகாண முதலமைச்சர் புதிய வியாக்கியமொன்றைக் கூறியுள்ளார். அவர் தலைவர்களென எவரைக் குறிப்பிடுகின்றார் என்பது புரியவில்லை. ஆனால் தமிழர்களின் தலைவராகத் தாம் மதிக்கப்படவில்லை என்பது குறித்து அவர் ஏமாற்றம் அடைந்துள்ளார் என்பது மட்டும்தெளிவாகத்தெரிகிறது.

எவர் என்ன கூறினாலும் இம்முறை மாவீரர் தின நிகழ்வுகளை உற்று நோக்கும்போது தமிழ் மக்களின் மனங்களில் ஏதோவொரு எழுச்சி உருவாகியுள்ளதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

# தமிழர்களால் மறக்க முடியாத அந்தக் காலம்

சேரலாதன்

> பதவி வெறி பிடித்தவர்கள் எதையுமே சிந்திக்க மாட்டார்கள். இங்கு இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறுமென அறிவித்தல் வெளியானதும் கூட்டணி அமைப்பதிலும், புதிய கட்சிகளை அமைப்பதிலும் எம்மவர்கள் முழுமூச்சுடன் செயற்பட ஆரம்பித்துவிட்டனர். கூட்டமைப்பிலிருந்து விலகிய ஈ.பி.ஆர்.எல்.எப், கஜேந்திரகுமாரது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்துவிட்டது. இந்தக் கூட்டணியில் வேறு சில உதிரிகளும் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின்காலத்துக்குப் பின்னர் தமிழர்களின்அனைத்துச்செயற்பாடுகளும் அடியோடு மாறிவிட்டன. சமூகப்பழக்கவழக்கங்கள்மட்டுமல்லாது அரசியலிலும் தனிநபர்கள் மத்தியிலும் மாற்றத்தைக் காண முடிகின்றது.

விடுதலைப் புலிகள் தமக்கென ஒரு தனியானஅரசியல்பிரிவைக்கொண்டிருந்தனர். இதற்குப்பொறுப்பாகவும் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் தேர்தல்களில் இவர்கள் போட்டியிடுவதில்லை. இதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர்களின் அரசியல்நீரோட்டத்தில்கலந்திருந்தமுக்கியமான அரசியல் கட்சிகள் யாவும் இதில் இணைந்து கொண்டன. விடுதலைப்புலிகளின்வழிகாட்டலின்கீழ் செயற்படவும் செய்தன. ஆனால் இன்று கட்டுப்படுத்துவார் எவருமில்லாத நிலையில் ஒவ்வொருவரும் தத்தமது எண்ணம் போன்று செயற்பட்டு வருகின்றனர்.

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்த விடுதலைப் புலிகள்**

1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதைமுழுமையாகஎதிர்க்கவேசெய்தனர். அந்தஒப்பந்தத்தின் மூலமாகவடக்கு-கிழக்குமாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு மாகாண சபைகளுக்கான தேர்தலும் இடம் பெற்றது. ஆனால் இதற்கும் விடுதலைப் புலிகள் உடன்படவில்லை. தனிஈழத்தை மட்டுமேதமது இலட்சியமாகக் கொண்டு போராடிய அவர்கள் மாகாண சபையின் கீழான ஆட்சியை வெறுத்து ஒதுக்கினர்.

அவர்களுக்குப் பிறகு வடக்குக் கிழக்கில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. வடக்கும் கிழக்கும் முன்னர்இருந்ததைப்போன்றுவெவ்வேறு மாகாணங்களாக ஆக்கப்பட்டன. வடக்குக்கும் கிழக்குக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் இடம்பெற்றன.

ஆனால் கிழக்கு மாகாண சபையில் தமிழர்கள் ஒரு பங்காளிகளாகவே இருக்கமுடிந்துள்ளது. முதலமைச்சர் பதவிஅவர்களைவிட்டுத்தூரவிலகிச் சென்றுவிட்டது. வடக்கு மாகாணத்தில்அதிகாரத்தைக்கைப்பற்றமுடிந்த போதிலும் முக்கியமான அதிகாரங்களை அது கொண்டிருக்கவில்லை. தமிழர்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டநிலையில்காணப்படுகின்றனர். ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து நின்றுபதவிகளைத்தேடிஅலைவதே இவர்களின்வேலையாகிப்போய்விட்டது.

**பதவிவெறி பிடித்தலையும் எம்மவர்கள்**

பதவிவெறிபிடித்தவர்கள்எதையுமே சிந்திக்க மாட்டார்கள். இங்கு இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறுமெனஅறிவித்தல்வெளியானதும் கூட்டணிஅமைப்பதிலும், புதிய கட்சிகளை அமைப்பதிலும் எம்மவர்கள் முழுமூச்சுடன்செயற்படஆரம்பித்துவிட்டனர். கூட்டமைப்பிலிருந்துவிலகியஈ.பி.ஆர்.எல்.எப், கஜேந்திரகுமாரதுதமிழ்த்தேசியமக்கள்முன்னணியுடன் இணைந்துவிட்டது. இந்தக் கூட்டணியில்வேறுசிலஉதிரிகளும் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பு அதிகமாகக்காணப்படுகின்றது. இதே வேளை அரசியல் கலப்புக்கு இடமே இல்லையெனக் கூறிக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை இன்று தடம்புரண்ட நிலையில் காணப்படுகின்றது. பேரவையில்அங்கம்வகிக்கின்றஅரசியல்வாதிகள், அமைப்புக்கள், தனிநபர்கள் அரசியலில் ஈடுபடுவதைப் பேரவை தடுக்காதென வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்புதியதொருவியாக்கியானத்தை அளிக்கும் அளவுக்குப் பேரவையின்உண்மையானமுகம் வெளிப்பட்டுள்ளது. அரசியலில் ஈடுபடக்கூடாதெனஎவருக்கும்எவராலும் கட்டளைபிறப்பிக்கமுடியாது. ஆனால் பேரவைஅமைக்கப்பட்டபோதேவிக்னேஸ்வரன் அதன் அரசியல் நடவடிக்கை தொடர்பாகக் கூறியிருந்தால் பிரச்சினை எழுந்திராது.


**உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிராக களமிறங்கும் தரப்புக்கள்**

தற்போது கூட்டமைப்புக்கு எதிராகப் பேரவை செயற்படப் போகின்றது: உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கூட்டமைப்புக்கு எதிராக அதில் அங்கம் வகிப்பவர்கள் களமிறங்கப் போகின்றனர். இதைவிட தமிழ் அரசுக்கட்சியுடன்முரண்பட்டசிலர்அதிலிருந்து பிரிந்து புதிய கட்சியொன்றை அமைக்கப்போவதாகவும்செய்திகள் வெளிவந்துள்ளன. இவர்கள் தேறுவார்களா? என்பதைப் பொறுத்திருந்துதான்பார்க்கவேண்டும். மக்களின் ஆதரவை முற்றாகவே இழந்து நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிவழியில் செல்லுமா? அல்லது பேரவையின் வழியில் செல்லுமா? என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் மக்களுக்குப் பூரணமான பாதுகாப்பு வழங்கப்பட்டது. இரவு வேளையிலும் வீடுகளின் கதவுகளை மூடாமல் வைத்திருக்க முடிந்தது. பெண்கள் எவ்விதஅச்சமுமின்றிஇரவிலும்கூட தனித்து வெளியில் சென்றுவர முடிந்தது.. திருட்டு, கொள்ளை என்ற பேச்சுக்கேஅன்றுஇடமிருக்கவில்லை.

அடாவடித்தனத்தில் ஈடுபட்டவர்கள் உடனுக்குடன் தண்டிக்கப்பட்டனர். போரைப்பற்றியபீதியும்பொருளாதாரக் கஷ்டங்களும் இருந்த போதிலும் மக்களால் அமைதியாக வாழ முடிந்தது. ஆனால் இன்றோ கொலை, கொள்ளை, திருட்டு, வாள்வெட்டு, பெண்கள்மீதானவன்கொடுமைகள் ஆகிய எல்லாமே மலிந்து போய்விட்டன. மக்கள் செய்வதறியாத நிலையில்விழிபிதுங்கிப்போய்க் கிடக்கின்றனர். விடுதலைப்புலிகளின்நினைவு அடிக்கடி இவர்களது மனங்களில் எழுந்துநிற்கின்றது. அவர்களின்மீள் வருகையை நியாயப்படுத்துகின்ற மன் நிலையும் கூடவே எழுகின்றது. ஆனால் அந்தக் காலம் திரும்பப் போவதில்லை என்பதுதான் யதார்த்தம்.





## ஆசிரியருக்கான கடிதம்

### இளைஞர்களின் எதிர்காலம் இருள் மயமாவதா?

வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்பட்டுத் தினமும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இவர்கள் தமிழ் இளைஞர்கள் என்பது கூடுதல் வேதனையை ஏற்புடுத்துகின்றது.

ஏற்கனவே தமிழ்ச்சமூகம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்ட நிலையில் அவர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. போர்காரணமாக ஏராளமான இளைஞர்கள் ஏற்கனவே தமத் உயிர்களை இழந்த நிலையில் அவர்களது உறவினர்கள் துயரங்களைச் சுமந்த நிலையில் வேதனையுடன் காலத்தைக் கடத்தி வருகின்றனர். இந்த நிலையில் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுகின்றமை. மேலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வடபகுதி இளைஞர்கள் தறிகெட்டு நடந்து கொண்டதால் இந்த அவலம் நேர்ந்துள்ளது. சினிமாவையும், தொலைக்காட்சியையும், இணைய தளங்களையும் பார்த்துவிட்டு இளைஞர்கள் கெட்டுப்போனதாகச் சிலர் கூறுகின்றனர். இதை முழுக்க முழுக்க உண்மையென ஏற்றுக்கொள்ள முடியாது.

சினிமாவையும், தொலைக்காட்சியையும், இணையத் தளங்களையும் ஏராளமான இளைஞர்கள் தினமும் பார்க்கத்தான் செய்கின்றனர். அவர்கள் அனைவரும் கெட்டுப்போவதில்லை. பலர் அவற்றிலுள்ள நல்ல விடயங்களைக் கிரகித்து தமது கல்வியின் உயர்வுக்குப் பயன்படுத்துகின்றனர். இந்த நிலையில் ஒரு சில இளைஞர்கள் கெட்டுப் போனதற்கான காரணங்கள் என்ன என்று எவருமே இதுவரை ஆராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை. படித்த மற்றும் வசதியான குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களும் தவறான பாதையில் பயணிப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் அவர்களின் குடும்பத்தினர் தலை குனிந்து நிற்கின்றனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகின்ற இளைஞர்கள் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டு அவர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் கடுமையான தண்டனைகளை அனுபவிக்க நேரிடும். இதனால் அவர்களது எதிர்காலமே பாழாகிப்போய்விடும்.

இனியாவது வடபகுதி இளைஞர்கள் தவறான பாதையில் பயணிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். தாம் உலவுவது சினிமாவில் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தவறினால் இளைஞர்களின் எதிர்காலமே இருள்மயமாகிவிடும்.

தா. அம்பிகைபாகன், தாவடி.

# ஆண்டு ரீதியான பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 7.6 வீதமாக குறைவடைந்து பதிவு

| ஆண்டு | மாதம் | விலைச்சுட்டெண் | அனைத்துப்பொருள்கள் | | | உணவுப் பொருள் | | | உணவல்லாப் பொருள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பணவீக்கம்(%) | | | பணவீக்கம்(%) | | | பணவீக்கம்(%) | |
| | | | மாத மாற்ற வீதம் (%) | ஆண்டு அடிப்படை | அசையும் பண வீக்கம் (12 மாதம்) | மாத மாற்ற வீதம் (%) | ஆண்டு அடிப்படை | அசையும் பண வீக்கம் (12 மாதம்) | மாத மாற்ற வீதம் (%) | ஆண்டு அடிப்படை | அசையும் பண வீக்கம் (12 மாதம்) |
| 2016 | செப்ரெம்பர் | 111.8 | -0.3 | 4.2 | 3.9 | -1.6 | 7.5 | 5.9 | 0.4 | 2.9 | 3.2 |
| | ஒக்ரோபர் | 112.1 | 0.3 | 4.1 | 4.0 | 0.6 | 6.9 | 6.2 | 0.1 | 2.9 | 3.2 |
| | நவம்பர் | 113.6 | 1.3 | 4.0 | 4.0 | 0.6 | 4.3 | 6.1 | 1.6 | 3.9 | 3.2 |
| | டிசெம்பர் | 114.7 | 1.0 | 4.5 | 4.0 | 0.8 | 4.1 | 6.1 | 1.0 | 4.5 | 3.1 |
| 2017 | ஜனவரி | 116.1 | 1.2 | 5.5 | 4.3 | 1.6 | 4.5 | 6.4 | 1.1 | 6.0 | 3.5 |
| | பெப்ரவரி | 116.7 | 0.5 | 6.8 | 4.6 | 1.2 | 7.7 | 6.9 | 0.2 | 6.4 | 3.8 |
| | மார்ச் | 116.5 | -0.2 | 7.3 | 5.0 | -0.7 | 9.2 | 7.4 | 0.1 | 6.5 | 4.1 |
| | ஏப்ரல் | 117.1 | 0.5 | 6.9 | 5.3 | 1.7 | 8.6 | 7.5 | 0.1 | 6.3 | 4.5 |
| | மே | 118.2 | 0.9 | 6.0 | 5.4 | 2.3 | 9.3 | 7.6 | 0.3 | 4.6 | 4.5 |
| | ஜூன் | 120.1 | 1.6 | 6.1 | 5.5 | 4.8 | 9.1 | 7.6 | 0.3 | 4.8 | 4.6 |
| | ஜூலை | 119.4 | -0.6 | 4.8 | 5.4 | -1.7 | 4.8 | 7.0 | -0.2 | 4.7 | 4.7 |
| | ஒகஸ்ட் | 118.8 | -0.5 | 6.0 | 5.5 | -2.5 | 6.9 | 6.9 | 0.5 | 5.7 | 4.9 |
| | செப்ரெம்பர் | 119.7 | 0.8 | 7.1 | 5.8 | 1.6 | 10.4 | 7.1 | 0.3 | 5.5 | 5.2 |
| | ஒக்ரோபர் | 120.8 | 0.9 | 7.8 | 6.1 | 2.6 | 12.6 | 7.6 | 0.3 | 5.8 | 5.4 |
| | நவம்பர் | 122.2 | 1.2 | 7.6 | 6.4 | 1.7 | 13.8 | 8.4 | 0.9 | 5.0 | 5.5 |

*தகவல் மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம்.*

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அலகு மேற்கொண்ட மதிப்பீடுகளின் படி, கடந்த நவம்பர் மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கப் பெறுமானம் 7.6 வீதமாக அமைந்துள்ளது. அதேபோன்று கடந்த ஒக்ரோபர் மாதத்தில் ஆண்டு ரீதியான பணவீக்கப் பெறுமானம் 7.8 வீதமாகக் காணப்படுகிறது.

உணவுப்பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து கடந்த ஒக்ரோபர் மாதத்தில் காணப்பட்ட பணவீக்க பெறுமதி 12.6 வீதத்திலிருந்து 'அதிகரித்து கடந்த நவம்பர் மாதத்தில் 13.8 வீதமாகப் பதிவாகியுள்ளது.

உணவல்லாப் பிரிவுக்கான ஆண்டு ரீதியான பணவீக்க கணிப்பீடுகளை நோக்குமிடத்து இதே காலப்பகுதிக்கான பணவீக்கமானது 5.8 வீதத்தில் இருந்து குறைவடைந்து நவம்பர் மாதத்தில் 5.0 வீதமாகப் பதிவிடப்பட்டுள்ளது.

மேலும் நவம்பர் மாதத்தில் உணவுப் பொருள்கள் மூலமான ஆண்டு ரீதியான பணவீக்க மாறுதல்களுக்கான பங்களிப்பு 4.05 வீதமாகவும், உணவல்லாப் பொருள்களின் பங்களிப்பு 3.56 வீதமாகவும் காணப்படுகிறது. இந்த மாற்றங்களின் முதன்மைக் காரணிகளான 'கல்வி' 0.86 வீதம், 'சுகாதாரம்' 0.51 வீதம், 'தொடர்பாடல்' 0.08 வீதம், 'போக்குவரத்து' 0.36 வீதம், 'இதர பொருள்கள் மற்றும் சேவை' 0.45 வீதம், 'மதுபானங்கள் மற்றும் புகையிலை விற்பனை' 0.03 வீதம், 'உணவகங்கள் மற்றும் ஹோட்டல் துறை' 0.70 வீதம், 'உடுபுடவை மற்றும் காலணிவகைகள்' 0.16 வீதம், 'பொழுது போக்கு கலாசாரம்' 0.34 வீதம் வீடமைப்பு மற்றும் நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் 'பிற எரிபொருள்கள்' 0.07 வீதம் என்ற விதமாக அதிகரித்து தங்களது பெறுமான மாற்றங்களைப் பதிவு செய்துள்ளன. (ஒ)




## "களனி சக்தி" சமூகப்பொறுப்புணர்வுத் திட்டம் மூன்றாண்டுகளுக்கு நீடிப்பு

### *களனி கேபிள்ஸ் பி.எல்.சி நிறுவனம் தகவல்*

"2014 ஆம் ஆண்டு 'களனி சக்தி' நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் பணிப்பாளரும் முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால, 'களனி சவிய' மற்றும் 'களனி சக்தி' நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒழுங்கிணைப்பாளர் ஜயந்த விஜேசிங்க மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய உப வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோரால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

களனி கேபிள்ஸ் பி.எல்.சி நிறுவனம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களை கருத்தில் கொண்டு முன்னெடுத்து வருகின்ற தனது 'களனி சக்தி' சமூகப்பொறுப்புணர்வுத் திட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்ட நீடிப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில், களனி கேபிள்ஸ் பி.எல்.சி நிறுவனப் பணிப்பாளரும் முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட உப வேந்தர் பேராசிரியர். ஆர்.விக்னேஷ்வரன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் ஒரு வருட காலத்துக்குரிய நிகழ்ச்சி திட்டமாக இது அமைந்துள்ளதுடன், பாடசாலைக் கல்வியைப் பூர்த்திச் செய்தவர்கள் மற்றும் ஆரம்பநிலையில் காணப்படுவோர் தமது திறன்களை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு உள்ளக மற்றும் தொழிற்றுறை இலத்திரனியல் வயரிங் துறையில் நிறைவான அறிவை பெற்றுக் கொள்ள முடியும்.

இது குறித்து கருத்துரைத்துள்ள களனி கேபிள்ஸ் பி.எல்.சியின் பணிப்பாளரும் முதன்மை நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால,

"இலங்கை மக்களின் நிலையை மேம்படுத்தக்கூடிய சமூகப்பொறுப்புணர்வு நடவடிக்கைகளை பொறுப்புணர்வு வாய்ந்த நிறுவனம் என்றவகையில் மேற்கொண்டு வருகிறோம். இது குறித்து மிகவும் பெருமை கொள்கிறோம். வருடம் முழுவதிலும் களனி கேபிள்ஸ் பி.எல்.சி வெவ்வேறு சமூகப்பொறுப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. 'களனி சவிய' மற்றும் 'களனி சக்தி' சமூகப்பொறுப்புணர்வுநிகழ்ச்சித் திட்டங்கள் எமது நிறுவனத்துக்கு மிகவும் பிரத்தியேகமானதாக அமைந்துள்ளது. பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் ஆரம்பநிலையிலுள்ளவர்கள் 'களனி சவிய' மற்றும் 'களனி சக்தி' போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று, இல்லங்கள் மற்றும் தொழில் நிலையங்களில் வயரிங் மற்றும் மின்கட்டமைப்பு நடவடிக்கைகளில் திறம்பட ஈடுபடுவதற்குரிய நிபு ணத்துவ நிலையை அடைய முடியும். அதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு பன்னாட்டளவில் அங்கீகாரமுடைய சான்றிதழ் வழங்கப்படுகிறது. இலங்கையைப்பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறுவனம் என்ற வகையில், இந்த செயற்பாடுகளில் இணைந்துகொண்டுள்ளமை குறித்து நாம் பெருமையடைகிறோம்"-என்றார். (ஒ)

## சுற்றுலாத்துறைக்கு அதிகவருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது

### *வருமான ஈட்டம் 4.8 வீதமாகப் பதிவு*

நடப்பாண்டின் முதல் ஐந்து மாத காலப் பகுதியில் சுற்றுலாத் துறையின் வருமானம் ஆயிரத்து 521.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுவதுடன் 4.8 வீத அதிகரிப்பாக பதிவாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் ஆயிரத்து 451.8 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான ஈட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

நடப்பு வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாத காலப்பகுதி வரை சுற்றுலா பயணிகளின் வருகை 4.8 வீதமாக அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை 8 இலட்சத்து 87 ஆயிரத்து 93 ஆக காணப்படுகிறது.

இக்காலப்பகுதியில் இந்தியா, சீனா, இங்கிலாந்து, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து நாட்டினுள் வருகை தந்த மொத்த சுற்றுலா பயணிகளின் விகிதாசாரம் 51.4 ஆக காணப்படுகிறது.

நடப்பு வருடத்தின் மே மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.5 சதவிகிதம் சரிவடைந்துள்ளது. ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 891 சுற்றுலா பயணிகள் நாட்டினுள் வருகை தந்துள்ளனர். 209.1 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடுடைய வருமான ஈட்டம் கிடைத்துள்ளது. (ஒ)



## முதலீடுசார் செயற்பாடுகளுக்கு சிறந்த நாடாக இலங்கை

### *கொரியாவின் 'கேபிஸ்' நிறுவன தலைவர் கருத்து*

முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு சிறந்த நாடாக இலங்கை விளங்குகிறது. இதன்காரணமாக அனைவரும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்ற கருத்தை கொரியாவின் கேபிஸ் நிறுவன தலைவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தென் கொரியாவுக்கான உத்தியோகப் பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அந்த நாட்டிலுள்ள முன்னணி வர்த்தகர்களை தலைநகர் சியோலில் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்ட போதே இந்தத் தகவலை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இந்த விசேட கலந்துரையாடலில் இலங்கையிலுள்ள முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள் சிலர் கலந்துகொண்டதுடன், கிழக்காசிய பிராந்தியத்தின் முன்னணி நிறுவனங்கள் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட தென் கொரிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அமைச்சர் மலிக் சமரவிக்ரம நாட்டில் முன்னெடுக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும், அவற்றுக்கு இலங்கை அரசு வழங்கி வரும் சலுகைகள் தொடர்பிலும் வர்த்தகர்களுக்கு தெளிவு படுத்தினார். (ஒ)

# ‘வகுப்பறையில் ஒத்துழைப்புடன் கற்றல்’

சி.நற்குணலிங்கம்

மனித வாழ்வியலில் கல்வி என்பது அறிவின் திறவுகோலாக முதன்மை பெறுகிறது. அந்தவகையிலே உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்கையில் ஒன்றை அறிந்துகொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும், அதன்வழி சிறப்பாக வாழ்வதற்கும் கல்வி அவசியமாகிறது.

**மாணவர் அறிவுத் திறன் மதிப்பீடு**

ஆனாலும் வாழ்க்கையோடு தொடர்புடைய சகல விடயங்களையும் அறிந்து கொள்ள முடியாத வகையில் எழுத்தறிவாற்றல் இன்றிய நிலையில் ஏழு கோடி சிறுவர்கள் உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கையை எடுத்துநோக்கின், இலவசக் கல்வி வசதியிருந்தும் கற்றலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த முடியாமல் தத்தளிக்கும் மாணவர்கள் இருப்பது கவலைக்குரிய விடயம். பிள்ளைகள் எதிர்காலத்தில் நன்முறையில் வாழ்வதற்கு எத்தகைய அறிவுத் திறன்கள், தேர்ச்சிகள், மனப்பாங்குகள் தேவை என்பதை ஆசிரியர்கள் மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும். அதனடிப்படையில் எந்தக் கற்பித்தல் முறையை பயன்படுத்தினால் எல்லா மாணவர்களையும் ஒன்றிணைத்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும். கற்றல் செயற்பாடுகளில் இடர்படும் மாணவர்களை வழிநடத்த வேண்டும்.

**வகுப்பறைகளில் ஒத்துழைப்புடன் கற்றல்**

“வகுப்பறைகளில் ஒத்துழைப்புடன் கற்றல்” என்ற செயல்நிலை நிகழ்வதால், மாணவர்கள் அதிக பயனடைகின்றனர். மாணவர்ளுக்கு வழங்கப்படும் செயற்பாடுகள் மற்றும் ஒப்படைகளை கொடுக்கப்பட்ட வகுப்பறைப் பாட வேளையில் தமது இடத்தில் இருந்தவாறே தனித்தனியாக மேற்கொள்ளும் படிமுறையும் உண்டு. இம்முறை மரபு வழிவந்த அணுகுமுறையாக கொள்ளப்படுகிறது. இங்கு, “வகுப்பறையில் சிறு குழுக்களாக அதாவது, 3 தொடக்கம் 6 அங்கத்தவர்களைக் கொண்ட மாணவர் குழுக்களை அமைத்து, ஒரு தலைப்பைக் கொடுத்து அதன்வழி அவர்களை இயங்க வைக்கும் செயற்பாடு ஒத்துழைப்புடன் கற்றல்” என வரையறை செய்யப்படுகிறது.

**வெளிக்கொணர்தல்**


கற்பிக்கப்படும் விடயத்தை முன்கூட்டியே ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே மாணவர்களை திசை முகப்படுத்திவிடுகின்றனர். ‘Education’ என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் ‘வெளிக்கொணர்தல்’ எனக்கூறி, கல்வியை ஆங்கி




லேயர்கள் வரையறுத்துள்ளனர். மகிழ்வான சூழலில் மாணவர்கள் குழுவாக இயங்குவதன் மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் வீச்சுக்களை வெளிக்கொணரும் செயற்பாடுகள் இலகுவாகவும், திறம்படவும் அமைந்துவிடுகின்றன. வகுப்பறைச் செயன்முறைகள் குழுச் செயற்பாடான கற்றலில் ஈடுபாட்டை அதிகரிக்கவும், பாடங்களை விரும்பிக் கற்கவும், கிரகிப்புடன் கூர்ந்து கற்கவும் சாதகமான சூழலைத் தருகின்றன.

**பயனுறுதி வாய்ந்த கற்பித்தலும் குழு நிலைச் செயற்பாடும்**

பயனுறுதி வாய்ந்த கற்பித்தலுக்கு குழு சார் அம்சங்கள் பயனுறுதியாக அமையும். கற்றல் பரப்பில் கற்பித்தல் சார் தேவைகள் விருத்தியுறும். இணைந்து இயங்கும் ஆதரவை வழங்கும், கற்றல் மனப்பாங்கினை விருத்தி செய்யும். வரையறுக்கப்பட்ட வகுப்பறை நேரத்தைப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ளலாம். ஒத்துழைப்புடன் கற்றல் பாட உள்ளடக்கத்தில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன், பாட உள்ளடக்கத்தின் பொறுமானத்தையும் உணர்திறனாக்கும். குழுச் செயற்பாடு இணைந்த சூழலை ஏற்படுத்தும். இது மாணவர்கள் மத்தியில் காணப்படும் வெட்கம் மற்றும் தாழ்வு மனப்பான்மையை நீக்கி குழுவிலுள்ள உறுப்பினர்கள் தம் கருத்துக்களை முன்வைப்பதற்குரிய தயக்கமின்றிய தன்மையை உருவாக்கும்.



## சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை பேணும் படிமுறை

குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தமது பங்களிப்பை செலுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் செயற்பட ஆரம்பித்ததும் அவர்கள் தொழிற்படும் விதம், தொழிற்படுவதிலுள்ள ஈடுபாடு மற்றும் முன்னேற்றம் என்பன கண்காணிக்கப்பட வேண்டும் அவசியமேற்படின் உதவி செய்யும் வகையில் ஆசிரியர் தயார் நிலையில் இருக்க வேண்டும். இதன் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையை ஆசிரியர் தீர்மானிக்க முடியும். இவையாவும் கற்பித்தலில் மாணவர்கள் மீது முழுமையான தாக்கத்தை ஏற்படுத்த உதவும்.

**கற்றலில் மாணவர் பங்கு**

மாணவர்கள் ஒத்துழைப்புடன் கற்கும் போது ஆசிரியர் பின்னூட்டலை வழங்குவதும், சிந்தனையை தூண்டுவதும் மாணவர்களை வழிப்படுத்தும். அவர்கள் தமது கற்றலை கண்காணிப்பதற்கும், சிந்திப்பதற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் பொருத்தமான கருத்துக்களையோ, வினாக்களையோ வழங்குவதன் மூலம் குழுச் செயற்பாடு பூரணமடைகிறது.

கற்றலை மேலும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் உதவிபுரிகிறது. கல்வியில் அதிக நாட்டமின்றி இருக்கும் மாணவர்கள் ‘ஒத்துழைப்புடன் கற்றல்’ செயற்பாட்டின் மூலம் தமது வினைத்திறனான செயல்நிலைகளை வெளிக்கொணர முற்படுவர். “கடவுள் நூலைக் கொடுப்பார். சேவையை மனிதன் தான் செய்ய வேண்டும்.” என்று குறிப்பிடும் ‘எபிரூஸ்’ என்பவரின் கூற்றுக்கமைய மாணவர்கள் செயற்பட வேண்டும். ஆசிரியர்களை ஏமாற்றக்கூடாது. அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்தே செயற்படுகின்றனர். இதனை மாணவர்கள் மனதில் பாடமாகக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் உணர்ந்து கற்றிலில் ஈடுபட வேண்டும். “அசண்டையீனமாய் கைவிட்ட வாய்ப்பு திரும்பி வர மாட்டாது” என்ற அராபியப் பழமொழிக்கு ஆளாகாத வண்ணம் எம்மை முழுமையாக கற்றலில் ஈடுபடுத்தி, ஈடுபாட்டுடன் கற்க வேண்டும். இதற்கு ‘ஒத்துழைப்புடன் கற்றல்’ துணைபுரியும். அதிக விளைதிறனைத் தரும். பாடத்திட்டங்களுக்கு உட்பட்ட விடயங்களை மட்டும் விரிவாகக் கற்று, தெளிவாக விளங்கிக்கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள இம் முறைமை சிறந்த வழிநடத்தல் கருவியாக விளங்கும்.

கற்றலுக்கான தடைக் கற்களை உடைத்து, கற்றல் இலக்குகளை எளிதில் அடைந்திடவும், ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதற்கும், வேலைப் பகிர்வைக் கைக்கொள்ளவும் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அர்ப்பணிப்புடன் இயங்க வேண்டும். அவ்வாறு இயங்குவதன் மூலம் குழுச் செயற்பாட்டின் முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். தகவல் சேமிப்பு, அறிதல் சார் மனப்பாங்கு, வெளிப்படையான உரையாடல்கள், பிரச்சினைகளை விடுவிக்கும் உத்திகள், மேம்பட்ட அடைவுசார் விளைவுகளை வெளிப்படுத்தும் சாத்தியப்பாடுகள் ஏற்படும்.

“ வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறு பராயம்தான். அந்தப் பராயத்தில் உள்ளவர்களுக்கு ஏதோவொரு உத்தியினைக் கைக்கொண்டு கல்வியைப் போதிக்க முயற்சிக்க வேண்டும். இதன் மூலம் கற்றலில் ‘ஆபத்து விளிம்பில்’ உள்ளோர் பாதுகாக்கப்படுவர். அவர்களது எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும். ஆக, மாணவர்களைச் சிறு குழுக்களாக இயங்கச் செய்வதன் மூலம் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்க முடியுமென ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துரைக்கின்றன. சிறந்த கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைகளின் ஒத்துழைப்புடன் கூடிய கல்வி அறிவூட்டல் செயற்பாடு, மாணவர்களது கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**நல் மாணாக்கரை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு**

13 வருடங்களை பாடசாலையில் கழித்த பின்னர் வெறுமையாக ஒரு மாணவன் வெளியேறும் நிலையை பாடசாலைகள் ஏற்படுத்திவிடக்கூடாது. முழுமையான குடிமகனை சமகாலத்தில் உருவாக்குவதற்கான முயற்சிகளில் எல்லாப் பாடசாலைகளும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

கற்றலில் ஈடுபட மறுக்கின்ற மாணவர்கள் அதிகமாக இருப்பதுதான் எமது கல்வித் தரம் வீழ்ச்சியுறுவதற்கான முதன்மைக் காரண காரியமாக கொள்ளப்படுகின்றது. அமரர் ‘லால்பகதூர்’ கூறிய, “உலகில் நாம் எங்கே சென்றாலும் கேட்கக்கூடிய விடயங்கள் இரண்டு. ஒன்று உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவு. இரண்டு குறைந்துவரும் கல்வித் தரம்” என்ற கூற்றின் பொறிவினுள்ளும் நாம் அகப்படாதிருக்க முற்சிக்க வேண்டும். எம் வாழ்வில் கிடைக்க முடியாத பெருஞ் செல்வம் என்பது, நாம் வீணே கழிக்கும் ஒவ்வோர் விநாடிப் பொழுதாக அமைந்துள்ளது. முயற்சிகள் தவறலாம். ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது. இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**சிறந்த கற்றல் கற்பித்தலை பேணுவோம்**

வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளியாக இருப்பது சிறு பராயம் தான். அந்தப் பராயத்தில் உள்ளவர்களுக்கு ஏதோவொரு உத்தியினைக் கைக்கொண்டு கல்வியைப் போதிக்க முயற்சிக்க வேண்டும். இதன் மூலம் கற்றலில் ‘ஆபத்து விளிம்பில்’ உள்ளோர் பாதுகாக்கப்படுவர். அவர்களது எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும். ஆக, மாணவர்களைச் சிறு குழுக்களாக இயங்கச் செய்வதன் மூலம் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்க முடியுமென ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துரைக்கின்றன. சிறந்த கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைகளின் ஒத்துழைப்புடன் கூடிய கல்வி அறிவூட்டச் செயற்பாடு, மாணவர்களது கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.




## முதலமைச்சரின் தனிநாட்டுக் கோரிக்கை இன்றைய சூழலில் யதார்த்தமானதா?

தமிழர்களுக்கு கூட்டாட்சியைத் தரமறுத்தால் அவர்கள் தனிநாட்டைக் கோர வேண்டிய நிலை உருவாகுமென வடக்கு முதலமைச்சர் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவரிடம் தெரிவித்தார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன. ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சி இடம்பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரச தலைவர் அண்மையில் 'சமஷ்டி' அல்லது கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்குத் தாம் ஒருபோதுமே இணங்காணப்போவதில்லையென்று கூறியதன் பின்னணியில் முதலமைச்சரின் கருத்து வெளியாகியுள்ளது.

தமிழ் இளைஞர்கள் தனிநாடு ஒன்றுக்காகவே ஆயுதமேந்திப் போராடினார்கள் அந்த வேளையில் அவர்களுக்கு எந்தவொரு நாடும் ஆதரவு வழங்கவில்லை. அன்று தனிநாட்டுக்கான ஆதரவு கிடைத்திருக்குமானால் இன்று தமிழர்கள் தமக்கென ஒரு நாட்டைக் கொண்டிருப்பார்கள். ஆனால் முப்பது வருடங்களாகப் போராடியபோதும் அது சாத்திய மாகவில்லை. இந்தியா, இலங்கை பிளவுபடுவதை ஒருபோதுமே ஏற்றக்கொள்ளப்போவதில்லை. இதனால் உலகநாடுகளும் இதற்கு ஆதரவை வழங்கமாட்டா என்பதுதான் உண்மையான நிலையாகும்.

இந்த நிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எந்த அடிப்படையில் தனிநாட்டைத் தமிழர்கள் கோரவேண்டி வருமெனக் கூறினார்கள் என்பது தெரிய வில்லை. வல்லரசுகள் உட்பட உலக நாடுகள்பலவும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன. போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தற்போது சீண்டுவாரில்லாமல் குப்பைக் கூடைக்குள் கிடக்கின்றன. இது வடக்கு முதலமைச்சருக்கும் தெரிந்த விடயம்தான் இந்த நிலையில் அவர் வாயில் வந்ததையெல்லாம் கூறுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

முதலமைச்சர் கூறியது போன்று உலக நாடுகள் அதை ஆதரிக்க வேண்டும் அப்போதுதான் அந்தக் கோரிக்கை செயல்வடிவம் பெறும். ஆனால் இதற்கு ஆதரவு கிடைப்பதற்கான அபிவிருத்தியை எங்கும் காண முடியவில்லை.

இந்த நிலையில் வழக்கம் போன்று வடக்கு முதலமைச்சர் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை அவர் எடை போட்டதாகத் தெரியவில்லை. அவர் வாயில் வந்ததையெல்லாம் கூறி வைப்பது தமிழர்களுக்கு விரோதமானதாகவே அமைந்து விடும்.



# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்

இந்த வருடம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சனிப்பெயர்ச்சி நடைபெறுகிறது. விருச்சிக ராசியில் இருந்து தனுசு ராசிக்கு சனிப்பெயர்ச்சி ஆகிறார் சனீஸ்வர பகவான். அவர் 26.12.2020 வரை தனுசு ராசியில் இருந்து பலன்களைத் தரவுள்ளார். இந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ராசியினருக்கும் ஏற்படக்கூடிய பலன்கள் குறித்துப் பார்ப்போம்...



## மேடம்

மேட ராசிக்காரர்களுக்கு அஷ்டமச்சனியாக இருந்த சனிபகவான் ஏராளமான தொல்லைகளைத் தந்து வந்தார். எதைத் தொட்டாலும் பிரச்சினைகள், தொந்தரவுகள், கொடுக்கல் வாங்கலில் சிக்கல், கணவன் மனைவி உறவில் மனஸ்தாபம் என பலவிதப் பிரச்சினைகள் உங்களுக்கு இருந்து வந்தன. இப்போது அவர் உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடமான பாக்யஸ்தானத்துக்கு வருகிறார். எல்லாவிதத்திலும் வெற்றிகள் கிடைக்கும்.

இவ்வளவு நாள்களாக உங்களுக்கு இருந்த ஏமாற்றம், விரக்தி, தாழ்வு மனப்பான்மை இவையெல்லாம் உங்களை விட்டு விலகும். தன்னம்பிக்கை, உற்சாகம், நேர்மறையான எண்ணங்கள் மனதில் உருவாகும். வாழ்க்கையில் புதுவசந்தம் தென்றலாக வீசத் தொடங்கும். பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர்வார்கள். பிள்ளைகள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். கைவிட்டுப்போன தொகையெல்லாம் திரும்ப வந்து உங்களுக்குக் கிடைக்கும். எதிர்பார்த்த தொகை உங்கள் கைக்கு வரும். பணவரவு அதிகமிருக்கும். கடந்த ஐந்தரை ஆண்டுகளாக இருந்த பணத்தட்டுப்பாடு விலகும். கடன்கள் குறையும். வாடகை வீட்டில் இருப்பவர்கள் சொந்தவீடு வாங்குவீர்கள்.

சனிபகவான் உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் அதாவது தனுசு ராசிக்கு பெயர்ச்சியாவது உங்களுக்கு மிகவும் நற்பலன் என்று தான் கூற வேண்டும். 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் தெய்வ அனுகூலத்தை உண்டுபண்ணுவார். மேலும் உங்களது ராசிக்கு ராகுபகவான் - 5ஆம் இடத்திலும், குருபகவான் - 6ஆம் இடத்திலும், கேது பகவான் 11ஆம் இடத்திலும் சஞ்சரிப்பது ஓரளவு நற்பலன் ஆகும்.

சனிப்பெயர்ச்சியால் இதுகாறும் உங்களுக்கு ஏற்பட்ட தடை நீங்கி எதிலும் சுயமாகவும், விரைவாகவும் செயற்பட ஆரம்பிப்பீர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் செயற்படுவீர்கள். எதிலும் தலைமை ஏற்று நடத்தும் வண்ணம் உங்கள் செயல்பாடு அதிகரிக்கும். உங்களது மதிப்பும், மரியாதையும் உயரும். மற்றவர்கள் உங்களை நேசிப்பது மட்டுமல்லாமல் உங்கள் நட்பை விரும்பிப் போற்றுவர். உங்களை அறியாமலேயே ஒரு உற்சாகம் தொற்றிக்கொள்ளும். சமூகத்தில் நல்ல பெயருடன் வலம் வருவீர்கள். பேச்சில் சாமர்த்தியம் கூடும். பணப்புழக்கம் சற்றுத் தாளாரமாக இருந்து வரும். உங்கள் பேச்சை மற்றவர்கள் மதித்து நடப்பர். புதிய ஆடை ஆபரணங்கள் வந்து சேரும். எதிர்பாராத தனவரவும், பொருள்வரவும் ஏற்படும். வெளியில் இருந்த பத்திரங்கள், நகைகள் கைக்கு வந்து சேரும். உடன் பிறந்த சகோதர சகோதரிகளால் நன்மை ஏற்படும். அவர்களுக்கு சுபகாரியங்கள் நடந்தேறும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலைகிடைக்கும். உங்களைப்பற்றிய செய்திகள் பரவலாக பரவும். அவை நல்லவிதமாக அமையும்.

## நாளை

**03.12.2017**

ஞாயிற்றுக்கிழமை

**கார்த்திகை 17**

திதி: பூரணை மு.இ. 10.31 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப. 10.05 வரை
சுபநேரம்: 04.45–06.15 வரை
ராகுகாலம்: 09.15–10.45 வரை



2002 – தாய்லாந்தின் புதிய மன்னனாக வஜிரலோங்கோன் பதவியேற்பு.

## வரலாற்றில் இன்றைய தினம்

**02.12.2017**

1804 - பிரபஞ்ச பேரரசராக நெப்போலியன் பொனபாட் தனக்குத்தானே முடிசூடிக்கொண்டார்.
1943 - அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் பல இத்தாலியால் அழிக்கப்பட்டன.
1947 - ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீனியப் பிரிப்பு நடவடிக்கையை அடுத்து, 1947ஆம் ஆண்டு ஜெருசலேம் கலவரம் வெடித்தது.
1961 - கியூபா கம்யூனிசத்தைப் பின்பற்றும் என்று பிடல்காஸ்ரோ அறிவிப்பு.
1964 - அமெரிக்கா மற்றும் தாய்வான் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம் வொஷிங்டனில் கைச்சாத்திடப்பட்டது.
1988 - பாகிஸ்தானின் தலைமை அமைச்சராக பெனாசிர் பூட்டோ பதவியேற்றதன் மூலம் இஸ்லாமிய நாடொன்றின் முதலாவது பெண் அரச தலைவரானார்.
1988 - இஸ்ரேலுக்குக் கடத்தப்பட்டது ரஷ்ய வானூர்தி.
1991 - சோவியத் யூனியனிடம் இருந்து சுதந்திரம்பெற்ற உக்ரைனை கனடாவும், போலந்தும் அங்கீகரித்தன.
2002 - களியாட்ட விடுதியில் தீப்பிடித்ததில் 47 பேர் வெனிசுலாவில் சாவு.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பொது விஷயத்தில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் நல்ல முன்னேற்றம் அடைந்து இலாபம் கிடைக்கும். தாராளப் பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**இடபம்:** உறவினர் சார்ந்த திட்டம் மாறிப்போகலாம். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறுகளை உடனே சரி செய்வது நல்லது.

**மிதுனம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று நடைமுறைகளைப் பின்பற்றுவீர்கள். உபரி பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**கடகம்:** அறிவுத்திறனுடன் பேசி பலரின் பாராட்டை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்தநிலை சரியாகி விற்பனை அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** உங்கள் பேச்சில் விரக்தி வெளிப்படலாம். சுயகௌரவம் காப்பதில் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்புத் தேவைப்படும்.

**கன்னி:** திட்டமிட்ட பணி நிறைவேற கூடுதல் உழைப்புத் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். செலவில் சிக்கனம் தேவை.

**துலாம்:** நண்பர், உறவினர் அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிப்படையும். தாராள பணவரவு கிடைத்துச் சேமிப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வெகுநாள் ஆசை இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து வளர அனுகூலம் உண்டாகும். பணவரவு முன்னேற்றம் பெறும்.


**தனுசு:** பொது விவகாரங்களில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக அக்கறை கொள்வீர்கள். அளவான இலாபம் கிடைக்கும்.

**மகரம்:** பிறருடைய விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். சுமாரான பணவரவு இருக்கும்.

**கும்பம்:** எதிர்கால வாழ்வில் புதிய நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் திட்டமிட்ட இலக்கை எட்டும். கூடுதல் பணவரவால் தான தர்மப் பணி செய்வீர்கள்.

**மீனம்:** நிதானமாக செயல்பட்டால் உரிய பலன் பெறலாம். தொழில், வியாபாரம் செழிக்க நண்பர் உதவுவர். அளவான பணவரவு கிடைக்கும். பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

# 'ஸ்கெட்ச்' படத்தின் 'டப்பிங்' பணிகள் முடிந்தன



விஜய் சந்தர் இயக்கத்தில் விக்ரம், தமன்னா நடிப்பில் உருவாகி வரும் 'ஸ்கெட்ச்' படத்தின் டப்பிங் பணிகள் முடிவுக்கு வந்துள்ளன என்று படக்குழு அறிவித்துள்ளது. விக்ரம், தமன்னாவுடன், சூரி, ஆர்.கே.சுரேஷ், அருள் தாஸ், மலையாள நடிகர் ஹரீஷ், ஸ்ரீமன், மது மிதா, உள்பட பலர் நடிக்கிறார்கள். இந்தப் படம் பொங்கலுக்குத் திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் நிலையில், படத்தின் 'டப்பிங்' வேலைகளும் நடந்து வருகின்றன. வடசென்னையை மையமாக வைத்து உருவாகி வரும் இந்தப் படத்தில் விக்ரம், வடசென்னை தமிழில் வித்தியாசமாக பேசியுள்ளாராம். படத்தின் டப்பிங் பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளன என்று படக்குழு அறிவித்துள்ளது.

கடனும் சரி, சேமிப்பும் சரி அதிகரித்துக்
கொண்டே இருக்கும். சிறியதாக தெரியும்
தொகை ஒரு நாளில் பெரிதாய் வளர்ந்து நிற்கும்

வளர்ந்து நிற்பது சேமிப்பாக இருந்தால்
வாழ்க்கை ஆச்சரியக்குறி ஆகிவிடும்

அதுவே கடனாக இருந்தால்
வாழ்க்கை கேள்விக்குறி ஆகி விடும்???

இந்தக் காலத்துப் பசங்க
ரொம்ப அறிவாளிங்க தான்




வெளியே போய் விளையாடெண்டா
இப்படிப் பண்றாங்க... என்னத்தைச்
சொல்ல...



உங்களை எங்கேயோ பார்த்த
மாதிரி இருக்கே?
பேஸ்புக்ல இருக்கீங்களா? இல்லை
வாட்ஸ் அப் ல? இல்லை
டுவிற்றர்ல ? இல்லை
ஸ்கைப்பில? இல்லவே இல்லை
அப்புறம்? உங்க வீட்டு மாடியிலதான்
2 வருசமா வாடகைக்கு இருக்கேன்

கண்டிப்பான ஆசிரியரின்
கை கட்டப்படும்போது
வருங்கால குற்றவாளியின்
கை அவிழ்க்கப்படுகிறது
சமுதாயத்தின் நம்பிக் கை
வெட்டப்படுகிறது...!

ஒரு புலி கல்யாணம் பண்ணிட்டு
ரிஷப்ஷன் வந்தது.......
எல்லா விலங்குகளும் விருந்து
சாப்பிட்டு, புலி ஜோடியை நாலு அடி
தள்ளி நிண்டே வாழ்த்திட்டுப் போச்சு.

மாப்பிள்ளை புலிக்கோ கர்வம்
உச்சத்துக்குப் போச்சு.
திடீர்னு ஒரு பூனை மட்டும் சரசரன்னு
புலிக்கிட்ட போய் கைகொடுத்து
வாழ்த்துச் சொல்லிடுச்சு.

புலிக்கு ஆத்திரம் வந்திச்சு. பூனையப்
பார்த்து கர்ஜனையோட,
"டேய் இத்தனைப் பேரும் என்னை
தூரமா நிண்டு வாழ்த்திட்டு
போறானுங்க.....

உனக்கு மட்டும் எவ்வளவு தைரியம்
இருந்தா என்கிட்ட வந்து வாழ்த்து
சொல்லுவாய் ! நான் புலிடா" ன்னு
சொல்லிச்சு.

அந்த பூனையோ கெக்க பிக்கன்னு சிரிச்சுட்டே
"அடேய் கிறுக்குப் பயலே !
நானும் கல்யாணத்துக்கு முன்ன
"புலிதாண்டா " ன்னு சொல்லிட்டு ஓடிப் போச்சு !

**கதையின் நீதி:**
**புலியை கூட பூனையாக மாற்றும்**
**வல்லமை படைத்தவர்கள்**
**பெண்கள்**

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | | | | 6 | |
| 8 | | | 2 | 6 | | 5 | | |
| | 9 | | | 8 | | | | 3 |
| | | | | | | | 2 | |
| | 7 | 5 | | 3 | | 4 | 8 | |
| | 1 | | | | | | | |
| 9 | | | | 4 | | | 1 | |
| | | 6 | | 1 | 2 | | | 9 |
| | 2 | | | | | 3 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 1 | 9 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 6 | 9 | 8 | 2 | 4 | 5 | 3 | 7 | 1 |
| 5 | 4 | 7 | 1 | 3 | 6 | 2 | 9 | 8 |
| 3 | 1 | 6 | 5 | 8 | 7 | 9 | 4 | 2 |
| 4 | 7 | 5 | 3 | 9 | 2 | 1 | 8 | 6 |
| 9 | 8 | 2 | 6 | 1 | 4 | 5 | 3 | 7 |
| 7 | 2 | 9 | 4 | 6 | 3 | 8 | 1 | 5 |
| 1 | 6 | 4 | 8 | 5 | 9 | 7 | 2 | 3 |
| 8 | 5 | 3 | 7 | 2 | 1 | 4 | 6 | 9 |

# அழைப்பிதழ்கள்

எமது வீடுகளிலும், பாடசாலைகளிலும் பல விதமான கொண்டாட்டங்கள், விழாக்கள் என்பன அவ்வப்போது நடைபெறுவதுண்டு. இந்த விழாக்களை நாம் மட்டும் தனித்துக் கொண்டாடுவதில்லை. உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் எம்முடன் தொழில் புரிவோர், பெற்றோர், பெரியோர் என பலருக்கும் அழைப்பு அனுப்பி அவர்களுடன் சேர்ந்தே மகிழ்ச்சியாக கொண்டாடுகிறோம்.
பாடசாலைகளில் பின்வரும் விழாக்களுக்காக அழைப்பிதழ்கள் தயாரிக்கப்படுகின்றன.
அவை

1.முத்தமிழ் விழா 2.பரிசளிப்பு விழா
3. பெற்றோர் தினவிழா 4. விளையாட்டுவிழா
5. கட்டடத் திறப்பு விழா 6. புத்தக வெளியீட்டு விழா
7. ஆங்கில தின விழா 8. கல்விக் கண்காட்சி
9. ஒளிவிழா

## அழைப்பிதழ்

**நாவலர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின்**
**"கல்விக் கண்காட்சி- 2017"**

இடம் : வித்தியாலய மண்டபம்

காலம் : ஏப்ரல் 18,19 மற்றும் 20ஆம் திகதி
காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை.


**தலைமை விருந்தினர்**
பேராசிரியர் ச.எழிலரசன்


இந்தக் கண்காட்சியைப் பார்வையிட வருமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

18 பூங்காவீதி,
நுவரெலியா.

அதிபர்,
ஆசிரியர்கள்,

## இரு படங்களுக்கும் இடையேயும் 5 வேறுபாடுகள் உள்ளன; கண்டு பிடியுங்கள்






# பணிவு

ஒரு பெரிய காடு. காட்டின் மத்தியில் ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் பல இடங்களிலும் இருந்து தன்னிடம் வரும் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்து வந்தார். ஏழை - பணக்காரர் என்ற வேறுபாட்டில்லாமல் எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள். அரசரின் பிள்ளைகள் கூட அவரிடம் தான் படிக்க வாருவார்கள்.
ஆனால் முனிவரைப் பெறுத்தவரையில் எல்லாப்பிள்ளைகளும் ஒன்றுதான். இதுயார் வீட்டுப் பிள்ளை? என்று அவர் பார்க்க மாட்டார். மாணவர்க்ள அனைவரும் அந்த ஆச்சிரமத்திலேயே மாதக் கணக்கில், வருடக்கணக்கில் தங்கியிருந்து பாடம் கற்றுக்கொள்வர். முனிவராகப் பார்த்து "நீ இனி வீட்டுக்குப் போகலாம். உன் படிப்பு முடிந்தது என்று கூறும்வரையும் அவர்கள் அங்கேயே தங்கி இருந்து படிக்க வேண்டும். இதுவே குருகுலக்கல்வியாகும்.
இந்தக் குருகுலத்தில் பதினைந்து வயது நிரம்பிய ராஜகுமாரனும் கல்வி பயின்று கொண்டிருந்தான். முனிவர் அவனோடு சேர்த்து பல மாணவர்களுக்கு அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கணிப்பதற்கு பல சோதனைகள் நடத்தினார். அவர் வைத்த தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து "இனி நீ உன் வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார். இவ்வாறு குலகுலவாசம் செய்த எல்லா மாணவர்களும் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். ராஜகுமாரன் மட்டும் இன்னும் அரண்மனைக்கு அனுப்பப்படவில்லை. இளவரசன் விரைவில் படிப்பு முடிந்து வரவேண்டும். அவனுக்கு விரைவில் பட்டும் சூட்ட வேண்டும். திருமணமும் செய்து வைக்க வேண்டும் என்று ஆவலாக இருந்த மன்னனுக்கு எல்லா மாணவரும் வீடுகளுக்கு அனுப்பப்பட்டு இளவரசன் மட்டும் அனுப்பப்படாதிருப்பது மிகவும் வேதனையளித்தது. சரி நேரில் சென்று விவரம் அறிந்து வரலாமென ராஜா காட்டுக்குப் புறப்பட்டுப்போனார்.
முனிவர் அரசரை வரவேற்று உபசரித்தார். அப்போது தன் மகன் மட்டும் வீட்டுக்கு அனுப்பப்படாத காரணத்தை முனிவரிடம் மெதுவாகக் கேட்டுவிட்டார். முனிவரோ "உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் தேறிவிட்டான். அவருக்கு இன்னொரு தேர்வு வைக்க வேண்டும். அதிலும் அவன் தேறிவிட்டால் அவனை அனுப்பி விடுவேன். ஒரு பெரிய வித்துவான் என்ற மதிப்பையும் அவன் அடைவான்" என்று கூறிவிட்டு சென்றார்.
அரசர் ஆச்சிரமத்தில் அன்று இரவு தங்கி காலையில் ஊருக்குப் புறப்படுவதாக இருந்தார். அதிகாலையில் எழுந்த அரசர் குடிசைக்கு வெளியே பல் விளக்குவதற்காக வந்தார். அப்போது இராசகுமாரன் தலையில் விறகுக் கட்டொன்றைச் சுமந்து வந்து குடிசையின் பின்புறத்தில் போட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டார் ராஜா. "என்ன இது ஒரு ராஜகுமாரனைக் கூட இப்படியான வேலைகளைச் செய்யச் சொல்வார்களா?" என மனதுக்குள் வேதனைப் பட்டு நிற்கையில் அங்கே வந்த முனிவர் "என்ன மகனே! விறகு வெட்டிக்கொண்டு வந்து விட்டாயா? சரி இப்போது அந்த துடைப்பத்தை எடுத்துக்கொள். விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்" என்றார். "அப்படியே செய்கிறேன் குருவே" என்று கூறிவிட்டு இளவரசன் விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தைக் கூட்டிச் சுத்தம் செய்யத் தொடங்கினான். இதைப்பார்த்த அரசர் "மகனே! என்ன வேலை செய்கிறாய்? துடைப்பத்தைக் கீழே போடு" என்றார். "தந்தையே இது என் குருவின் உத்தரவு. அதை நிறைவேற்றுவதே மாணவனாகிய என் கடமை" என்று கூறி தொடர்ந்து கூட்டிப் பெருக்கினான். இப்போது அங்கே வந்த முனிவர் இளவரசனின் முதுகில் தட்டிக்கொடுத்து" அரசே என்னுடைய கடைசித் தேர்விலும் உங்கள் மகன் வெற்றி பெற்றுவிட்டான். பணிவுதான் மாணவர்களின் மிகவும் உயர்ந்த குணம். குருசொல்வது மாணவன் மனதுக்குப் பிடிக்காவிடினும் மறுக்காமல் செய்வதே மாணவர்கடமை. இதைச் செய்வதன் மூலம் பணிவும், பெரியோரை மதிக்கும் பண்பும் மாணவருக்கு வந்துவிடும். உங்கள் மகனும் அந்த நிலைக்கு வந்துவிட்டான். இனிநீங்கள் மகனை அழைத்துப் போலாம். அவன் இனி பேரும் புகழும் பெறுவான்" என்றார்.

# வயதுக்கும் இளமைக்கும் உள்ள தொடர்பு



உடல் வயோதிபம் அடைவது வேறு; உள்ளம் வயோதிபம் அடைவது வேறு. வயோதிப நிலையிலும் முகத்தில் எவ்வித சுருக்குமின்றி அன்று மலர்ந்த பூவைப் போல எம்மைக் கவரும் பெரியர்கள் இன்றும் இருக்கிறார்கள். முகத்தில் சுருக்கம் ஏற்பட்டிருப்பினும் அன்னை தெரேசாவைப் போல் கருணையாலும், மகிழ்ச்சியாலும் என்றும் குறையாத இளமையுடன் இருப்பவர்கள் பலர் உள்ளனர். இருபத்தைந்து வயது வரை நாம் வேகமாக வளருகிறோம். முதிர்கிறோம் என்றும் முப்பது வயது முதல் நாற்பது வயதுவரை உடல் வளர்ச்சியின் மாறுதல்களை வெகு எளிதில் கண்டு கொள்ள முடியாது என்று மருத்துவர்கள் கூறுகிறார். இவை உடலைப் பற்றியவை. உள்ளத்தைப் பாதிக்க முடியாது.
மனம் என்றும் இளமையுடன் இருக்க முடியும். நம் உறுப்புகளில் வயதினால் தளர்ந்து போகாத உறுப்பு மூளைதான். அதனைச் சரிவரப் பயன்படுத்தி வரும் வரையில் ஐம்பதிலும் சரி எழுபதிலும் சரி இளைமையின் சுறுசுறுப்புடன் இயங்க முடியும். எழுபது வயதுக்கு மேல் ஞாபக சக்தி குறையக்கூடும். ஆனால் மனித மனதில் ஏற்படும் ஆக்க சக்தி கொஞ்சம் கூடக் குறைவதில்லை. மாறாக அது வளர்கிறது என்கிறார்கள் மருத்துவர்கள். ஆக இளமை ஒரு மனநிலை அது ஓர் எண்ண நிலை அதுவே உண்மை. வயதுக்கும் இளமைக்கும் தொடர்பே இல்லை என்று கூறலாம்.

# காரணம் புரிந்தது





ஸ்டாலின் மறைவுக்குப் பின் குருசேவ் தலைமைப் பொறுப்புக்கு வந்திருக்கும் சமயம் அது. கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஸ்டாலினின் தவறான போக்குகளைக் கண்டித்து குருசேவ் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது கையெழுத்திடப்படாத துண்டுக் காகிதம் ஒன்று அவரிடம் அனுப்பப்பட்டது. அதில் "ஸ்டாலின் உயிரோடு இருந்த பொழுது இந்த குற்றச்சாட்டுக்களை நீங்கள் ஏன் சுட்டிக்காட்டவில்லை" என்று கேட்கப்பட்டிருந்தது. படித்துப் பார்த்த குருசேவ் "இந்தத் துண்டு காகித்தத்தை அனுப்பியவர் யார்? கையை உயர்த்துங்கள்" என்றார். ஒருவருமே கையை உயர்த்தவில்லை.
குருசேவ் சிரித்துக் கொண்டே சொன்னார்" இதை அனுப்பியவர் என்ன காரணத்தால் இப்போது கையை உயர்த்தவில்லையோ அதே காரணத்துக்காகத்தான் அப்போது நானும் அவரின் குறைகளைச் சுட்டிக் காட்டிக்கொள்ளவில்லை" என்றார்.

# மூளை

## நினைவுகளின் வலுவான ஆதாரமூலம்

பூங்குழலி





> அதிக நேரம் தூங்கினால் நினைவாற்றலில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்ற பரிசோதனை, சோதனை எலிகளில் நடத்தப்பட்டது. மனிதரின் மூளைக்கும் இது பொருந்தக்கூடியது என்று நம்பப்படுகிறது. ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மூளைக் கலங்களின் கொத்துக்களுக்கு வழங்கப்படும் மின் அதிர்ச்சிக்கு விடையாகக் கிடைக்கின்ற, குறிப்பிட்ட நினைவுகளின் வடிவங்களை கண்காணித்து இந்த விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.பின்னர், தனிப்பட்ட நியுரான்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் ஒளிக்கற்றைகளை மூளைக்குள் செலுத்தினர். இதன் மூலம் நினைவுகளை தூண்டவும், நிறுத்தவும் அவர்களால் முடிந்தது.

மூளையில்நினைவுகளை உருவாக்கும்போதும், அவற்றை சேகரிக்கும் போதும் உண்மை நிலையில் யதார்த்த பூர்வமாக என்ன நடக்கிறது என்பது பற்றி, புதிய ஆய்வை மேற்கொண்டுள்ள விஞ்ஞானிகள் ஆச்சரியப்படும் விதமான தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

நாம் கொண்டுள்ள நினைவுகள் அனைத்தையும் மூளையானது ஒரே நேரத்தில் இருமுறை பதிவு செய்து கொள்வதாக அமெரிக்கா மற்றும் ஜப்பானிய விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது.

அவ்வாறு இரு முறை நினைவுகளை உருவாக்கி ஒன்றை அவ்வப்போதும்,இன்னொன்றை நீண்டகாலமும் பயன்படுத்திக் கொள்கின்றன.

எல்லா நினைவுகளும் குறுகியகால நினைவுகளாக ஆரம்பித்து, நீண்டகால நினைவுகளாக, மெதுவாக மாறிவிடுவதாக இதுவரை கருதப்பட்டு வந்தது. இந்த ஆய்வில் கிடைத்திருக்கின்ற கண்டுபிடிப்புகள் ஆச்சரியமூட்டுபவை என நிபுணர்கள் தெரிவித்திருக்கும் நிலையில், இது சிறப்பான தாகவும், ஏற்றுகொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது.

**முன்னேற்றம்**

தனிப்பட்ட அனுபவங்களை நினைவில் வைத்து கொள்வதில் மூளையின் இரண்டு பாகங்கள் தீவிரமாக ஈடுபடுகின்றன. 'ஹிப்போகேம்பஸ்' என்கின்ற மூளையின் பின்புறப்பகுதி குறுகிய கால நினைவுகளை சேமித்து வைத்துக்கொள்கிறது. அதே வேளை, 'கோர்டெக்ஸ்' என்கின்ற மூளையின் புறணிப்பகுதி நீண்டகால நினைவுகளின் இல்லமாகத் திகழ்கிறது.

இந்தச் சிந்தனை 1950 ஆம் ஆண்டு 'ஹென்றி மோலாய்சன்' மீது நடத்தப்பட்ட சோதனைக்கு பின்னர் மிகவும் பிரபலமானது.முன்னைய கருத்தோடு ஒப்பிட்டால் இந்தச் செயல்நிலை முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

**புதிய புரிதல்**

ஆனால், உண்மை அதுவல்ல என்பதை காட்டும் வகையில் நியூரல் சர்க்யூட் மரபியலுக்கான ரிகின் எம்.ஐ.டி மையத்தின் விஞ்ஞானிகள் அணியினர் நடத்திய ஆய்வில் ஆச்சரியம் தருகின்ற முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர்.

அதிக நேரம் தூங்கினால் நினைவாற்றல்பாதிப்புஏற்படவாய்ப்புஉண்டு என்ற பரிசோதனை, சோதனை எலிகளில் நடத்தப்பட்டது. மனிதரின் மூளைக்கும் இது பொருந்தக் கூடியது என்று நம்பப் படுகிறது.

ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மூளைக் கலங்களின் கொத்துக்ளுக்கு வழங்கப்படும் மின் அதிர்ச்சிக்கு விடையாகக் கிடைக்கின்ற, குறிப்பிட்ட நினைவு களின் வடிவங்களை கண்காணித்து இந்த விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.பின்னர், தனிப்பட்ட நியுரான்களின் செயற்பாடு களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒளிக்கற்றைகளை மூளைக்குள் செலுத்தினர். இதன் மூலம் நினைவுகளை தூண்டவும், நிறுத்தவும் அவர் களால் முடிந்தது.

இதேவேளை நினைவுகள், ஹிப்போகேம்பஸிலும், கோர்டெக்ஸிலும் ஒரே நேரத்தில் சேமிக் கப்படுகின்றன என்ற தகவலும், முடிவுகளும் 'சைன்ஸ்' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**ஆச்சரியம் தந்த முடிவுகள்**

இந்த ஆய்வு மையத்தின் இயக்குநரான பேராசிரியர் சுசுமு டோனிகவா, "இது மாபெரும் ஆச்சரியம்" என்றும்,இந்தக் கருத்து பல தசாப்தங்களாக பிரபலமாக கருதப்பட்டு வந்ததற்கு மாறானது" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நினைவுகள் உருவாகத் தொடங்கிய சில நாள்களில் நீண்டகால நினைவுக்கான 'கோர்டெக்ஸ்' பகுதியை சோதனை எலி பயன்படுத்தியது போல தோன்றவில்லை. விஞ்ஞானிகள் ஹிப்போகேம்பஸ் பகுதியிலுள்ள குறுகிய கால நினைவுகளை நிறுத்தியபோது, அவற்றுக்கு வழங்கப்பட்ட மின் அதிர்ச்சியை எலிகள் மறந்துவிட்டன. ஆனால், நீண்டகால நினைவுப் பகுதியை ஆய்வாளர்கள் தூண்டிய போது, சோதனை எலிகளால் அந்த மின் அதிர்ச்சியை நினைவில் கொள்ள முடிந்தது. எனவே அந்த நிகழ்வு அங்கேயே தான் இருப்பது உறுதியாகியது. "அந்த நினைவு உருவான பல நாள்கள் வரை முதிர வில்லை அல்லது அமைதியாக இருக்கிறது" என்று பேராசிரியர் டோனிகவா தெரிவித்திருக்கிறார்.

**வலுவான ஆதாரம்**

'ஹிப்போகேம்பஸ்' பகுதிக்கும், 'கோர்டெக்ஸ்' பகுதிக்கும் இடையிலுள்ள தொடர்பு தடை செய்யப்பட்டால், நீண்டகால நினைவு ஒருபோதும் முதிராமல் இருப்பதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, நாள்கள் ஆன பின்னர், ஹிப்போ கேம்பஸ் பகுதியில் இருந்து கோர்டெக்ஸ் பகுதிக்கு நினைவுகள் சம ஆற்றலோடு மாற்றம் பெறும்போது இந்த இரு பகுதிகளுக்கும் இடையில் தொடர்பும் உள்ளது.

**தலைசிறந்த ஆய்வு**

"இந்த ஆய்வு சிறந்தது, நேர்த்தியானது மற்றும் மிகவும் சுவாரசியமானது. நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்" என்று கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் நினைவாற்றல் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற மருத்துவர் அமில்டன் தெரிவித்திருக்கிறார்.

இது ஓர் ஆய்வு தான், எலிகளின் நினைவுகளுக்கு கோர்டெக்ஸ் பகுதி நிச்சயம் வேண்டும் என்பது தெரிந்தது தான். ஆனால், மிகவும் முன்னதாகவே இது தேவைப்படுகிறது என்பது ஆச்சரியமளிக்கிறது. இது எம்முடைய உடல் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகின்ற அடிப்படை அறிவியல் தகவலாக முதன்மை பெறுகிறது.

'டிமென்சியா' உட்பட நினைவுகள் தொடர்பான சில நோய்களுக்கு புதிய வெளிச்சத்தை இந்த ஆய்வுகள் வழங்கலாம் என்று பேராசிரியர் 'டோனிகவா' கூறுகிறார்.

அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட சோதனை எலிகளால் நினைவுகளை உருவாக்க முடிகிறது என்றும், அவற்றை மீட்டெடுக்க முடியவில்லை என்றும் இந்தப் பேராசிரியரின் முன்னைய ஆய்வுச் செயற்பாடுகளுள் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இது எவ்வாறு நடைபெறுகிறது என்று அறிந்து கொள்வது மூளை தொடர்பான நோயாளிகளுக்கு பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
**தொடர்பு - 077 327 6502, 076 396 9720**

**தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O.), தொழில்நுட்ப பயிலுனர் (Traine) தேவை. **தொடர்பு -**
**077 592 5371, 076 316 5730**

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
**01. மேசன்**
**02. உதவியாளர்**
(காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 வரை)
திங்கள் தொடக்கம் சனி வரை
**தொடர்பு - 077 813 9761**

**காணி வீடு விற்பனைக்கு**

மல்லாகம் பழம்பிள்ளையார் பின் வீதியில் 6 பரப்புக்காணி, வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு - 076 357 6593, 077 694 0767**

**வீடு விற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு பின்புறமாக ஆறு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 9111685, 076 8510 459**

**மரண அறிவித்தல்**

**செல்லையா இராசநாயகம்**



மட்டக்களப்பு பெரிய கல்லாறினைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசநாயகம் நேற்று (01.12.2017) இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**பா. சிவகுமார் (குமார்)**
**மினிபஸ் 62 - 6686**
**(077 960 3023)**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 622 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 01.12.2017
வெற்றி இலக்கங்கள்
32 47 55 62 F
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,135,112/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 222
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 01.12.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,788,048/-
N 11 26 34 41
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 93
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.12.01
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,389,690/-
வெற்றி இலக்கங்கள்
21 42 49 61 B
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 01.12.2017 | வெற்றி வாரம் 2218 | வர்ணம் சிவப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள்
20 21 37 51
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,963,224/=
2017.12.03ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
27
.
06
.
2000



மறைவு
29
.
11
.
2017

செல்வன்

### அடம்ஸ் நீல்சன் லியனாடோ அடம்ஸ் அலோசியஸ்

(லியான்)

உடுவில் கிழக்கு, உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அடம்ஸ் நீல்சன் லியனாடோ அடம்ஸ் அலோசியஸ் (லியான்) (உயர்தர உயிரியல் பிரிவு மாணவன், ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, மானிப்பாய்) கடந்த (29.11.2017) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் அடம்ஸ் நீல்சன் தனுஜா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கஷினோவின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மல்வம்சேமக்காலையில்நல்லடக்கம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உதயசூரியன் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி செல்லம்மா அப்பாசாமி



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், புத்தூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா அப்பாசாமி (29.11.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னத்தங்கம் தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற அப்பாசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற அருணாசலம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் நாகேஸ்வரன், ஞானேஸ்வரன் (துர்க்கா மோட்டோர்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் பூரனேஸ்வரி, சற்குணதேவி ஆகியோரின் அன்பு மாமியும் சுதர்சன் - சுகன்யா, வாஹினி – வேல்மகிபன், அர்சிகா- நிமல் (சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை, வவுனியா வடக்கு), அர்யுன் (துர்க்கா மோட்டோர்ஸ்), கீர்த்தனன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் திசான், அஸ்வின், நவீன், சுபாங்கி, சுபானு ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2017) சனிக்கிழமை இல. 50, கதிரமலை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**அ. நாகேஸ்வரன் (மகன்),**
**அ. ஞானேஸ்வரன் (மகன்),**
**(துர்க்கா மோட்டோர்ஸ் (ஞானம்)**

**இல. 50, கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு,**
**சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

### நாகேசு தில்லைவாசகர்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு தில்லைவாசகர் நேற்று (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் மனோன்மணி (வவுனியா) காலஞ்சென்ற தவராசா மற்றும் தங்கராசா ஆகியோரின் சகோதரரும் கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரி, சரோஜா, சிவகுமார், செல்வகுமார் ஆகியோரின் மைத்துனரும் ரமேஷ்கண்ணா, தவதர்சினி, பிரியதர்ஷனி, ராஜீவ்குமார், ஜெயதாரணி ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜிமிலா, பாஸ்கரன், சிவாநுஷன், தயாரூபி ஆகியோரின் மாமனாரும் அபிலாஸ் ,கிருஸ்ணவி, டனுஜன், கிருசாளினி, சப்தனா, சங்கீத், ஹரிவர்மன், யானுகேசிகன், ஜெரூஸா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புதிய செம்மணி வீதி,**
**நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
17
.
02
.
1946



மறைவு
01
.
12
.
2017

### கணபதிப்பிள்ளை நமசிவாயம்

*(உரிமையாளர், கிருஸ்ணன் ஸ்ரோர்ஸ், கொற்றாவத்தை)*

கொற்றாவத்தை கலையருவியைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை சரஸ்வதி அகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நமசிவாயம் நேற்று (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் நேசமலரின் அன்புக்கணவரும் மரகதம், பாலகிருஸ்ணன் (குமுதினி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அகிலன் (பதவி நிலை உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), அன்பழகன் (கனடா), பரணீதரன் (பிரதேசவைத்தியசாலை, வல்வெட்டித்துறை), அன்பரசி, கலையரசி ஆகியோரின் அன்புத் தந்தையும் நடேசன் (எழுத்தாளர் - தெணியான்), தவமலர், பரராசசிங்கம் (Rtd. ISA Instructor - NAITA), மல்லிகாதேவி செல்வக்கதிரமலை, சகுந்தலா - பாலசுப்பிரமணியம் (கனடா), ஜெயந்தி ரகுநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஜானகி (ஆசிரியை), கௌசல்யா (கனடா), ஜெகதாம்பிகை (ஆசிரியை), திலீப்குமார், லலீராஜ், உமாஞானசீலன் (ஆசிரியை), ஆதவன் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் - மருதங்கேணி பிரதேச செயலகம்), துஸ்யந்தன் (ஆசிரியர்), ஜெ.கல்பனா, மு.பகீரதி, த.சிந்துயா, கோ.தமிழினி ஆகியோரின் மாமனாரும் குமுதினிறஞ்சித் (ஆசிரியை), ஜாவன்யா ஈஸ்வரன் (கொலன்ட்), கோபி, சந்திரிகா (யாழ். பல்கலைக்கழகம்), திருபரன், வினோதா, கங்கா, திலக், மேகலா, தினேஷ், தசரத், சாரங்கன், சாருகேசி, ரிசிகேசன் ஆகியோரின் பெரிய தந்தையும் சகாப்தன், கானவர்சினி, ஆத்மீகன், சாருகேசினி, அபிலாஸ், கீர்த்திகன், பவதாரணி, அட்சயா, அகிம்சன், சதுரிசிகா, அக்சயன், மேனயா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2017) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 137 1684, 077 605 6253**

# காளான் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்?



காளானில் குறைந்த அளவு சோடியம் மற்றும் அதிகளவு பொட்டாசியம் சத்துக்கள் உள்ளதால் குருதி அழுத்தம் மற்றும் குருதியில் உள்ள கொழுப்பைக் கட்டுப்படுத்தி, இதயத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

காளானில் உள்ள *'Beta - Glucan'* எனும் பாலிசாக்கரைடு, பல வகை நோய்களைத் தடுத்து ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது.

காளானில் உள்ள *Lentysine, Eeritadenin* எனும் வேதிப்பொருள்கள், குருதியில் கலந்துள்ள தீங்கு விளைவிக்கும் கொழுப்பைக் குறைத்து, குருதியைச் சுத்தமாக்கி, இதயத்தின் செயற்பாட்டை சீராக்குகிறது.

காளானில் ஆன்டிஆக்ஸிடென்டுகள் அதிகம் உள்ளதால், நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து, புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

காளான் சாப்பிடுவதால், ஆஸ்துமா போன்ற சுவாசக் கோளாறு குறைபாடுகளை தடுப்பதுடன், உடலில் ஏற்படும் காயங்களை எளிதில் குணமாக்க உதவுகிறது.

நார்ச்சத்து காளானில் அதிகமாக உள்ளது. எனவே காளானை தினமும் உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும்.

காளானை முட்டைகோஸ், பஜ்சைப்பட்டாணி என்பவற்றோடு சூப் வைத்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், வயிற்றுப்புண், ஆசனவாய்ப் புண் போன்ற பிச்சினைகள் குணமாகும்.

கீழ்வாதப் பிரச்சினை உள்ளவர்கள் காளானை உணவில் சேர்த்துச் சாப்பிடக் கூடாது.

காளான் உணவுகளை நன்றாக வேகவைத்து சாப்பிட வேண்டும். பச்சையாகச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

காளான் தாய்ப்பாலை வற்ற வைக்கும் தன்மையைக் கொண்டுள்ளதால், பாலூட்டும் தாய்மார்கள் காளான் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## தனிநாட்டுக்....

துக்கள் அரசைப் பலமடையச் செய்யுமே தவிர எம்முடன் சுமுகமாக நடந்து கொள்ள உதவாது" என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது தனிநாட்டை உருவாக்க நாம் செய்யும் சதி என்று அரசு பிற நாடுகளின் இராஜதந்திரிகளுக்குக் கூறுகின்றது. பன்னாட்டுச் சமூகத்தின் கருத்துக்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகவே இருக்கின்றன.

தனிநாடு என்பது பிற வல்லரசுகளின் தயவுடனே இயற்றப்பட முடியும். நாம் கேட்டுப் பெறக் கூடியதல்ல. அடித்துப் பறிக்கமுடியும் என்ற கருத்தும் அண்மையில் மௌனிக்கப்பட்டுவிட்டது. தனித்து நாம் வாழ முற்பட்டால் பிற நாடுகளின் சார்பானவர்களாகவே மாற வேண்டும். மாறாத பகைமையை சிங்கள சகோதரர்களுடன் பாராட்ட வேண்டிய நிலை ஏற்படும்.

தனிநாட்டுக் கோரிக்கையால் நாட்டு மக்களிடையே சுமுக உறவு ஏற்பட முடியாது என்பதை எம்மவர்கள் ஆய்ந்துணர வேண்டும். எமது மக்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு எமது நிலையறியாது பேசுவதை நிறுத்த வேண்டும். இங்கு இன ஒற்றுமை வளர இடம்கொடுக்க வேண்டும்" என்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சரை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தச் சந்திப்பில் வடக்கு முதலமைச்சர், "ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி அதிகாரப் பகிர்வையே தமிழ் மக்கள் கோருகின்றனர். அதை தமிழர்களுக்கு வழங்கினால் தனிநாடாகப் பிரிந்து சென்று விடுவார்களோ என்ற ஐயப்பாடு தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் உண்டு. கூட்டாட்சித் தீர்வை வழங்காது விட்டால் தனிநாடு கோரும் அவசியம் தமிழர்களுக்கு ஏற்படும்." என்று ஆஸ்திரேலியத் தூதுவரிடம் கூறியிருந்தார். (ற-5)

## வடக்கு - கிழக்குப்....

முதலமைச்சர் வாராந்தம் வெளியிடும் கேள்வி பதில் வடிவ அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும் என்ற உங்கள் கோரிக்கை சிங்கள, முஸ்லிம் தலைவர்களுக்கு எரிச்சல் ஊட்டுகின்றது என்று கூறப்படுகின்றதே. அதை விடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற முடியுமா?" என்ற கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினையின் அடிப்படைக் காரணம் சிங்கள அரசியல்வாதிகள் அதிகாரங்களைத் தம் வசப்படுத்தி ஏனைய இனங்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்தமையே. இந்த நாடு பல் மொழி, பல்லின, பலமதங்கள் உள்ள நாடு என்பதை ஏற்க மறுத்து சிங்கள பௌத்த நாடாக இந்த நாட்டை மாற்ற எத்தனங்கள் எடுக்கப்பட்டன. சரித்திரமே திரிபுபடுத்தி வெளியிடப்பட்டது. அதனாலேயே இனப் பிரச்சினை கூர்மை அடைந்தது.

**தமிழர் தொகை குறைகின்றது**

எமது தொகை குறைகின்றது. ஏனையோரின் தொகை கூடுகின்றது. தமிழ் மக்களுடைய சனப் பெருக்க வீதமே சகல இனங்களுக்குள்ளும் ஆகக்குறைந்தது என்று கூறப்படுகின்றது. தமிழ் மக்களின் தொகை படிப்படியாக வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் வடக்கு - கிழக்கில் சேர்ந்து வாழ வேண்டுமா பிரிந்து வாழ வேண்டுமா?. பிரிந்து வாழ்ந்தால் எமது நிலை சீர் கெட்டுவிடும். பறங்கியர்களுக்கு இந்த நாட்டில் ஏற்பட்ட கதியே இன்னும் 25 வருடங்களில் எமக்கும் ஏற்படும். எம்மவர் வெளியேறி விடுவார்கள். மிகுதி இருப்பவர்களைப் பெரும்பான்மைச் சமூகம் உட்கிரகித்துக் கொள்ளும். வடக்கு கிழக்கு இணைப்பு ஒன்றே எமக்குப் பலத்தை அளிக்கும். எமது மக்கள் தொகை அருகி வருவதைத் தடுக்கும்.

**முஸ்லிம்களின்
பங்களிப்புத் தேவை**

வடக்கு கிழக்கு இணைப்பு தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் உருவாக முடியாது. தமிழ்ப் பேசும் வடக்கு - கிழக்கு அலகில் முஸ்லிம் மக்களுக்கு சமச்சீரில்லாத தனி அலகை உருவாக்குவதன் மூலமே வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமாகும். இந்தியாவின் பங்கு அதில் இனி இருக்காது என்பது தெளிவு. 18 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு இணைந்திருந்ததெனில் அது இந்தியாவின் உள்ளீடலால்தான்.

இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கு இணைவு அவசியம் என்பது எமது மக்கள் யாவருக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரங்கள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே நாம் தற்போது உள்ளோம். வடக்கு கிழக்கு இணைப்பு, சுயாட்சி, கூட்டாட்சி போன்ற கருத்துக்கள் எமது பாதுகாப்புக்கான கேடயங்கள். அவற்றை நாம் கைவிட்டால் எம்மை அடிபணிய வைப்பதும் அடியற்றுப் போக வைப்பதும் இலகுவாகிவிடும். அதை எமது மக்கள் வரவேற்கின்றார்களா?

**இணைப்பில்லாது
தீர்வு இல்லை**

முஸ்லிம் தலைவர்கள் வடக்கு - கிழக்குக்கு வெளியே இருந்து வரும்போது அவர்களின் தேர்தல் தொகுதியில் வடக்கு - கிழக்கு இணைப்பு எடுபடாது. அதனால் அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கவே செய்வார்கள். முஸ்லிம் தனி அலகொன்றை உறுதி செய்த பின்னர் வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய கருத்தறியும் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கும் தனித்துவத்தைப் பேணுவதற்கும் நாம் எடுக்கும் நடவடிக்கைகளில் தெற்கில் உள்ள சிங்கள மக்களை உள்ளடக்க வேண்டும் என்று அரசில் உள்ள சிலர் எதிர்பார்ப்பது நியாயமான ஒரு கோரிக்கை அன்று. எமது வருங்காலத்தை நாம் தீர்மானிக்க எமக்கு உரித்து அளிக்கப்பட வேண்டும்.

சிலருக்கு எரிச்சலை ஊட்டுகின்றதோ இல்லையோ எமது பாதுகாப்புக்கும் நாம் தொடர்ந்து இங்கு வாழ்வதற்கும் ஏற்புடைத்தான ஒரு மார்க்கத்தை நாம் வலியுறுத்துவது எந்த விதத்திலும் பிழையாகாது. வடக்கு - கிழக்கு இணைப்பில்லா இனப்பிரச்சினைத் தீர்வொன்றை நாம் நாடினால் எமது இனம் அழிய அது அடிகோலும் என்பதே உண்மை. என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (ற-5)

## திடீரென...

தீ பரவியதை அடுத்து தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. தீணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். பொதுமக்களின் உதவியுடன் வர்த்தக நிலையத்தில் இருந்த பொருள்கள் அவசர அவசரமாக அகற்றப்பட்டன. எரிவாயு சிலிண்டர்கள் வைக்கப்பட்டிருந்த பகுதிக்குத் தீ பரவாத வண்ணம் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ ஒருவாறு கட்டுக்குள் வந்தது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. வர்த்தக நிலையத்தில் கட்டடப் பொருள்கள், வர்ணங்கள், ரின்னர் போன்றவை இருந்ததால் தீ அசாத்திய வேகத்தில் பரவியது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தால் மன்னார் வீதியூடான போக்குவரத்து ஒரு மணி நேரத்துக்கு மேலாகத் தடுக்கப்பட்டு மாற்று வீதிகள் பயன்படுத்தப்பட்டன.

விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-21)

## இடைக்கால...

வின் கூட்டத்தில் இன்று விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் நாடாளுமன்றில் நடத்தப்பட்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இன்று இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த விவாதம் பிறிதொரு தினத்தில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டாலும், அது எப்போது என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற-5,31)

## கூட்டமைப்பின்...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தடை முழுமையாக நீக்கப்பட்டுள்ள நிலையில் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுவது உறுதியாகியுள்ளது.

93 உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரையும், எஞ்சிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரையும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வேட்பு மனுத் தாக்கலுக்கு மிகக் குறுகிய நாள்களே உள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் முடிவெடுக்கப்படாத நிலையில் நாளை அவை கூடுகின்றன. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கட்சிகளுக்கு எத்தனை வேட்பாளர்களை ஒதுக்குவது?, பெண் பிரதிநிதித்துவம் என்பன போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளன என்று அறிய முடிகின்றது. (ற-5)

# பெண்ணுக்குப் பாலியல் தொந்தரவு இராணுவச் சிப்பாய் நேற்றுக் கைது

கிளிநொச்சி, டிசெ.2

கிளிநொச்சி முழங்காவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் நேற்றுக் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த பெண்ணுக்கு அதே பேருந்தில் பயணம் செய்த 35 வயதுடைய இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது அந்தரங்க உறுப்பைக் காட்டினார் என அந்தப் பெண் நாச்சிக்குடாப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு பதிவு செய்திருந்தார். முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்தபொலிஸார் அந்த இராணுவச் சிப்பாயைக் கைது செய்தனர் எனவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படு கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

(21,37)

## வாள்வெட்டுக்குழு...

பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்றுமுன்தினம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களும் எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ற-21)

## 11 பேர்....

ளது. பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, கேகாலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கிடையில் பலத்த மழை காரணமாக சில ஆறுகளின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது. நில்வள கங்கை, களுகங்கை, கிங் கங்கைகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளில் முப்படையினரும், அரச அதிகாரிகளும் ஈடுபட்டுவருகின்றனர். அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு விமானப்படையைச் சேர்ந்த 24 குழுக்கள் இயங்குகின்றன. பெல் 212 ரக உலங்கு வானூர்திகள் நான்கு மீட்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. மேலும் கடற்றொழிலுக்குச் சென்று காணாமற்போயுள்ள மீனவர்களைத் தேடும் பணிகளுக்கு கடற்படையைச் சேர்ந்த 30 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன. ஒகி புயலால் மரங்கள், மின்கம்பங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் முறிந்து வீழ்ந்ததால் பொருளாதார இழப்புகளும் ஏற்பட்டன.

இன்றைய தினமும் நாட்டில் மழைபெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மாகாணத்தில் 39 ஆயிரத்து 440 பேரும், தென் மாகாணத்தில் 14 ஆயிரத்து 51 பேரும், ஊவா மாகாணத்தில் 4 ஆயிரத்து 825 பேரும், மத்திய மாகாணத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். தென் மாகாணத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பணம் வழங்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. (ற-5)

## பொதுச்சின்னத்துக்கு...

களமிறங்க பொதுச் சின்னம் ஒன்றை எதிர்பார்த்துள்ளன. இது தொடர்பில் கடந்த புதன்கிழமை அந்தக் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சென்று பேசியிருந்தன.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் பொதுச் சின்னம் வழங்க முடியாது என்று தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் சின்னத்திலேயே உள்ளூராட்சித் தேர்தலை சந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. (ற-5,101)

## ஜனநாயகப்....

அந்தப் பட்டியலைக் கூட்டமைப்பின் தலைமைப்பீடமும் ஏற்றுக்கொண்டுள்ளது என அறிய முடிகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுகின்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பில் இணைந்து களமிறங்கும் என்று தெரியவருகின்றது. இவற்றை விட ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் வரதர் அணி இணையலாம் என்று கூறப்படுகின்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. வரதர் அணி விரைவில் அவர்களது வேட்பாளர்கள் பட்டியலைச் சமர்ப்பிக்கும் என்று அறிய முடிகின்றது. (ற-5)

## வடக்கு - கிழக்குக்கான...

யான தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்று வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.பிரேம்லால் உதயனுக்குத் தெரிவித்தார்.

வளிமண்டலக் குழப்பம் காரணமாக இலங்கையின் பல பாகங்கள் கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்டன. காற்றழுத்தத் தாழ்வு நிலை புயலாக மாறியதில் இலங்கையின் பல பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பொழிந்தது. 'ஒகி' என்று பெயரிடப்பட்ட அந்தப் புயல் இலங்கையை விட்டு விலகிச் சென்றுள்ள நிலையில் தற்போது மீண்டும் ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலை வங்கக் கடலில் உருவாகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாழமுக்கம் இலங்கை மற்றும் இ[illegible] யாவைத் தாக்கக் கூடிய புயலாக மாற்றம[illegible] யும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

"அதன்போக்கு மாற்றங்கள் தொடர்பாக அ[illegible] தபின்னரே உறுதியான தகவலைத் தெரிவி[illegible] முடியும்." என்று வளிமண்டலவியல் திணை[illegible] களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

(ற-



## 1,150 கோடி ரூபா இழப்பீடு வேண்டும் இந்தியாவிடம் கேட்கிறது பாகிஸ்தான்

இந்தியாவுடனான இருதரப்புத் தொடர் பாதிக்கப்பட்ட விடயத்தில் தமக்கு சுமார் ஆயிரத்து 150 கோடி ரூபா இழப்பீடாக வழங்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா - பாகிஸ்தானுடன் இரு தரப்புத் தொடரில் விளையாட மறுத்து வருகிறது. 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தான் சென்று விளையாடிய போது இலங்கை அணி வீரர்கள் பயணித்த பேருந்து மீது ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இது இந்தியாவுக்கு மேலும் சாதகமாக அமைய கிரிக்கெட்டின் போர்களில் ஒன்றான இந்தியா - பாகிஸ்தான் இரு தரப்புத் தொடர் கைவிடப்பட்டது. கடந்த வருடம் இருநாட்டின் கிரிக்கெட் சபைகளும் மீண்டும் தொடரை நடத்திட எத்தனித்தன. எனினும் எல்லைகளில் நிலவிய பதற்றமான சூழ்நிலை காரணமாக தொடரை நடத்துவதில் இருந்து இந்தியா பின் வாங்கியது. ஆனால் தம்முடன் இந்தியா கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. இந்தியா தொடரில் இருந்து பின்வாங்கியதால் தமக்கு கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று பல முறை கருத்துத் தெரிவித்துவந்த பாகிஸ்தான் இலங்கை மதிப்பில் சுமார் ஆயிரத்து 150 கோடி ரூபா தரவேண்டும் என்று கேட்டு பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறையிட்டுள்ளது. (ம)



# மகாதேவா ஆச்சிரமத்துக்கு கிடைத்தது தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 2

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய ரீதியிலான கராத்தே தொடரில், மகாதேவா ஆச்சிரமத்துக்கு தங்கம், வெள்ளி என்று இரண்டு பதக்கங்கள் கிடைத்தன.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான 50 கிலோ எடைப்பிரிவு குமித்தே போட்டியில் கேசாளினி தங்கப் பதக்கமும், 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான 50-60 கிலோவுக்கு இடைப்பட்ட எடைப்பிரிவு குமித்தே போட்டியில் லக்குனா வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 2

வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் அணியும், காலை 9.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மதார் 'பி' அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணியும், காலை 10.20 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து அல் இக்பால் அணியும், காலை 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார் அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணியும், பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் 786 'பி' அணியை எதிர்த்து யுனிபைட் அணியும், பிற்பகல் 2.20 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து அல்மதார் 'ஏ' அணியும், பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் அணியை எதிர்த்து லயன்ஸ் அணியும் மோதவுள்ளன. (ம-23)

20/-
இந்த வாரம்
மீண்டும் வெடிக்கும் ஆயுதப்போர்
குறையும் விலை எகிறும் விற்பனை நன்மை யாருக்கு ?
அடக்க முடியாத எழுச்சி
செருப்புக்கு அளவாக காலை வெட்டுவதா ?
பெண்ணால் வீழ்ந்த முகாபே
ஈழக்கிராமங்களின் மண் வாசனை - காங்கேசன்துறை
அசலை அசத்தும் நகல்
மற்றும் பல்சுவை அம்சங்களுடன்





சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :- 021 492 7570

# இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

கோக்லி தலைமையிலான இந்திய அணி, எந்த அணிக்கெதிராகவும் எந்த ஆடுகளத்திலும் வைத்து வெற்றியைப் பதிவுசெய்யும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ்.
"தென்னாபிரிக்கா என்றாலும் சரி ஆஸ்திரேலியா என்றாலும் சரி இந்திய அணியின் தலைவர், அணியை எப்படி இயக்க வேண்டும் என்பதைப் புரிந்து வைத்திருக்கிறார். அணிக்கு இருக்கும் ஒரே பிரச்சினை, விளையாடும் பதினொருவரில் எவரைக் களமிறக்க வேண்டும் என்பதுதான். சிறப்பான வலிமையைப் பெற்றுள்ளோம். எந்தவொரு அணியையும் வெற்றி பெற முடியும் என்ற நிலையை இந்திய அணி அடைந்துள்ளதாக நினைக்கிறேன்" என கபில் தேவ் தெரிவித்தார். (ம)





# ஒன்றரை செசனில் வீழ்ந்தது தீவுகள்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெறும் ஒன்றரை செசனில் மேற்கிந்தியத் தீவுகளின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. நியூசிலாந்து அணி பலமாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெலிங்டனில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்ப வீரர்களாக பிரீத்வைட் மற்றும் பவல். சொல்லிக்கொள்ளும்படியான ஆரம்பம் அமைந்தது. 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிரீத்வைட். 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பவல். ஆரம்ப வீரர்கள் ஆட்டமிழந்த பின்னர் அடுத்தடுத்து இலக்குச் சரிவை எதிர்கொண்டது மேற்கிந்தியத் தீவுகள். கோப், அம்பிரீஸ் இருவரும் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தனர். மத்திய வரிசையில் டவ்ரிச் பெற்ற 18 ஓட்டங்களே அதிகபட்சம். முடிவில் 134 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள்.
பந்துவீச்சில் வாக்நெர் 7 இலக்குகளையும், போல்ட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
நியூசிலாந்துக்கு ஆரம்ப வீரர்களாக ராவல் மற்றும் லாதம். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இணைப்பாட்டம். 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். அணித்தலைவர் வில்லியம்சன் ஓர் ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றுள்ளது நியூசிலாந்து. ராவல் 29 ஓட்டங்களுடனும், ரெய்லர் 12 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# அடிலெய்டில் இன்று ஆஷஸ் ஆட்டம்

ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் அடிலெய்டில் இன்று நடைபெறவுள்ளது. ஆஸ்திரேலியாவில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ள இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.
பிரிஸ்பெய்னில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் அடிலெய்டில் இன்று நடைபெறுகிறது. இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்று 1:1 என்று சமன்செய்ய இங்கிலாந்து முனைப்புக் காட்டும் என்று இங்கிலாந்தின் தலைவர் ரூட் தெரிவித்துள்ள நிலையில் அந்த அணியின் பெறுபேறு தொடர்பில் இன்று பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)




# பிலிப் ஹியூக்ஸ் இறந்தபோது ஓய்வு பெற்றிருக்க வேண்டும்

## வருந்துகிறார் கிளார்க்

"நான் ஓய்வு பெற்றதைவிட ஓராண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும்" என ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.
பிலிப் ஹியூக்ஸ் இறந்த மூன்றாவது ஆண்டு நினைவலைகள், கடந்த 27ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. இது தொடர்பில் உரையாற்றுகையிலேயே கிளார்க் இவ்வாறு தெரிவித்தார்.
"2014ஆம் ஆண்டு பிலிப் ஹியூக்ஸ் இறந்த பின்னர் சுமார் ஒரு வருடம் நான் விளையாடினேன். இந்த ஒரு வருட காலப்பகுதியில் நான் விளையாடியிருக்கக் கூடாது. முன்னதாகவே எனது ஓய்வு முடிவை நான் அறிவித்திருக்க வேண்டும். ஏனெனில் ஹியூக்ஸின் நினைவுகளைச் சுமந்துகொண்டு விளையாடுவதற்கு நான் சிரமப்பட்டேன்" என கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)

# கடுமையான நெருக்கடியில் இலங்கை அணி

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகும் நிலையில், இன்றைய ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் இலங்கை அணி களமிறங்குகிறது. இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இதன்படி முதலிரு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் 1:0 என்ற அடிப்படையில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் டெல்லியில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரைக் குறைந்தபட்சம் சமன்செய்ய முடியும் என்ற இக்கட்டான நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்டத்தில் களமிறங்கும் இந்திய அணியில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் இலங்கை அணியில் மிகப்பெரிய மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. இதன்படி நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் கேரத் இன்றைய ஆட்டத்தில் விளையாடமாட்டார். (ம)




தற்போதைய சுழல்பந்து வீச்சாளர்களிடத்தில்

# சோதனை செய்தால் பலர் தோல்வியடைவர்

## அஜ்மலின் கண்டுபிடிப்பு இது


"தற்போதுள்ள சுழல்பந்து வீச்சாளர்களிடத்தில், அவர்களின் பந்துவீச்சு விதிமுறைகளுக்கு உட்பட்டு உள்ளதா என்று சோதனை செய்தால் பலர் தமது சோதனையில் தோல்வியடைவார்கள்" என்று தெரிவித்தார் பாகிஸ்தானின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் அஜ்மல்.
பன்னாட்டு அரங்கில் இருந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஓய்வை அறிவித்துச் சென்றார் அஜ்மல். தான் விளையாடும் காலத்தில், பன்னாட்டு கிரிக்கெட் சபையால் அனுமதிக்கப்பட்ட பந்துவீச்சு முறைமைக்கு முரணாக உள்ளது என்று தெரிவித்து இரண்டு தடவைகள் அஜ்மல் தடை செய்யப்பட்டார். பின்னர் அணியில் இருந்து நீக்கப்பட்ட அவர், களத்துக்குத் திரும்பாமலேயே தனது ஓய்வு முடிவை அறிவித்தார். இதையடுத்தே அஜ்மல் இவ்வாறு தெரிவித்தார்.



"பன்னாட்டு கிரிக்கெட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைக்கு அமைவாக இன்றுள்ள சுழல்பந்து வீச்சாளர்கள் பந்துவீசுகின்றனரா என்று சோதித்துப் பார்த்தால், 90 வீதமானவர்களின் பந்துவீச்சு தோல்வியிலேயே முடிவடையும்" என அஜ்மல் மேலும் தெரிவித்தார். (ம)

# திரிமன்னே நீக்கம்; தனஞ்சய களமிறங்க வாய்ப்பு

இந்திய அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் இருந்து திரிமன்னே நீக்கப்பட்டுள்ளார்.




இந்தியாவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே இலங்கை அணியால் தொடரை குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்க முடியும் என்ற நெருக்கடி நிலை உள்ளது. இந்த நிலையில் அதிரடி மாற்றமாக விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இருந்து திரிமன்னே நீக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் திரிமன்னே முறையே 51, 7, 9, 23 ஓட்டங்களையே பெற்றிருந்தார். அவருக்கு எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே இவ்வாறான அதிரடி மாற்றம் மற்கொள்ளப்பட்டுள்ளது. திரிமன்னே வெளியேற்றப்பட்டால் தனஞ்சய பதில் வீரராகக் களமிறங்குவார் என்றும் தெரியவருகிறது. (ம)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

அழகுக்கலை - Diploma
விசேட நிபுணர்களின் பயிற்றுவிப்பில்
Make Up
Cookery
Cake - Icing
Tailoring
Week days - 3months Fulltime
35,000/= மட்டுமே
Weedend Days - 4 Months Full time
10.12.2017 இற்கு முதல் பதிவுகளை மேற்கொள்ளவும்
ஆரம்பம்
16.12.2017 - 9.00 am Weekends
18.12.2017 - 9.00 am Weekdays
தொடர்புகளுக்கு :
ELAS
076 697 3040
021 224 3660
சுன்னாகம்.
(DFCC Bank மேல்மாடி)

# தெ.ஆபிரிக்கத் தொடர் மிகப்பெரும் சோதனை

## ரவி சாஸ்திரி தெரிவிப்பு




"தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் இந்திய அணியைப் பொறுத்தவை மிகப்பெரும் சோதனையான தொடர்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.


இலங்கைக்கு எதிராக தற்போது விளையாடி வருகிறது இந்திய அணி. இந்தத் தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி அடுத்ததாக தென்னாபிரிக்கா வுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதன்படி இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரவிசாஸ்திரி இவ்வாறு தெரிவித்தார்.

"தென்னாபிரிக்கத் தொடர் இந்திய வீரர்கள் தங்களுடைய திறமைகளை நிரூபிக்க ஒரு வாய்ப்பாகும். வெளிநாட்டு மண்ணில் வெற்றிபெற நிலைத்தன்மை முக்கியமானது. இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் வெற்றி பெறும். தற்போதைய இந்திய அணியில் உள்ள வீரர்களால் சிறப்பாக செயற்பட முடியாது என்பதற்கான எந்த காரணத்தையும் நான் பார்க்கவில்லை" என ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்

### சிங்காரவேலு யோகநாதன்

(உரிமையாளர் - Ogesta, முன்னாள் உரிமையாளர் - மூர்த்தி உணவகம்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கில்னர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரவேலு, யோகநாதன் (யோகண்ண) நேற்று (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு - காமாட்சி தம்பதியரின் அன்பு ம்கனும் முருகையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஜீகனின் அன்புத் தந்தையும் ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீதரட்ணம் (ஜேர்மன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஆனந்தராசா (கனடா), காலஞ்சென்றகலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தங்கவேல் பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் விஜயவனிதா, ஜெயந்தி (கனடா), காளிதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரன், நகுலேஸ்வரன், மகேஸ்வரன், கெங்காதரன் (ஜேர்மன்), விஜயலஷ்சுமி, பரந்தாமன் (கனடா), அனந்தலஷ்சுமி, இராசலஷ்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் விமலராணி, புஸ்பவதி, தேவிகாராணி (ஜேர்மன்), காலஞ்சென்ற சிவானந்தன் தனபாலினி (கனடா), மனோகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் யோகேந்திரா, கஜேந்திரா, ஜெனனி, ரஞ்சித், மிதிலா, சதீஷன், பிரசாத், காயத்திரி, கஸ்தூரி, கார்த்திகன், சுபாங்கி, அனுராதா, உமாசுதன், பிரதாபன், துவாரகன், மாயவன், பிரசன்னா, பைரவி ஆகியோரின் மாமனும் சிறிலதன், வினோஜா, மேனகா, கார்த்திகேயன், துஷ்யந்தி, அமலன் ஆகியோரின் சித்தப்பாவும் விசாகன், முகிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**185/1, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம். 0212216742**

தகவல்:
குடும்பத்தினர்.

# வென்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன்

தோட்டக்காணி விற்பனைக்கு
அச்சுவேலி சங்கானை றோட்டில் 15 பரப்புத் தோட்டக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவும்.
077 312 7498/ 077 943 9431

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது, உத்தராடம், 4ஆம் பாதம், 32 கிரக பாவமுள்ள (Quantity Surveyor) மணமகனுக்கு அழகிய படித்த மணமகள் தேவை.
தொடர்பு - 075 946 3535




பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில், 2:0 என்ற கோல் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து ட்ரோய்ஸ் மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது. நெய்மர், கவானி ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்தனர். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.